# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

11 AUG 1966
MADRAS



கூத்தாடும் பிள்ளையார் — திருமயிலாப்பூர்

மாலை 8] பராபவ ஆடி — ஆகஸ்ட் 1966 [மணி 11

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு



தமிழ்நாடு தெய்விகப் பேரவை மாநாட்டை யொட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், நமது தமிழக முதலமைச்சர் பெருந்தகை திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள் கலந்துகொண்டு, தொடங்கி வைத்தல்.

# தமிழ்நாடு தெய்விகப் பேரவை

(அமைப்புச் சிறப்பு மலர்)

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விம்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள் அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்த மாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. — ஆசிரியர்

AUG 1966

# திருக்கோயில்

## திங்கள் வெளியீடு

மாலை 8] பராபவ, ஆடி-ஆகஸ்ட் [மணி 11

## தமிழகச் சமய வரலாற்றில் ஒரு பெரும் சிறப்பு நிகழ்ச்சி !

**முன்னுரை:**

அண்மையில் சென்னை திருமயிலையில், ஜூன் மாதம் 12, 13 தேதிகளில் நடைபெற்ற **'தமிழ் நாடு தெய்விகப் பேரவை'** அமைப்புக் கூட்டம், தமிழகத்தின் சமய வரலாற்றிலேயே ஒரு பெரும் சிறப்பு வாய்ந்த தனிப் பெரும் நிகழ்ச்சியாகும்.

புத்தர் பெருமான் வீடுபேறு அடைந்ததற்குப் பிறகு, அவர் அருளிச் செய்த உபதேசங்கள் அடங்கிய **திரிபிடகம்** என்னும் பிரமாண நூலைத் தொகுத்து ஒழுங்கு செய்தற் பொருட்டு, **இராஜகிருகம் வேசாலி பாடலிபுத்திரம்** என்னும் மூன்று பெரும் நகரங்களில், மூவேறு காலங்களில் கூடிய பௌத்த சங்க மாநாடுகள் இந்திய தேச வரலாற்றில் எத்துணைச் சிறப்பாகப் போற்றப்படுகின்றனவோ, அத்துணை அளவுக்கு அண்மையில் நிகழ்ந்த 'தமிழ் நாடு தெய்விகப் பேரவை' அமைப்புக் கூட்டமும் சிறப்புடையதாகும் எனக் கூறலாம்.

பேரவையின் அமைப்புக் கூட்டம், முன்னரே ஒரு முறை சென்னையில் பிப்ரவரித் திங்களில் கூடி, தமிழ் நாட்டிலுள்ள இந்து சமயச் சார்பான திருமடங்கள் பலவும் ஒன்று சேர்ந்து, சமயப் பிரசாரத்திற்கும் வளர்ச்சிக்கும் திட்டங்கள் வகுத்து ஆக்கப் பணிகள் புரிதல் வேண்டுமென முடிவு செய்திருந்தது. அதனையொட்டி இரண்டாம் முறையாக நடைபெற்ற இக்கூட்டத்தில் 'தமிழ் நாடு தெய்விகப் பேரவை' யின் அமைப்பு விதிகள் ஆராய்ந்து முடிவு செய்யப் பெற்றன.

**திருமடங்களின் தலைவர்கள் :**

பேரவையின் கூட்டம் சென்னை திருமயிலைக் **கபாலீசுவரர்** கோயிற் சார்பில் கட்டப்பெறும் கலியாண மண்டபத்தில், 12—6—1966 ஞாயிறு மாலை 6 மணிக்குத் தொடங்கியது, அதற்கு :—

1. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
2. தருமபுர ஆதீனம்
3. மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனம்
4. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
5. மயிலம் பொம்மபுர ஆதீனம்
6. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்

7. காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம்
8. திருவண்ணுமலை ஈசான்ய மடம்
9. கோவை சிரவணபுரம் கௌமார மடாலயம்
10. பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் மடம்

ஆகிய திருமடங்களின் தலைவர்கள் பலரும் எழுந்தருளியிருந்தனர்.

**திருவாவடுதுறை ஆதீனம், திருக்குறுங்குடி மடம், உடுப்பி வியாசராய மடம், நஞ்சன்கூடு ராகவேந்திர சுவாமிகள் மடம்** ஆகியவை, பேரவைக்கு வாழ்த்துச் செய்தியும், பிரதிநிதிகளும் அனுப்பியிருந்தன.

"பெருமையால் தம்மை ஒப்பார்
பெருந்தவ ஒழுக்கம் சான்ருர்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்ருர்
அன்பிஞல் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்ருர்
இவர்புகழ்க்கு எல்லை யுண்டோ!"

எனப் பெரியபுராணப் பாடலைத் தழுவி, வியந்து போற்றி வணங்கத் தகுந்த திருமடங்களின் தலைவர்களாகிய மகா சந்நிதானங்கள் பலரும், ஒருங்கே கூடியிருந்த காட்சி,

"அருளெலாம் ஒருங்கே கண்டால்
யாவரே மகிழ மாட்டார்"

என்னும்படி பெருமகிழ்ச்சி யளிக்கும் சிறப்பினதாகத் திகழ்ந்தது.

### ஆய்வுக் கூட்டம்:

கடவுள் வாழ்த்துக்குப் பின்னர்த் தொடக்கத்தில், முதல் மாநாட்டுக்குப் பிறகு நடைபெற்ற செய்திகளைக் கூறி, இனி மேற்கொண்டு செய்தற்குரிய செயல்களையும் தெரிவித்து, நமது அறநிலைய ஆணையர் **திரு மா. சே. சாரங்கபாணி முதலியார்**, பி.ஏ.,பி.எல்., அவர்கள் வரவேற்புரை கூறினுர்கள். பின்னர்ப் பேரவையின் அமைப்பு விதிகள் ஒவ்வொன்றையும் பற்றித் திருமடங்களின் தலைவர்கள் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தார்கள். சென்னை அரசின் முன்னுள் தலைமைச் செயலர் **திரு. எஸ். வெங்கடேஸ்வரன்**, ஐ.ஸி.எஸ்., அவர்களும், ஆணையர் அவர்களும் அவ்வப்பொழுது பல நடைமுறைகளையும் சட்ட நுணுக்கங்களையும் பற்றி, விளக்கிக் கூறியுதவி புரிந்தார்கள்.

"தவலரும் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி"

என **நாலடியார்** சொல்லுதற்கேற்ப, எல்லாத் திருமடங்களின் தலைவர்களும் "ஒருப்பட்ட சிந்தையினுர் உடனுறைவின் பயன் பெற்ருர்" எனப் பெரிய புராணம் பாடுதல்போல ஒருமனப்பட்ட உள்ளத்துடன், அன்பும் நேயமும் ஆர்வமும் அமைந்து பெருகும்படி அளவளாவி, பேரவையின் அமைப்பு விதிகளை ஆராய்ந்து முடிவு செய்த முறை, பெரிதும் வியப்பும் மகிழ்ச்சியும் விளைப்பதாயிருந்தது. அக்காட்சியானது பண்டைக் காலத்தில் பழம் பெரு முனிவர்கள் பலரும் ஒருங்கு கூடி **நைமிசாரண்யம்** என்னும் புனித தலத்தில் தத்துவ விசாரம் புரிந்து மகிழ்ந்த செய்தியை, நினைவூட்டும் பான்மையில் விளங்கியமை குறிப்பிடத் தக்கது. அவ்வாய்வுக் கூட்டம், இரவு 11 மணி வரையிலும் தொடர்ந்து நடந்து சிறப்புற முடிந்தது.

### பேரவைத் தலைவர் :

மறுநாள் காலை 10 மணிக்கு, மீண்டும் மகா சந்நிதானங்கள் பலரும் கூட்டத்திற்கு எழுந்தருளினர். முன்னுள் இரவு ஆராய்ந்து முடிவு செய்யப்பட்ட பேரவையின் அமைப்பு விதிகள், மீண்டும் ஒரு முறை அனைவர் முன்னிலையிலும் திரும்பப் படிக்கப் பெற்று, ஒப்புக் கொள்ளப் பெற்றது. பின்னர்ப் பேரவையின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய அமயம் போந்தது. அப்போது தருமபுர

ஆதீனம் கயிலைக் குருமணி **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்களே, பேரவையின் தலைவராகப் பதவி ஏற்றருளுதல் வேண்டும் என்று, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் **ஆசார்ய சுவாமிகள்** திருவுளப் பாங்கின்படியே, அனைவரும் ஒருமனமாக முடிவு செய்தருளினர். பேரவையின் தலைவர் அவர்களின் அரும் பெரும் தகுதிகளையும் செயற்றிறங்களையும் பற்றி, மற்ற மகா சந்நிதானங்கள் அனைவரும் புகழ்ந்து பாராட்டிப் பேசினர். பேரவைத் தலைவர் அவர்களும், அவற்றிற்குத் தக்கபடி மறுமொழி கூறி அனைவரையும் மகிழ்வித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் அக் கூட்டம் இனிது நிறைவேறியது.

**பொதுக்கூட்ட நிகழ்ச்சி :**

அன்று மாலை மயிலாப்பூர் **பி. எஸ், உயர்நிலைப் பள்ளியின்** விளையாட்டுத் திடல் வெளி, மிகச் சிறப்பாக விழாக் கோலம் பூண்டிருந்தது. நல்ல நிகழ்ச்சிக்கு அறிகுறியாக மக்கள் மனம் குளிரும்படி சிறிது மழையும் தூறி நின்றது. இனிய தென்றல் விசியது. மின்னொளி விளக்குகள் பல ஆங்காங்கே அழகுறப் பொருத்தப் பெற்றுப் பேரொளி பரப்பிப் பிறங்கின. அங்கே மிகச் சிறந்த முறையில் பெரிய விதானம் பரப்பி, மேடை அமைத்து, பல்லாயிரம் மக்கள் வந்து கூடியிருந்து மகிழும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அத் திருக் காவணத்தில் தான், தெய்விகப் பேரவையின் பொதுக் கூட்டம், குறித்த நேரத்தில் திருத்தமாக ஆறு மணிக்குத் தொடங்கப் பெற்றது.

> " பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
> மாமலை பயந்த காமரு மணியும்
> இடைபடச் சேய ஆயினும், தொடை புணர்ந்து
> அருவிலை நண்கலம் அமைக்குங் காலை,
> ஒருவழித் தோன்றி யாங்கு, என்றும்
> சான்றோர் சான்றோர் பாலர் ஆவர் "

எனப் **புறநானூறு** என்னும் சங்கத் தமிழ்ப் பனுவல் பாடுவதுபோல, விலையுயர்ந்து எழில் மிகுந்த ஓர் அரும் பெரும் அரதனமாலையை அமைப்பதற்கு, வெவ்வேறு இடங்களில் தோன்றிய பொன்னும் பவளமும் முத்தும் மணியும் ஒருங்கே வந்து ஒன்றாகச் சேர்வது போல, தெய்விகப் பேரவையின் அமைப்பிற்காகப் பல் வேறு இடங்களிலிருந்து எழுந்தருளிப் போந்து, ஒருங்கே ஓரிடத்தில் கூடிய திருமடங்களின் தலைவர்களையெல்லாம் ஒரு சேரக் கண்டு தரிசித்து மகிழும் பேறு பெற விரும்பி, பொது மக்கள் பெருந்திரளாகப் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருந்தனர். அந்நிலையில் பேரவையின் பொதுக் கூட்டத் திருக்காவணம், **தேவாசிரியன்** என்னும் திருக்காவணம் போன்றே சிறப்புறக் காட்சியளித்தது.

> " பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை
> மாவாழ் அகலத்து மால்முதல் வானவர்
> ஓவாது எவரும் நிறைந்துறைந்து உள்ளது
> தேவா சிரியன் எனும்திருக் காவணம்"

> " அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
> நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்
> புரந்த அஞ்செழுத்து ஓசை பொலிதலால்
> பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது "

என்று **பெரியபுராணம்** பாடுதற்கேற்ப, பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு அறிஞர்-செல்வர்-அலுவலர்-அன்பர் என்னும் பலதிற நிலையினரும், பெருந்திரளாகப் போந்திருந்தனர். அனைவரும் சமயவுணர்வும் சமயச் சின்னங்களும் உடையவராய், திருநாம ஜெபம் செய்து உவக்கும் சிந்தையினராய், பேரவையின் புனிதத் தன்மைக்கேற்ற நிலையில் அமைதியுறக் கூடியிருந்தனர். பொதுமக்களின் உள்ளத்தில் பக்தி உணர்வும் பண்பாட்டு ஒழுக்கமும், எவ்வளவு ஊறித் தோய்ந்து இன்றும் நிரம்பியுள்ளன என்பதற்கு, 'ஊசி விழினும் ஓசை கேட்கும் வண்ணம்' அங்கு நிலவியிருந்த பேரமைதியே சான்றாகத் திகழ்ந்தது.

மாலை ஆறு மணிக்குச் சரியாக மகா சந்நிதானங்கள் அனைவரும் மேடைக்கு எழுந்தருளினர். அவரவர் தமக்கென அமைக்கப்பட்டிருந்த இடத்தில் வீற்றிருந்தருளினர். கடவுள் வாழ்த்துக்குப் பின்னரும், **ஸ்ரீ காஞ்சி ஆசார்ய சுவாமிகள்** பணித்தருளியபடி அந்தி வேளையில் பொது மக்கள் நிகழ்த்திய மௌன தியானத்துடனும், பேரவையின் பொதுக் கூட்டம் தொடங்கப் பெற்றது. நமது **அறநிலைய ஆணையர்** அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மதிப்பிற்குரிய நமது தமிழக முதலமைச்சர் பெருந்தகை திருமிகு. **எம். பக்தவத்சலம்** அவர்கள் ஓர் அரிய சிறந்த தொடக்க உரை நிகழ்த்தினார்கள். அடுத்துப் பேரவையின் தலைவர் ஆகிய **தருமபுர ஆதீன மகா சந்நிதானம்** அவர்களும், அவர்களைத் தொடர்ந்து முறையே ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், மதுரை ஆதீனம், ஸ்ரீ காசி மடம், மயிலம் பொம்மபுர ஆதீனம், கோவை கௌமார மடாலயம், காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம், குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் ஆகிய திருமடங்களைச் சேர்ந்த தலைவர்கள் பலரும் அருளுரைகள் வழங்கினர்.

சென்னைத் துணை ஆணையர் திரு. **ஏ. சிதம்பரம்**, பி.ஏ.,பி.எல்., அவர்கள், மகா சந்நிதானங்களுக்கும் பொது மக்களுக்கும் நன்றியுரை கூறிச் சிறப்பித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் விழா, மிகவும் வெற்றியாகவும் சிறப்புறவும் நிறைவேறியது.

**முடிவுரை :**

இங்ஙனம் இறைவன் திருவருளால் நன்கினிது நடைபெற்று நிறைவேறிய 'தமிழ் நாடு தெய்விகப் பேரவை' யின் திருக் கூட்ட நிகழ்ச்சியானது, முன்னரே குறிப்பிடப் பெற்றபடி தமிழகச் சமய வரலாற்றிலேயே ஒரு பெரும் சிறப்பு நிகழ்ச்சியாகும். இது சென்னைத் **திருமயிலையில்** நிகழப் பெற்றது 'பொன்மலர் புதுமணமும் பெற்றுற் போன்று' மேலும் மிகச் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

> " அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவரார் ?
> எங்குமிலை கண்டாய் இது "

எனத் **திருக்களிற்றுப்படியார்** என்னும் சிறந்த நூல், வியந்து குறிப்பிடுவதுபோல உயிரிழந்த **என்பு** பெண்ணுருவாகப் புத்துயிர் பெற்று எழுந்த புனித தலம் திருமயிலாப்பூர்! ஆதலின் அதற்கேற்ப அங்கு நிகழ்ந்த பேரவையின் அமைப்புக் கூட்டத்தால், நம் தமிழகத்தில் **சமயத் துறை புத்துயிரும் புத்தெழுச்சியும்** பெற்று மிக விரைவில் செழித்தோங்கி வளர்ந்து திகழும் என்பதில் ஐயமில்லை. எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைபுரிவதாக!

நம்மரும் பழைய நாடும், நற் பண்பும்,
நலந்திகழ் சமயமும், கலையும்,
மெய்ம்மைநா கரிக மேன்மையும், ஒழுக்க
விழுப்பமும், அறங்களும் எல்லாம்
தம்மியல் போங்கித் தழைக்குமா றுழைக்கத்
தமிழகத் திருமடத் தலைவர்,
செம்மையிற் றொடங்கும் செந்தமிழ் நாடு
தெய்விகப் பேரவை வாழ்க!

செம்மைத் தமிழ்நாடு தெய்விகப் பேரவைதான்
மெய்ம்மைத்தொண் டாற்றி மிகவளர்ந்து—
நம்மையெல்லாம்
வையத்து வாழ்வாங்கு வாழ்விக்கப் போற்றுவம்
நாம்
தெய்வத் திருவருளைச் சேர்ந்து.

—ஆசிரியர்.

(குறிப்பு: பேரவைக் கூட்டத்தில் நிகழ்த்தப் பெற்ற வரவேற்புரை. தொடக்கவுரை, அருளுரைகள் முதலியன, இச்சிறப்பு மலரிற் பின்வரும் பக்கங்களில் முறையே தொகுத்துத் தரப் பெற்றுள்ளன).

# பேரவைத் தொடக்கவுரை

(சுருக்கம்)

நமது தமிழக முதலமைச்சர் பெருந்தகை

## திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள் பி.ஏ., பி.எல்.,

**பண்டைக்காலந் தொட்டு** மயிலைக்குப் பல சிறப்புகள் உண்டு. திருஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கிய திருத்தலம் இது. அது ஓர் அற்புதமான காட்சி. அதே போன்ற பல அற்புதங்கள் நடந்த ஸ்தலத்தில் இன்னும் ஓர் அற்புதக் காட்சியைக் காண்கிறோம். ஆதீன கர்த்தர்கள் பலர் கூடித் தெய்விகப் பேரவையை அமைத்திருக்கிறார்கள், மக்களின் வாழ்க்கைக்கு நல்வழி காட்டி இப்பேரவை பெரிதும் உதவ புரியும்.

மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டி உதவுவதற்காகவே ஆதியில் திருமடங்கள் அமைக்கப்பட்டன ; அந்த லட்சியத்திற்கேற்ப இப்போது அவர்கள் மக்களுக்கு வழிகாட்ட முற்பட்டிருக்கின்றனர். இது நாம் மிகவும் பாராட்டிப் போற்றி மகிழ்தற்குரிய செயல் ஆகும்.

மக்களாகிய நாம் வாழ விரும்புகிறோம். பெரியவர்கள் காட்டிய வழி மட்டும் நமக்குப் போதாது; நம்மை அவர்கள் நடத்திச் செல்லவும் வேண்டும். 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' எனத் திருவள்ளுவர் கூறியபடி இவ்வுலக வாழ்வு பொருளில்லாமல் நடவாது. ஆயினும் பொருள் மட்டும் வாழ்வுக்குப் போதுமானதாகி விடாது ; அறிவும் வேண்டும். அறிவின்றி, வாழத் தெரியாமல் பொருள் படைத்தவர்கள் தவிப்பதை நாம் காண்கிறோம். நம்மிற் பலரிடத்தில் பொருள் இல்லை. திருவள்ளுவர் கூறியபடி இவ்வுலகில் பொருளைத் திரட்ட முனைகிறோம். ஆயினும் நம்மிடம் போதுமான பொருளும் இல்லை, போதிய அறிவும் இல்லை. பொருளும் மிகப் படைத்து, அறிவும் முதிர்ந்த அயல் நாட்டினர் பலரைக் காண்கிறோம்! பொருளும் அறிவும் இருந்தாலும், அவர்களிடம் ஏதோ குறை இருக்கிறது. வாழ்வின் நிறைவை, சுகத்தை, இன்பத்தை அவர்களால் காணமுடியவில்லை. அந்த நிறைவுக்கு வழி காட்டுவதே, நம் பெரியோர், நம் நாடு, நம் சமயம் செய்யும் பணியாகும்.

சர்ச்சைகள்—வேற்றுமைகள் ஆகியவற்றைத் தவிர்த்து விட்டு, மக்களுக்கு நல்வழி காட்ட வேண்டும் என்று இந்தத் தெய்விகப் பேரவையைப் பெரியோர்கள் கூடி அமைத்துள்ளார்கள். நோயுற்றோர், ஆதரவற்றோர், அநாதைகள் போன்றவர்களுக்கு இதன் மூலம் உதவ முற்பட்டுள்ளனர். மக்களின் குறைவற்ற வாழ்வுக்குத் துணை செய்யும் நோக்கங்களோடு, இப்பேரவை இறைவன் அருளால் அமைக்கப் பெற்றிருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொள்வதே நாம் செய்ய வேண்டிய கடமை.

—

# "தமிழ்நாடு தெய்விகப் பேரவை"

திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்கள், பி.ஏ.பி.எல்.,

ஆணையாளர், இந்துசமய அறநிலைய (ஆட்சித்) துறை, சென்னை-34.

இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் தமிழ் நாட்டு மடங்களைச் சார்ந்த ஆதீனகர்த் தர்கள் முதன் முதலாகக் கூடியதிலிருந்து அந்த மகாநாட்டைப் பற்றியும், பிறகு ஜூன் மாதம் 13-ஆம் தேதி அவர்கள் இணைந்து செயல் படுவதற்குத் தோற்று வித்திருக்கும் பேரவையைப் பற்றியும் தெய்வ நம்பிக்கை யுள்ளவர்கள் எல்லோ ரும் ஓரளவு அறிந்துள்ளார்கள். பலர் இப்பேரவை அமைத்துள்ளமையைப் பாராட்டி அது வகுத்துள்ள திட்டத்தை யும் வரவேற்றிருக்கின்றனர்கள், ஒரு சிலர் வெவ்வேறு சம்பிரதாயங்களைச் சார்ந்த திருமடங்கள் ஒன்றுபட்டுச் செயல்புரியக் கூடுமா? கூடுமாயினும் அங்ஙனம் செயல் படுவது வரவேற்கத் தக்கதா? என்று ஐயப்படுகின்றனர்கள்.

இந்த நாட்டின் வரலாற்றில் ஹர்ஷ வர்த்தனன் என்னும் அரசர் கி. பி. 643ம் ஆண்டில் பல சம்பிரதாயங்களைக் கொண்ட சமயத் தலைவர்களைக் கூட்டி னர் என்ற குறிப்பு அறியக் கிடக்கின்றது. அதன் பிறகு இத்தகைய முயற்சியில் எவ ரும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அவசியம் ஏற்படும்போதுதான் இத்த கைய முயற்சிக்கு இடமிருக்கிறது. இப் பொழுது நாட்டிலிருக்கும் சூழ்நிலையில் இத்தகைய புது முயற்சி தோன்றுவது இன்றிமையாததாக இருப்பதை சிந்தனை யாளர்கள் எளிதில் அறியக்கூடும், பல் வேறு காரணங்களால் இன்று சநாதன மதமாகிய இந்து மதம் மக்கள் வாழ்க்கை யோடு ஒட்டியதாக அமையவில்லை. இந்து மதத்தின் அடிப்படையாக இருக்கும் வேதங்கள் இன்று மிகவும் நலிந்து கிடக் கின்றன, அப்படியென்றால் வேதங்கள் யாதொரு குறைவுக்கும் உள்ளாக வில்லை. ஆனால் வேதங்களை அத்யயனம் செய் வது குன்றிவிட்டது. பாரதநாட்டு வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்குத் தமிழ் நாட்டில் எண்ணற்ற வேதபாட சாலைகள் தோன்றிச் செயல் பட்டு வந்தி ருக்கின்றன. ஆனால் இன்றைய நிலையில் அவைகளில் பெரும்பாலானவை செயலற் றுப்போய் விட்டன, ஆகமங்கள் மக்களால் அறியக் கூடிய நிலையில் இல்லை. ஓரளவு மேல்நாட்டாரின் முயற்சியில் வேதங்கள் இன்று நூல்கள் வடிவில் நல்ல விளக்கம் பெற்றிருக்கின்றன. ஆனால், ஆகமங்கள் இன்னும் செம்மையாக விளக்கப்பட வில்லை. அவைகளைச் சேகரிப்பதே ஒரு பெரும் முயற்சியாக மாறிவிட்டது. இந்த நிலையில் ஆலய வழிபாட்டின் சிறப்பை மக்கள் உணரத் தவறிவிட்டார்கள். எனவே, பூசனையும் சிறப்பாக நடை பெற முடியவில்லை. ஆலயங்களும் கவனிப் பாரற்று நாளடைவில் குன்றிவிட்டன. சென்ற பல ஆண்டுகளாக இந்த நிலை சிறிதுசிறிதாக மாற ஆரம்பித்திருக்கிறது. மக்களிடத்தில் பக்தி நெறி மிகவும் வளர ஆரம்பித்திருக்கிறது. ஆலயங்களும் பழுது பார்க்கப்பட்டு ஆலய வழிபாட்டின் அவ சியம், சிறப்பு இவற்றில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்கள். ஆனால் இந்து மதம் பல சமயங்களாகப் பிரிந்திருக்கின்ற கார ணத்தினாலும், வரலாற்றில் பலவகை மாறுதல்கள் ஏற்பட்ட காரணத்தினாலும் இன்று சமயங்கள் வெவ்வேறு நிலையில் தேங்கிக் கிடக்கின்றன. அந்தந்த சம யத்தைச் சார்ந்த திருமடங்கள் தனித் தனியாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றிலும் சில மடங்கள் அவைகளுக் கேற்றசம்பிரதாயத்திலும்கூட முயற்சி யெடுப்பதைக் குறைத்திருக்கின்றன. இந்து சமயத்தின் அடிப்படைக் கருத்துக் களை விஞ்ஞான அறிவு படைத்த பலர் பழித்தும், அவற்றைப் பற்றிய ஐயம் உண்டாக்கியும் வருவது கண்கூடு. இந்த நிலையில் இந்து மதத்தின் அடிப்படைக்

கருத்துக்களை மக்கள் நன்கு உணரவேண்டும். அவற்றை உணர்வதோடு வெவ்வேறு சம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்கள் அவரவர்களுக்குரிய சம்பிரதாயத்தின் உண்மைகளையும் அறிவது அவசியம். அப்படி அறிந்தால்தான் அவர்களுடைய வாழ்க்கையும் வளம்பெற முடியும்.

இந்து என்றால் வேதத்தை ஒப்புக்கொள்ளுகின்றவன் என்று பெரியோர்கள் விளக்கியிருக்கின்றார்கள். எனவே, நான்மறைகளை ஒப்புக்கொள்ளாதவர்கள் இந்துவாக முடியாது என்பது அவர்களின் கருத்து. அப்படியானால் வேதம் இந்துமதத்தின்பலவகையான சமயங்கள் மதங்கள் இவற்றிற்கு அடிப்படை. அந்த வேதங்களை ஒப்புக்கொண்டு அவற்றின் பல பகுதிகளை வெவ்வேறு விதங்களில் அர்த்தம் செய்துகொண்டு அந்த முறையில் செயல்பட்டு வருவனதாம் இப்பொழுது காணப்படும் பலவகைச் சமயங்கள் என்றாலும், அவைகளுக்கு அடிப்படை வேதங்களே என்பதை யாரும் மறப்பதற்கில்லை. வேதங்கள் காட்டும் நெறிக்கும், வேதங்கள் அல்லாத மற்றவை காட்டும் நெறிக்கும் முக்கியமான வேறுபாடு உண்டு என்பதை மறப்பதற்கில்லை. அப்படி அடிப்படையாகவுள்ள வாழ்க்கை நெறியை மக்கள் அவசியம் உணரவேண்டும். இந்த அடிப்படைக் கருத்தில்தான் பலவகைச் சமய தத்துவங்களைக் கொண்ட சம்பிரதாயங்களைச் சார்ந்த திருமடங்களாயினும், அவைகள் இந்த முயற்சியில் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டுமென்று திருமடங்கள் உணரவேண்டியதாயிற்று. எனவே, மக்களுக்குப் பொதுவாக உள்ள சமய உண்மைகளை எடுத்துச்சொல்வது மிகவும் முக்கியமான அம்சம். இந்தக் கருத்தை அறநிலையங்கள் நிர்வாகம் பற்றியுள்ள 1959-வது ஆண்டுச் சட்டத்திலும் 97-வது பிரிவில் அறநிலையங்களுக்குப் பொதுவாகவுள்ள கருத்துக்களை விளக்கம் அல்லது பிரசாரம் செய்வதற்காக "பொது நல நிதி" (Common Good Fund) என்ற ஒரு நிதியமைப்பை ஏற்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றது. மக்கள் நமது இந்து மதத்தின் முக்கியமான கருத்துக்களையும், நமது பழம்பெரு முனிவர்கள் போன்றவர்களுடைய அனுபவத்தின் பயனாக வெளிப்பட்டுள்ள சிறந்த உண்மைகளையும் அறிந்து, அவற்றின்படி ஒழுகவேண்டும் என்ற நிலையை இப்பேரவை உண்டாக்கக்கூடுமானால், அதுவே இப்பேரவையின் சாதனையுள் சிறந்ததாக அமையும். இப்பேரவையின் முயற்சி வெற்றி பெற எல்லோருடைய ஆதரவும், இறைவனின் திருவருளும் உதவுவதாகுக என்று பிரார்த்திக்கின்றேன்.



ஸ்ரீ லட்சுமி விநாயகர்
(திருவாமாத்தூர்)

# "எங்கும் முழங்குக பேரவை"

(திரு ஏ. சிதம்பரம், பி.ஏ. பி.எல்., துணை ஆணையர், சென்னை-34)

சரித்திரம் கண்டிராத சாதனை, இந்து சமய வரலாற்றில் ஒரு புரட்சி என்னும் படி, 13-6-1966 அன்று ஒரு பெரு நிகழ்ச்சி நடந்தேறியது. இருபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஒருமனப்பட்டு, தமிழகத்தின் முக்கிய திருமடங்களின் தலைவர்களினுடைய அருளுரைகளை மூன்று மணி நேரம் நிசப்தமாகக் கேட்டு ஆனந்தித்துப் பக்தி பரவசத்தில் ஈடுபட்டு ஆழ்ந்திருந்தார்கள். ஒரே அரங்கில் தெய்விகப் பிரதிநிதிகள் அமர்ந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நமது முதலமைச்சர் அவர்களின் ஆசியுடன், தமிழ் நாடு தெய்விகப் பேரவை சிறப்பாகத் தொடங்கப்பட்டது.

தமிழகத்திலுள்ள தேவாலயங்களும், திருமடங்களும் ஒருமைப்பட்டு உருவாக்கியதே இந்தப் பேரவை. இந்து சமயத்தின் தனிப் பெருமையை மக்கள் உணரவும், தெய்விக நெறியுடன் தினசரி வாழ்க்கையை அவர்கள் நடத்தவும், பக்தி நெறியை வளர்க்கவும் இப்பேரவை பாடுபடும். தமிழ் நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் நிரந்தரச் சங்கங்கள் ஏற்படுத்தி, இந்து சமய உண்மைகளை உலகம் உணரச் செய்யும். இந்தச் சங்கங்கள், வார வழிபாடு, நித்திய நாம ஜபம், சமயக்கலை நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், கோயில்கள், கோயிற் கலை, திருவிழாக்கள் பற்றிய சினிமா நிகழ்ச்சிகள், புராண இதிகாசப் பிரசங்கங்கள் முதலியவற்றை எல்லாம் நல்ல முறையில் ஏற்பாடு செய்யும்.

மக்களின் தினசரி வாழ்க்கையில் தெய்விக நெறி நிலவிப் பரவ, பல துறைகளிலும் பணியாற்றுவதே இப்பேரவையின் குறிக்கோளாகும். முக்கியமாக, பிடி அரிசி சேகரித்து அன்ன தானம் செய்தல் என்ற சிறந்த கைங்கர்யத்தை இப் பேரவை மேற்கொண்டிருக்கின்றது.

'ஐயமிட்டுண்' என்பது தமிழ் மூதாட்டியான ஔவையின் அருள்வாக்கு. ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு நாளும் சமையலுக்காக உலைப் பானையில் அரிசி போடும்போது தர்மத்துக்கென்று ஒரு தனிப் பாத்திரத்தில் ஒரு பிடி (படி அல்ல, அரைக்கைப்பிடி) அரிசியும், ஒரு பைசாவும் போட்டு வைக்கவேண்டும். கிராமச் சங்கங்கள் இவ்வாறு சேகரிக்கப்பட்ட அரிசியைச் சேர்க்க ஏற்பாடு செய்து, அந்தச் சேமிப்பு அரிசியை அந்தந்த தெருவிலோ, வட்டாரத்திலோ உள்ள கோயிலில் கொடுத்துச் சமைத்துப் பகவானுக்கு நிவேதனம் செய்யப்படும். நிவேதனம் செய்த அன்னத்தைப் பட்டை போட்டு, அந்த வட்டாரத்திலுள்ள ஏழை ஜனங்களுக்குக் குறைந்த விலையில் விற்கப்படும். இந்தச் சிறந்த கைங்கர்யத்தைப் பேரவையின் கிராமச் சங்கங்கள் எடுத்துப் பணியாற்றும்.

இப்பணி ஏழை ஜனங்களுக்கு மிக்க உபகாரமாயிருப்பதோடு, மக்களின் தர்ம சிந்தனையை விஸ்தரிக்கவும், சேவை மனப்பான்மையை அறிவுறுத்தவும், தெய்வ சிந்தனையை வாழ்க்கையில் நிலவச் செய்யவும் ஏதுவாக இருக்கின்றது. மற்றும் பகவானுக்கு நிவேதனம் செய்து அந்த அன்னத்தை விநியோகம் செய்வதால், இக்கைங்கர்யத்தில் பங்கு கொள்பவர்களும், அன்னத்தை உட்கொள்பவர்களும் கடவுளுடைய கிருபைக்குப் பாத்திரர்கள் ஆகிறார்கள். இத் தெய்விகப் பணியைச் சென்னையில் நுங்கம்பாக்கம், அடையாறு, திருவல்லிக்கேணி, பெரம்பூர் மாம்பலம் முதலிய இடங்களில் ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் அவர்களின் ஆசியின் பேரில் நல்ல முறையில் நடத்திப் பிரமாதமான வெற்றியைக் கண்டிருக்கிறார்கள். இந்தச் சங்கங்கள் பேரவையோடு இணைக்கப்படும்

அறிஞர்களைக் கொண்ட பதிப்பாளர் குழு, இந்து சமய சம்பந்தமான இலக்கியங்கள், தோத்திரத் திரட்டுகள் போன்ற வெளியீடுகள், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் நல்வழி நன்னெறி திருக்குறள் முதலியன வெளியிட ஏற்பாடு செய்யும், மற்றும் ஓதுவார்கள் பயிற்சிக்கல்லூரி, வேத ஆகம பாடசாலை, இந்து மத பிரசாரகர் பயிற்சிக் கல்லூரி. ஆலய வழிகாட்டிப் பயிற்சி நிலையம் முதலியன நிறுவவும் ஏற்பாடு செய்யும். மேலும் மருத்துவ நிலையங்களும், அனாதை இல்லங்களும் பெருமளவில் ஆங்காங்கே ஏற்படுத்துதல், பேரவையின் முக்கிய நோக்கமாகும்.

இன்னும் எந்தெந்தப் பகுதிகளில் கோயிலே இல்லையோ அங்கெல்லாம் குறைந்தது ஒரு விநாயகர் கோயிலோ, அல்லது அனுமார் கோயிலோ அல்லது அப்பகுதி மக்கள் போற்றும் இறைவனின் திருவுருவம் அமைக்கப்படும் வேறு கோயிலோ, கட்டப் பெறுவதற்கு உள்ளூர்ச் சங்கங்கள் ஏற்பாடு செய்யும். கோயில்கள், சிறப்பாக அப்பகுதியிலுள்ள கிராம தேவதையின் கோயில்கள், நன்முறை நிர்வகிக்கப்படுவதில் சங்கம் கவனம் செலுத்தும்.

நீண்டகாலச் சம்பிரதாயப்பழக்க வழக்கங்களின்படி கோயில்களில் திருவிழாக்கள் நடக்கும்படி செய்வதுடன், அதற்காக உரிய அதிகாரிகளுக்கு எல்லா ஒத்துழைப்பும் சங்கங்கள் தரும். குறிப்பாக தேர்த் திருவிழாக்கள் ஒழுங்காக நடக்கும்படியும். தேர் இழுத்தலில் அப்பகுதியிலுள்ள இந்து சமயத்தின் பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்கள் எல்லோரும் தீவிரமான பங்கெடுத்துக்கொள்ளும்படியும், தக்க முயற்சிகள் செய்யும். எங்கே கோயில்களில் தேர் இல்லையோ அல்லது எங்கே தேர் விழாவானது நின்றுபோய் இருக்கின்றதோ, அங்கே தகுந்த தேர்கள் செய்யப்படுவதற்கும் அல்லது தேர் விழாக்கள் மறுபடியும் நடக்கும்படி செய்வதற்கும் சங்கங்கள் நடவடிக்கைகள் எடுக்கும். ஆகவே, தமிழகத்திலுள்ள இந்து மக்கள் சமய நெறியைப் பின்பற்றி வாழ்வதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் வழங்க இந்தப் பேரவை மிகப் பெரிதும் பாடுபடும்

ஒவ்வொரு கிராமத்திலும் நல்ல பயிற்சி பெற்ற தம்பிரானோ, அல்லது மகானோ, இருந்து, அவருடைய ஆலோசனை கிராம மக்களுக்கு அன்றாட சமய சமுதாய வாழ்க்கையில் கிட்டுமானால், சமுதாயம் நலமும் வளமும் பெற ஏதுவாகும். பேரவை இப் பெருங் கைங்கர்யத்தையும் எடுத்து, ஒரு தம்பிரான் பயிற்சிக் கல்லூரியை ஏற்படுத்திப் பயிற்சியாளர்களைக் கிராமங்களுக்கு அனுப்ப முற்படும் என்று நம்புகிறேன்.

இப்பேரவையின் முதல் தலைவராக ஸ்ரீலஸ்ரீ தருமபுரம் கயிலை சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆக்கச் செயல்களையும் ஆற்றலையும் உலகம் அறியும். ஆகவே, அவர்களுடைய தலைமையில் இப்பேரவை எங்கும் முழங்கும் என்பதில் ஐயமில்லை. மக்களின் அன்பையும், ஆதரவையும், உழைப்பையும் இப்பேரவைக்குத் தரவேண்டுமென்று வேண்டுகிறோம்.

---

# வாழ்த்துச் செய்திகள்

**திரு. கே. சோமசுந்தர தேசிகர், எம்.ஏ.,**

துணை ஆணையர் (தலைமை அலுவலகம்),
ஆணையரின் நேர்முக உதவியாளர், சென்னை-34.

1. இம்மாதத்திய திருக்கோயில் இதழ் "தமிழ் நாடு தெய்விகப் பேரவை"யின் சிறப்பு மலராக வெளிவர இருப்பது மிகவும் பொருத்தமானதாகும். தமிழ்ச் சமூகத்தின் சரித்திரத்திலும், தமிழ் நாட்டிலுள்ள அறநிலையங்கள் திருமடங்கள் இவற்றின் சரித்திரத்திலும் இதுவரை கண்டிராதபடி, சென்ற 13—6—1966 அன்று சென்னையில் தமிழ் நாட்டு மடங்களின் தலைவர்கள் அனைவரும் கூடி, அவர்களால் 'தமிழ் நாடு தெய்விகப் பேரவை' என்ற அமைப்பு தொடங்கப் பெற்றுள்ளது. மக்களிடையே தெய்விக மனப்பான்மையையும், அற உணர்ச்சிகளையும் வளம் பெறச் செய்வதோடு, அநாதைகள் வறியோர், நோயுற்றவர் இவர்களுக்கு உதவி செய்வதற்கும், இந்தப் பேரவையின் மூலம் வழிவகை செய்யப்பெற்றிருக்கிறது.

நாட்டு மக்கள் அனைவரும் இந்தப் பேரவைக்கு ஆதரவு நல்கி, நற்பயனடையுமாறு இறைவனருள் பாலிக்க வேண்டுமென்று இறைஞ்சுகின்றேன்.

---

**திரு. கே. ராஜா, பி.ஏ.,பி.எல்.**

துணை ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, மதுரை.

2. 'தமிழ் நாடு தெய்விகப் பேரவை' தொடங்கப் பெற்றமையால், மக்களிடையே மன ஊக்கம் ஏற்பட்டுத் துன்பங்கள் துடைக்கப் பெற்று வாழ்வு ஒளி பெறச் செய்யப் பயன்படும் என்றும், உள்ளத்தின் உறுதி ஏற்படச் செயலாற்றப்படும் என்றும், தமிழக மக்கள் அனைவரும் நம்புகின்றார்கள் என்று சொன்னால் மிகையாகாது.

நாம் பல துறைகளில் மாறுபடுகிற உலகில் ஈடுபட்டிருப்பினும் மாறுபடாத கடவுள் நாட்டத்திலேயே கண்ணும் கருத்துமாயிருப்பதற்கு உள்ள மனப் பயிற்சியைப் பேரவை அளிக்கவும், பேரவையைக் கண்காணிக்கும் நம் மாட்சிமை மிக்க திருமடப் பெருந் தலைவர்கள் நீடூழி வாழவும், மக்கள் நலங்கள் எல்லாம் பெறவும், அறங்கள் வளர்ந்தோங்கவும் ஆசீர்வதித்து அருள, எல்லாம் வல்ல ஸ்ரீ செந்திலாண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# "பிறவாமை வேண்டும், அதற்கு வழிகள்"

திரு. ஏ. மார்க்கண்டவேல் ராஜன் அவர்கள்
(துணை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, தஞ்சாவூர்)

1. காரைக்கால் அம்மையார் இறைவனை வேண்டியது பின்வருமாறு:-

பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல், உன்னை மறவாமை வேண்டும்: நீ ஆடும் போது நான் மகிழ்ந்து பாட வேண்டும்.

2. நாம் எல்லோரும் ஆண்டவனைக்கேட்கும் வரமும் இதுதான். கிடைப்பதற்குரிய மானிட ஜன்மம், நமக்குக் கிடைத்திருக்கின்றது, இனிப் பிறக்காமல், இந்த ஜன்மத்திலே ஆண்டவனை வழுத்தி அவனை அடையவேண்டும். அதற்கு வழிகள் பல. அவைகளில் ஒரு வழி, இறைவனுடைய நாம ஜெபமும் தியானமும் தான்.

(அ) நாம ஜெபம், தியானம் இவைகளின் மகிமைகளை ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவையில் 3-வது பாடலும் 5-வது பாடலும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன:-

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடித்
தீங்கின்ற நாடெல்லாம் திங்கள் மும்மாரி
[பெய்து
வாங்கக் குடம் நிறைக்கும்
வள்ளல் பெரும் பசுக்கள், நீங்காத செல்வம்,
நிறைந்தேலோரெம்பாவாய்

(திருமாலின் திருநாமங்களைப் பாடினால், நாடு முழுவதும் ஒரு தீங்கும் இல்லாமல், மாதந்தோறும் மூன்று முறை மழை பெய்ய, அதனால் நெற்பயிர்கள் உயர்ந்து பருத்து விளங்கும். அழிவில்லாத செல்வம் நிறையும்படியாக, பசுக்கள் குடம் குடமாகப் பால் கறக்கும்.)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
[போய பிழையும்
புகுதருவான் நின்றனவும் தீயினில் தூ சாகும்
செப்பேலோரெம்பாவாய்.

(கண்ணனை வாயாரப்பாடி, நெஞ்சார நினைத்துத் தியானிக்க' முன்பு செய்த பிழைகளும், இனி நேரிடும் பாவங்களும் தீயிலிட்ட பஞ்சுபோலப் பறந்து விடும்.)

(ஆ) கீழே கண்ட பாடல்களும் நாம ஜெபத்தின் மகிமைகளை விளக்கும்:-

(1) குலம் தரும் செல்வம் தந்திடும்
...
நலம் தரும் சொல்லை நான் கண்டு
[கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.
(திருமங்கை யாழ்வார்)

(2) பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய்க்
[கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம்
[கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர, யான்போய் இந்திர
[லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
[அரங்கமா நகர் உளானே
(தொண்டரடிப் பொடியாழ்வார்)

(3) பிணக்கு இலாத பெருந்துறைப்
[பெருமான் உன்
நாமங்கள் பேசுவார்க்கு இணக்கு
[இலாதது ஓர்
இன்பமே வரும், துன்பமே துடைத்து
(மாணிக்கவாசகர்)

(4) சொற்றுணை வேதியன்
கற்றுணைப் பூட்டியோர்
கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது
[நமச்சிவாயவே

(5) சிவாய நம என்று சிந்தித் திருப்பாருக்கு
அபாயமொரு நாளுமில்லை

(6) சிவ சிவ என்னச் சிவ கதி தானே
(7) முடியாப் பிறவிக் கடலிற் புகார்,
[முழுதும் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப் படார்
வெற்றிவேல் பெருமாள் அடியார்க்கு
[நல்ல பெருமாள்
அவுணர்குலம் அடங்கப் பொடியாக்கிய
[பெருமாள்
[திருநாமம் புகல்பவரே
(கந்தரலங்காரம்)

(இ) கீழே கண்ட பாடல் தியானத்தின் மகிமையை விளக்கும்:-

நாளென் செயும், வினைதானென்செயும்,
[எனை நாடி வந்த
கோளென் செயும், கொடுங்கூற்றென்செயும்,
குமரேசர் இருதாளும் சிலம்புஞ்
[சதங்கையும் தண்டையும்
சண்முகமும், தோளும் கடம்பும், எனக்கு
[முன்னே வந்து தோன்றிடினே.
(கந்தரலங்காரம்)

(தியானம் செய்து முருகனை நம் மனக்கண் முன்னால் நிறுத்திக் கொண்டால் நாளும், கோளும், வினைப்பயனும், கூற்றுவனும் ஒன்றும் செய்ய முடியாது).

(ஈ) நாம ஜபத்தை எங்கும் எப்பொழுதும் செய்யலாம். பக்தியோடு பகவந் நாமத்தைப் பாடுவது மிகவும் நல்லது. பாடுவதற்கு லகுவான சில நாமாவளிகள், கீழே குறிக்கப் பட்டிருக்கின்றன:-

(1) கணேசா சரணம், சரணம் கணேசா
(2) சிவாய நம ஓம், சிவாய நமக
சிவாய நம ஓம், நம சிவாயா.
(3) நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும், என் நெஞ்சில்
[நீங்காதான், தாள் வாழ்க.
(4 ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்,
ஆதி சக்தி, மகா சக்தி, பராசக்தி ஓம்.
(5) வாவா முருகா, வடிவேல் அழகா.
வேல்வேல் முருகா, வெற்றிவேல் முருகா,
(6) ஹரே ராம, ஹரே ராம, ராம ராம
ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண,
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே,

கண்ணை மூடிக்கொண்டு பாடவேண்டும். விநாயகர், சிவன் சக்தி முருகன் இராமர் ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றிப் பாடும் பொழுதும், அந்தந்த சந்நிதியில் இருப்பதாகப் பாவித்து, அந்தந்த மூர்த்தியினுடைய உருவத்தை மானசீகமாக நினைத்து, பக்தியோடு பாடவேண்டும். 10 நிமிஷங்கள் பாடிய பின்பு 2 நிமிஷங்கள் தியானம் செய்யலாம். பலர் சேர்ந்து பாடித் தியானம் செய்யலாம். பலர் சேர்ந்து கூட்டு நாம பஜனை செய்யும் பொழுது, முதலில் ஒருவர் பாட, பின் மற்றவர்கள் பாட வேண்டும்.

(உ) தியானம் செய்யும் பொழுது நம்முடைய உடலையும் உலகத்தையும் மறக்க முயற்சிக்க வேண்டும். மனக்குரங்கு பல இடங்களுக்குச் செல்லும்! அதை ஒருமுகப்படுத்தச்சுலபமான வழி ஒன்று உண்டு.

(1) உட்கார்ந்து, கண்ணை மூடிக் கொள்ள வேண்டும். நாம் சதா சுவாசத்தை உள்ளே இழுத்தும், வெளியே விட்டுக் கொண்டும் இருக்கிறோம். மனதை எங்கும் செல்லவிடாமல், இவ்வாறு சுவாசம் வெளியே போவதையும் உள்ளே வருவதையும் சாட்சியாய்க் கவனித்துப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் மனம் உடனே அடங்கி விடும், தியானம் கைகூடும், பின்பு சுவாசம் உள்ளே இழுக்கும் பொழுது ஒருமுறை "முருகா" சுவாசம் வெளியே விடும்போது ஒருமுறை "முருகா" என்று நம் இஷ்ட தெய்வத்தின் நாமத்தைச் சொல்லித் தியானம் செய்யலாம்.

(2) மேலே கண்ட விதம் செய்வதால், மனம் அடங்குவதை இன்று இரவு பரீட்சை பண்ணித் தெரிந்து கொள்ளலாம். சிலருக்கு இரவு படுத்த உடன் தூக்கம் வராது. சிலருக்குத் தூக்க மாத்திரை சாப்பிட்டால்தான் தூக்கம் வரும். இதற்கு மருந்து மேலே சொல்லிய பிரகாரம் செய்வதே. படுக்கையில் படுத்துக் கொண்டு, கண்ணை மூடிச் சுவாசம் வெளியே போவதையும் உள்ளே வருவதையும் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தால், அடுத்த நிமிஷம் தூங்கி விடுவோம்.

(3) மன அமைதி வேண்டும் பொழுதெல்லாம் மேலே கண்ட விதம் செய்தால், மன அமைதி ஏற்படும்.

(4) மேலே கண்ட விதம் கூட்டு நாம பஜனை யும் கூட்டு தியானமும் செய்தால், கைலாயம் போகின்ற மாதிரி தோன்றும்.

3. இன்னும் செய்ய வேண்டியவைகள் பல:

(1) கர்ம பலனிற் பற்று வைக்காமல் கர்மத் தைச் செய்யவேண்டும். (உதாரணம்) தபால்கா ரன் வரும் தந்திகளை அவரவர்களுக்குக் கொடுக்கி ருன். ஒருவர் ஆண் குழந்தை பிறந்தது என்ற செய்தி கிடைத்ததைக் குறித்து சந்தோஷப்படு கிருர். இன்னொருவர் மனைவி இறந்தாள் என்ற செய்தி கிடைத்ததைக் குறித்து வருந்துகிருர். ஆனல் தபால்காரனுக்கு இன்பமோ, துக்கமோ கிடையாது.

(2) நாம் எங்கிருந்து எக்காரியத்தைச் செய்தா லும், மனதை மட்டும் சதா சர்வகாலமும் இறைவ னுடைய திருவடியில் வைக்கப் பழக வேண்டும்.

(உதாரணம்) ஒருவனுக்கு முதுகில் பிளவை நோய் இருந்தால், அவன் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், அவன் மனம் பிளவையில் தான் இருக்கும்.

(3) சரணுகதி மிகவும் அவசியம். பூனைக் குட்டி தன் பொறுப்பைத் தன் தாயிடம் ஒப்ப டைத்துவிடுவது போன்று, நம்முடைய பொறுப்பு அனைத்தையும் பகவானிடம் ஒப்படைத்து விட்டு, அவரையே சார்ந்திருக்கவேண்டும்.

(4) காமம், காசு ஆசை இவைகளை விடவேண் டும். இவைகளை அகற்றுவதற்குச் சத் சங்கம் நல்ல உபாயம்.

(5) ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவையில் 19வது பாடலில் சொல்லிய படி நம்முடைய கைகள் ஆண்டவனுக்கல்லாமல் வேறு எந்தக் காரியமும் செய்யாதிருக்க வேண்டும் இரவும், பகலும் ஆண்டவன் காட்சியையன்றி வேறொன்றும் காணுதிருக்க வேண்டும். ஆண்ட வனுக்கு என்று காரியங்கள் செய்ய முடிவுகட்டி விட்டால் கெட்ட காரியம் ஒன்றும் செய்யநேராது.

(6) கஷ்டங்கள் வந்தபொழுது இதெல்லாம் ஈசனுடைய திருவிளையாடல் என்று பிரகலாதன் பகர்ந்தான். கஷ்டங்கள் அதிகரிக்க, அதிகரிக்க. அவனுக்குப் பக்தி அதிகரித்தது. இன்பமும் துன் பமும் கலந்துதான் வருகிறது. உலகத்தினின்று இன்பத்தை நாடாமல், தானே வந்தமையும் துன் பத்தைப் பொருட்படுத்தாது, கடன் கட்டுவது போன்று பொறுக்கவேண்டும்.

(7) நம்முடைய கடமையைச் செய்வதும் கட வுள் வழிபாடாகும்.

(8) வாழ்வை இனியதாக்குவது அன்பு. அன்பு பொலியுமிடம் சுவர்க்கம். அன்பு மறைந்த விடம் நரகம். நாம் அன்பை வளர்க்க வேண்டும்.

(9) கண்ணுடியின் நிறத்துக்கு ஏற்பக் காணப் படும் பொருள்களின் நிறம் மாறுகிறது. மனம் என்னும் கண்ணுடி அத்தகையது. கெட்ட மனமுடையார்க்கு உலகம் கேடானது. நல்ல மன முடையார்க்கு உலகம் நல்லது.

(10) முன் எண்ணியது பின் விளைகிறது. விலக்க முடியாத வல்வினை என்பது முன் எண் ணிய தீய எண்ணங்களாகும். நலத்தையே எண்ணி, நலத்தையே பேசி, நலத்தையே செய்ப வன் தன்னை நல்லானுக்கும் சிற்பி, எண்ணத்தின் தொகை மனிதன். எண்ணத்தை நல்லதாக்கிவிட் டால் மனிதன் நல்லவன்

(11) பெரிய பட்டணம் ஒன்றுக்கு வழிப்போக் கனுக வரும் ஒருவன், முதலில் தங்குவதற்கு நல்ல இடம்தேடிக்கொண்டு பிறகு ஊர் சுற்றிப்பார்க்க லாம். அப்படி செய்யாவிட்டால், இராத்தங்க இடமில்லாது தவிக்கவேண்டும். இவ்வுலகுக்குள் வந்துள்ள நாம் மரணம் என்னும் இரவு வருவ தற்கு முன்பே, இறைவனுடைய திருவடியைத் தங்குமிடமாகச் செய்துகொள்ள வேண்டும்.

"எய்ப்பு என்னை வந்து நலியும் போது அங்கும்
ஏதும் நான் உன்னை
நினைக்க மாட்டேன். அப்போதைக்கு
இப்போதே சொல்லி வைத்தேன்,
அரங்கத்தரவணைப் பள்ளியானே"

(12) அ. பார்க்கத் தகாததைக் கண்கொண்டு பார்க்க வேண்டாம். கண்மூடி இருப்பது போன்று இருந்துவிடவேண்டும். கேட்கத் தகாததைக் காது கொண்டு கேட்க வேண்டாம். பேசத் தகாததை வாய்விட்டுப் பேச வேண்டாம்.

(ஆ) கண் எப்பொழுதும் புறத்திலே போய்ப் பார்க்கிறது. தியானம் பண்ணிப் பழகும்போது, கண்மூடி இருக்கின்றோம். காதை நாம் மூடமுடியாது. ஆனால் தியானம் செய்யும்போது காதுக்கு வருகிற செய்தியைக் கருத்தில் வாங்காது விட்டுவிட்டால் அது காதை அடைத்தற்கு நிகர். புறத்தில் வரும் சப்தம் காதில் படலாம், ஆனால் அதைக் கருத்தில் வாங்காது இருந்து பழகுதல் வேண்டும். இந்தச் சாதனத்தைத் தினமும் செய்து வரவேண்டும். கண், காது என்னும் பொறிகளைப் பழக்குவது போன்று மற்ற இந்திரியங்களையும் பழக்கப்படுத்தி வரவேண்டும். அப்படிப் பழக்குவதினால் இந்திரியங்கள் தூய்மை அடைகின்றன.

(இ) நாம் மனதை உள்முகமாகச் செலுத்திப் பழகுவதில்லை. புறத்தில் இருப்பவைகளிடத்து நாம் வைக்கின்ற விருப்பு வெறுப்பு இந்திரியங்களைக் கெடுக்கிறது. விருப்பு, வெறுப்பற்ற பரமானந்த நிலையில் அந்தர்முக திருஷ்டியில், மனதை ஓய்ந்திருக்கச் செய்ய வேண்டும். அப்பொழுது பஞ்சேந்திரியங்களும் ஓய்வு பெறுகின்றன. தியானம் பண்ணுவதின் கைகண்டபலனாகப் பஞ்சேந்திரியங்கள் ஓய்வுபெற்றுத்தூய்மை அடையும் மனதுக்கு நடு நிலை வரும்

(13) நடந்ததைப் பற்றிக் கவலைப்படாமல். இனி வரப்போவதைக் குறித்து அவஸ்த்தைப்படாமல், இப்பொழுது நடக்க வேண்டியதைச் செவ்வனே செய்யவேண்டும்.

(14) ஒரு வைரத்தை, கத்திரிக்காய் கடைக்காரனிடம் கொடுத்தால், 10 சேர் கத்தரிக்காய் மதிப்புப் போடுவான். ஜவுளிக் கடைக்காரன் 1000 ரூபாய் மதிப்புப் போடுவான். ஆனால் வைர வியாபாரி ஒரு லட்சம் ரூபாய் மதிப்புப் போடுவான். இந்த வைரத்திற்கு நிகர் மனிதனுடைய வாழ்வு. ஒருவன் கூலி வேலை செய்தல் என்னும் மதிப்பை அதற்குக் கொடுக்கிறான். கடவுள் மயமாக்குதல் என்னும் மதிப்பை நாம் கொடுக்கவேண்டும்.

(15) நம்முடைய ஆசைகள் முழுவதும் ஒழிந்தால், பிறவாமை கிட்டும். சாகும் தருவாயில் ஆண்டவனை நினைத்தால், ஆண்டவனை அடையலாம்.

(16) நாம் மேல் நோக்கிச் செல்லுகிறோமா என்பதைத் தெரியும் வகை:—

அடிக்கடி நம் நெஞ்சத்தில் வரும் நினைவு எது? ஓய்வு வேளையில் நம் நெஞ்சம் எதன்கண் ஓடுகிறது? தனித்திருக்கும்போது நமக்கு உண்டாகும் எண்ணம் யாது? நாம் பாவிப்பதுமேலானது என்றால், நாம் மேல் நோக்கிச் செல்லுகிறோம். அது கீழானது என்றால், நாம் கீழ்மையை நாடுகிறவர்களாவோம்.

4. அவனருளால் அவன் தாள் வணங்கி நாம பஜனை, தியானம், நிஷ்காம கர்மம், சத்சங்கம் முதலியவைகள் செய்து இனிப் பிறக்காமல் இந்த ஜன்மத்திலே ஆண்டவனை அடைவோமாக.



5-ஆம் நாள் திருவிழாக் காட்சி
(திருவண்ணாமலை)

# தமிழ்நாடு தெய்விகப் பேரவை

(அமைப்பு விதிகளின் சுருக்கம்)

**முன்னுரை:**

தமிழ்நாடு தெய்விகப் பேரவை என்பது தமிழகத்திலுள்ள திருமடங்கள் திருக்கோயில்கள் ஆகியவற்றின் ஓர் அமைப்பாகும். இந்து சமய மக்கள் தங்கள் சமயத்தின் பெருமையை உணர்ந்து கொள்ளவும், இந்து மதத்தில் தங்களுக்குள்ள நம்பிக்கையை வலிமைப் படுத்திக் கொள்ளவும், இந்து தருமத்திற்கும் ஒழுக்கப் பண்பாடுகளுக்கும் ஏற்றபடி இந்து சமயமுறையில் வாழ்க்கை நடத்த இந்துக்களுக்குத் துணைசெய்யவும், உரியமுறையில் சமயப் பணிகள் இயற்றுவதை நோக்கமாகக் கொண்டு, இப்பேரவை அமைக்கப்பெற்றிருக்கின்றது.

எந்தெந்தச் செய்திகளில் கருத்து வேறுபாடுகள் இந்து சமயப் பிரிவினரிடையே உள்ளனவோ அவைகளெல்லாம் தவிர்க்கப்பெற்று எல்லோருக்கும் இசைந்த – அனைவருக்கும் பொதுவான கூறுகள் மட்டுமே வலியுறுத்தப்பட்டு, இந்து சமய அடிப்படைக் கொள்கைகளில் நம்பிக்கை உடைய இந்துக்கள் அனைவருக்குமே பயன் விளைக்கும் வகையில், பேரவையின் செயல்கள் விரிவாக்கப்படும்.

**பேரவைத் தலைவர்:**

இப்பேரவையானது, சபைகளின் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பெற்ற, ஓர் அமைப்பாகும். சென்னை-34 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை 22-ஆம் எண்ணில் அதன் அலுவலகம் இருக்கும். பேரவையின் பணியானது திருமடங்களின் தலைவர்களையும், சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆணையர் அவர்களையும் கொண்ட ஒரு மாநிலக் குழுவினால், திட்டம் வகுத்து நிறைவேற்றப்படும். பேரவையின் தலைவர் பதவியானது சுழற்சி முறையில், ஓர் ஆண்டுக் கால அளவு ஒவ்வொரு திருமடத் தலைவராலும் வகிக்கப்படும். இந்து சமய அறநிலைய ஆணையர், இப்பேரவையின் அலுவற்சார்பான துணைத் தலைவராக இருப்பார். இப்பேரவையானது தனது முதல் தலைவராகத் தருமபுர ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கயிலை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களை ஏற்றுக்கொண்டு, 13—6—1966 முதல் பணி செய்யத்தொடங்கியிருக்கிறது. துணை ஆணையர் தரத்திலுள்ள ஒரு செயலாளர் மிக விரைவில் இப்பேரவையின் பொறுப்பை ஏற்பார்.

**பதிப்பாளர் குழு:**

இந்து சமய இலக்கியங்களில் நல்ல தேர்ச்சி பெற்றுள்ள சிறந்த அறிஞர்களைக் கொண்ட ஓர் பதிப்பாளர் குழுவானது, இப்பேரவையால் நிறுவப்பெற்றுள்ளது.

(1) நித்தியப் பாராயணத்திற்கு ஏற்ற சுலபமான தோத்திரங்கள்

(2) எளிமையான சிறு நூல்கள்

(3) இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கும் நூல்கள்

(4) சமயச்செய்திகளில் ஏற்படும் ஐயங்களைத் தெளிவு படுத்தும் வெளியீடுகள்

(5) இந்து சமயத்தை இகழ்ச்சி செய்யும் பிரச்சாரங்களுக்கும் கூற்றுக்களுக்கும் விடை கூறும் வெளியீடுகள்

(6) தொடக்கப் பள்ளிகளிலுள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு இலவசமாக வழங்குதற்குரிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி முதலிய நூல்கள்.

(7) உயர் தொடக்கப் பள்ளிகளில் இலவசமாக வழங்குதற்குரிய மற்றும் பிற இந்து சமய நீதி நூல்கள், திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால், நீதிநெறி விளக்கம் போன்ற நூல்கள்

(8) ஒப்புவித்தல் போட்டிக்காகத்திவ்யப்பிரபந்த-திருமுறைப்பாடல் தொகுப்புக்கள்

முதலியவற்றை இப்பதிப்பாளர் குழு தொகுத்து வெளியிடும்.

அத்தகைய நூல்களிலிருந்து ஒப்புவித்தல் போட்டிகளுக்குப் பதிப்பாளர் குழுவானது ஏற்பாடு செய்யும். அப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். இந்து சமயப் பிரசாரகர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்

காக, பயிற்சி பெறுபவருக்குரிய தகுதிகள், பயிற்சிக் கால அளவு, பயிற்சிக்குரிய பாடதிட்டம், மற்றும் தொடர்புடைய செய்திகள் ஆகியவற்றை வரையறுத்து, ஒன்று அல்லது அதற்கு மேலும் பல பள்ளிகள் இம்மாநிலத்தில் தொடங்கப்பெறும்.

மேலும் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் ஆகியவர்களுக்கும் ஆழ்ந்த சிறந்த பயிற்சி அளிக்கப் பாடசாலைகள் தொடங்கப் பெறும். மாநிலத்திலுள்ள திருமடங்களாலும் திருக்கோயில்களாலும்நடத்தப் பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களில் தாமே விரும்பிக் கற்க முன் வருபவர்களுக்கு சமஸ்கிருதத்தில் செயலியல் அறிவு பெறுவதற்குத் தக்க வசதிகள செய்து தரப்பெறும்.

பொதுவாக மாநிலத்திலுள்ள இந்து மக்களின் சமய நல்வாழ்வுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தருவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பேரவையானது எத்தனை இடங்களில் முடியுமோ அத்தனை இடங்களில் வசதிகள் நிறைந்த மருத்துவ விடுதிகளையும்கூட ஏற்படுத்தும்.

### மாவட்டக் குழுக்கள் :

திருமடங்கள் திருக்கோயில்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும், அலுவல் சார்பற்ற பிரமுகர்களையும் கொண்டு, அவ்வப்பகுதியின் துணைஆணையரின் தலைமையின் கீழ், நகரம் வட்டம் மாவட்டம் என்பனவற்றில் மாவட்டக் குழுக்களின் மூலம், சமயப் பணிகளை நிறைவேற்றுவதே பேரவையின் அடிப்படை வேலையாகும். மாவட்டக் குழுவானது தன்னுடைய பகுதியில் நிறைவேற்றப்படும் எல்லாப் பணிகளையும் மேற்பார்த்து வரும். சிறப்பாக, பின் வருவனவற்றை அது கவனிக்கும்:—

(1) இந்து மக்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கு வசதியில்லாமல் எப்பகுதிகளில் இடர்ப்படுகின்றனரோ, அப்பகுதிகளில் மாநிலக்குழுவிடமிருந்து தேவையான அளவிற்கு நிதியுதவி பெற்றுக் கீழ்க்கலைப் பள்ளிகள் தொடங்கப் பெறும். அப்பள்ளிகளின் பாடதிட்டத்தில் இந்து சமயக் கொள்கைக்கு ஏற்ற ஒழுக்க போதனையும் சமய போதனையும் சேர்க்கப்படும்.

(2) மாவட்டக் குழுவானது தன் எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள இந்து அநாதை இல்லங்கள்நன்றாகநடைபெறுகின்றனவா என்று கண்காணித்து, அவசியம் என்று கருதினால் அத்தகைய அநாதை இல்லங்களை மேலும் தொடங்குவதற்குரிய திட்டக் குறிப்புகளை மாநிலக் குழுவிற்கு அனுப்பும்.

(3) மாவட்டக் குழுவானது எந்தெந்தப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் இல்லையோ, இருந்தாலும் போதியதாகவும் பொருந்தியதாகவும்இல்லையோ, அங்கெல்லாம் மருத்துவச் சிகிச்சைக்காக மருந்தகங்கள் நடத்த நடவடிக்கை எடுக்கும். அத்தகைய மருந்தகங்கள் ஆயுர்வேதம், சித்தம், ஓமியோபதி அல்லது அல்லோபதி முறைகளில், அவ்வப்பகுதிகளுக்குப் பொருத்தமாகக் கருதப்படும் முறையில் சிகிச்சைகள் வழங்கப்பெறும்.

### உள்ளூர்ச் சங்கங்கள் :

ஒவ்வொரு கிராமத்திலும் சமயத் துறையில் 'அடிப்படை வேலை' எனக் குறிக்கத் தகுந்த பணிகளை உள்ளூர்ச் சங்கங்கள் நிறைவேற்றி வைக்கும். இந்து சமயப் பொது மக்களின் சமய சமுதாயத் தொடர்புடைய எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டுச் சங்கங்கள் செயலாற்றிவரும். எத்தனைக்கெத்தனை முடியுமோ அத்தனைக்கத்தனை அளவுக்கு இணைப்பான பல தொகுதிகளை எடுத்துக்கொண்டு அப்பகுதிகளில் சங்கங்களைத் திருமடங்கள் அமைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. எந்த ஒரு திருமடத்தினாலோ அல்லது வேறு பொருத்தமான நிறுவனத்தாலோ எடுத்துக்கொள்ளப் பெறாத பகுதிகளில், மாவட்டக் குழுவே சங்கங்களை அமைக்கும்.

### வார வழிபாடு :

அவ்வப் பகுதியிலுள்ள மக்களின் வசதிக்கேற்ற ஒரு நாளில் ஒவ்வொரு வாரமும் வார வழிபாடு நிகழ்வதற்குச் சங்கம் ஏற்பாடு செய்யும். வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், புராண இதிகாசச் சொற்பொழிவுகள், கோயில்களோ அல்லது கோயில் திருவிழாக்களோ அல்லது இந்து சமயப் பண்டிகைகளோ பற்றிய படக் காட்சிகள் ஆகியவற்றில் ஏதேனும் ஏற்புடைய மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள், வாரவழிபாடு நிகழ்



கண்டருள் பெற்று மாசிலா மணிக்கோர் பண்டார மும்மணிக் கோவை பகர்ந்தது

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1957
MADRAS



கங்கையும் யமுனையும் கரந்த வாணியும் மங்கையர்க் கிறைவியாக் கண்டு மகிழ்ந்தது



அந்தி வண்ணன் அழகமை காசியை முந்துறக் கண்டு முனிவரர் மகிழ்ந்தது.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 67



வெண்டா மரைமுதல் விழுமிய கவியால் தண்டா மரையாள் கலையெலாம் தந்தது.




துவராஜ சிங்கம் தவப்பெருஞ் சிங்கத்து அமர்ந்து அவைக்கேக அரசெதிர் கொண்டது.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS



காசியிற் கருடன் காட்டிய இடத்தைக் குமர குருபரர்க்கு அருள்பெறக் கொடுத்தது.



கங்கைக் கரையிற் கேதாரம் நிறுவி ஆங்கோர் மந்திரம் அமைத்த நகரம்.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS



வல்லாள மகாராஜன் கோபுரம், திருவண்ணாமலை

வதற்கு முன்னர் நடைபெறச் செய்யப்படும். இவைகளுக்குப் பிறகு மறுநாள் நித்திய நாம ஜெபம் செய்வதன் தேவை, முக்கியத்துவம் ஆகியவை பற்றி விளக்கி ஒரு சிறிய சொற்பொழிவும், நாம ஜெபம் செய்வது எப்படி என்பதுபற்றித் தகுந்த அறிஞர்களைக் கொண்டு செய்து காட்டுதலும் நிகழும். அவற்றின் பிறகு மவுன தியானமும், அதனைத் தொடர்ந்து தேர்ந்தெடுத்த நாமாவளிகளின் கூட்டுமுழக்கமும் செய்யச் சபையிலுள்ளவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவர். அத்தகைய நாமாவளிக் கூட்டு முழக்கங்களை, பயிற்சி பெற்ற ஒருவர் முதலில் சொல்ல, மற்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்து திரும்பச் சொல்வார்கள். தெரிந்தெடுக்கப்பட்ட சமயப் பாடல்களை, ஓதுவார்கள் மற்றும் தகுந்த அறிஞர்களைக் கொண்டு, தன் எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் இந்து மக்கள் பாராயணம் செய்வதற்குப் பயிற்சி அளிக்கச் சங்கம் ஏற்பாடு செய்யும். சங்கமானது தன் பகுதியிலுள்ள பள்ளிக்கூடங்களில், பதிப்பாளர் குழுவினால் சமய நீதி இலக்கியங்களிலிருந்து தொகுக்கப்பெற்ற பாடல்களில் ஒப்புவித்தற்போட்டிகளும் பரிசுகள் வழங்குதலும் நடைபெற ஏற்பாடுகள் புரியும்.

## கோயில்கள், விழாக்கள்:

எங்கெந்தப் பகுதிகளில் கோயில் இல்லையோ அங்கங்கெல்லாம் குறைந்தது ஒரு விநாயகர் கோயிலோ, அல்லது அனுமார் கோயிலோ, அல்லது அப்பகுதி மக்கள் போற்றும் தெய்வத் திருவுருவம் அமைந்த வேறு கோயிலோ, கட்டப் பெறுவதற்குச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப் பெறும். மேலும் சங்கமானது தன் பகுதியிலுள்ள கோயில்கள், குறிப்பாக கிராமக் காவல் தெய்வங்களின் கோயில்கள், நன்கு நிருவகிக்கப்படுகின்றனவா என்பதில் உரிய கவனம் செலுத்தும். அதற்காக உரிய அதிகாரிகளைக் கண்டு பேசித் தொடர்பு கொண்டு காலத்தில் தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் செய்யும். நீண்ட காலச் சம்பிரதாயப் பழக்க வழக்கங்களின்படி கோயில்களில் திருவிழாக்கள் நடக்கும்படி செய்வதற்கு இயன்ற எல்லா ஒத்துழைப்பு உதவிகளையும் கோயில் அலுவலர்களுக்குக் கொடுப்பதுடன், பூசாரிகளுக்குப் போதிய ஊக்கத்தையும் சங்கம் அளிக்கும். அவ்வப் பகுதியிலுள்ள இந்து மக்களின் எல்லாப் பிரிவினரும் கோயில் தேரை இழுப்பதில் தீவிர பங்கு எடுத்துக்கொள்வதற்கு ஊக்கம் அளிக்கும். எவ்விடங்களில் கோயில்களில் தேர் இல்லையோ, அல்லது எங்கே தேர் விழாவானது நின்று போயிருக்கிறதோ அங்கே தகுந்த தேர்கள் செய்யப்படுவதற்கும், அல்லது மறுபடியும் தேர்விழா நடக்கும்படி செய்வதற்கும் சங்கம் நடவடிக்கைகள் எடுக்கும்.

## பிடியரிசி :

சங்கமானது வீடுதோறும் பிடி அரிசி உண்டியல்கள் அமைத்து, அவ்வப்போது அவ்வுண்டியல்களிலிருந்து அரிசி சேகரிக்கும். அவ்வாறு சேகரிக்கப்படும் அரிசியைக் கொண்டு உள்ளூர்க் கோயில்களில் நைவேத்தியம் செய்து, அரைவிலையில் பிரசாதமாக வழங்கப்படும். அதன் மூலம் சேமிக்கப்படும் தொகையை மூலதனமாக வைத்துக் கோயில்களில் நைவேத்தியங்கள் சலுகை விலையில் நிரந்தரமான அடிப்படையில் வழங்கப்படுவதற்குச் சங்கம் ஏற்பாடு செய்யும்.

## பொதுநலப் பணிகள் :

உள்ளூர்க் கோயில்களில் பணிபுரியும் பிரசாரகர்கள் அல்லது தகுதியுடைய மற்றவர்களைக் கொண்டு, அப்பகுதியைச் சேர்ந்த சிறைச்சாலையிலுள்ள கைதிகள், மருத்துவ மனைகளிலுள்ள பிணியாளர்கள், சீர்திருத்தப் பள்ளியிலுள்ளவர்கள் ஆகியவர்களைச் சென்று காணவும்; அவர்களுக்குத் திருநீறு துளசி போன்ற கடவுட் பிரசாதங்களை வழங்கவும்; கைதிகளும் இளங் குற்றவாளிகளும் எதிர்காலத்தில் நல் வாழ்வு வாழ்வதற்கு ஏற்ற அறிவுரைகளைக் கூறவும்; மருத்துவ மனையிலுள்ள பிணியாளர்களுக்கு ஆறுதல் அளிக்க இயன்ற எல்லா வகையான உதவிகளைச் செய்யவும், சங்கமானது பணியாற்றும்.

பள்ளிக்கூடங்கள் இல்லாமல் எங்கே இந்து மக்கள் இடர்ப்படுகின்றனரோ, அங்கே கீழ்க்கலைப் பள்ளிக்கூடங்கள் தொடங்குவதற்குச் சங்கம் ஏற்பாடு செய்யும். மேலும் தன்னுடைய பகுதியில் உள்ள இந்து அநாதை இல்லங்கள் நன்றாக நடைபெறுகின்றனவா என்று கண்காணிக்கும். எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மருந்தகங்கள் நிறுவி, ஆயுர்வேதம், சித்தம் ஓமியோபதி அல்லது அல்லோபதி முறைகளில் எது அப்பகுதிக்கு ஏற்புடையதாகக் கருதப்படுகிறதோ, அம்முறையில் மருத்துவச் சிகிச்சை வழங்கச் சங்கம் ஏற்பாடுகள் புரியும். தன் பகுதியிலுள்ள ஏழை இந்துக்களின் இறுதிச் சடங்குகளை இந்து சமயச் சடங்கு முறைகளுக்கு ஏற்ப நடத்துவதற்கும், சங்கம் நடவடிக்கை எடுக்கும்.

## ஆலோசகர் குழு:

சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையரைத் தலைவராகக் கொண்டு, மாநிலக் குழுவினரால் நியமிக்கப் பெறும் அலுவல் சார்பற்ற மற்றும் ஒன்பது பேர்களைக் கொண்ட மாநில ஆலோசகர் குழு ஒன்று இருக்கும். இந்த ஆலோசகர் குழுவானது தனக்கு அனுப்பப் பெறும் எல்லாச் செய்திகளையும் பற்றிப் பேரவைக்கு ஆலோசனைகள் வழங்கும். மாவட்டக் குழுக்களால் பேரவையின் செயலாளருக்கு அனுப்பப் பெறும் காலாண்டு அறிக்கைகளை ஆராய்ந்து தன்னுடைய கருத்துக்களையும் குறிப்புக்களையும் மாநிலக் குழுவிற்கு ஆலோசகர் குழு அனுப்பி வைக்கும். பேரவையின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்குத் தொடர்புடைய எல்லாச் செய்திகளிலும் ஆலோசகர் குழுவினர் ஆலோசனைகள் வழங்குவர்.

## நிதிநிலை :

திருமடங்களும் கோயில்களும், குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் மனமுவந்து தாமே வழங்கும் ஆண்டியற் பங்களிப்புகள்; மேற் குறித்த நிறுவனங்களின் சிறப்பியல் நன்கொடைகள்; இந்து அறநிலைய ஆட்சித் துறையின் பொதுநல நிதி மானியம்; மற்றும் பிற எல்லா வகைகளிலிருந்தும் கிடைக்கும் நன்கொடைகள், ஆகியவற்றைக் கொண்டதாகப் பேரவையின் நிதி நிலை, நல்ல வலிவுடையதாக இருக்கும்.

## முடிவுரை :

பொதுவாக, ஒவ்வொருவரும் இந்து தருமத்திற்கும் நீதி நெறிக்கும் ஏற்றபடி வாழ்க்கை நடத்துவதற்குத் துணை புரியத் தக்க வகையில் இந்துமதத்தைப் புத்துயிர் ஊட்டுவதற்கும், இந்து சமுதாயத்தைச் சிறப்புடன் அமைப்பதற்கும், இப்பேரவையானது முயன்று பணிபுரியும்.

— ஆசிரியர், தமிழாக்கம்



ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

# மகா சந்நிதானங்களின் அருளுரைகள்

## 'தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவா'

தருமையாதீனம் 25வது குருமகா சந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்

---

திருவருள் நெறித் தலைவர்களே, அன்பர்களே,

மக்களிடையே இன்று தெய்வ வுணர்வைப் பரப்ப நமது தமிழ் நாட்டில் விளங்கும் மடாலயங்களின் தலைவர்களாக உள்ள மகா சந்நிதானங்கள் ஒன்றுகூடி, **தமிழ் நாடு தெய்விகப் பேரவை** அமைக்க முன்வந்துள்ளார்கள். அந்தப் பெரியவர்கள் எல்லோரும் இங்கே அமர்ந்து உங்களுக்கு அருளாசி வழங்கக் காட்சி தருகிறார்கள். இவ்விதம் அருளாளர்கள் ஒன்று கூடிப் பணி புரிய வந்திருப்பது, நமது நாட்டுக்கு ஒரு சுப சூசகமாகும். மகாசந்நிதானங்கள் ஒன்றுகூடி அமைத்துள்ள இத்தெய்விகப் பேரவையில், நம் **தமிழக முதலமைச்சர், இந்து சமய அறநிலைய ஆணையர்** முதலிய பெருமக்கள் பலர் பங்குகொண்டு சிறப்பிப்பது, அவையின் நோக்கம் நன்கு நிறைவேறுதற்குரிய நல்லதோர் அறிகுறியாகும்.

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றபடி இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாததே. ஆயினும், பொருள் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டால், ஆன்ம லாபம் கை கூடாது போய்விடும். ஆன்ம லாபத்தைத் தருவது தெய்விகத் திருவருள் ஒன்றே. அதனை நம்பினால் இவ்வுலகத்திற்கு உரிய பொருளையும் பெறலாம். அவ்வுலகத்திற்குரிய அருளையும் பெறலாம். பொருளைப் பெறுவதிலும் அருளைப் பெறுதல் இன்றியமையாதது. ஏனெனில்,

> "பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
> அற்றார்; மற் றாதல் அரிது"

என்பது திருவள்ளுவர் வாக்கு.

திருக்கடவூர் அபிராமியம்மையின் அருள்பெற்ற அருளாளராகிய **அபிராமி பட்டர்** என்பவர் அபிராமியம்மை தன் அடியார்களுக்கு அருள்வனவற்றில் 'தனந்தரும்' என்பதையே முதலிற் கூறியுள்ளார்.

> "தனந்தரும், கல்வி தரும், ஒருநாளும்
> தளர்வறியா
> மனந்தரும், தெய்வ வடிவும் தரும்,
> நெஞ்சில் வஞ்சமில்லா
> இனந்தரும், நல்லன எல்லாந் தரும்,
> அன்பர் என்பவர்க்கே
> கனந்தரும் பூங்குழ லாள் அபிராமி
> கடைக்கண்களே"

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததாய் இருத்தல் பற்றி **'தனந்தரும்'** என்பதை முதலிற் சொல்லியிருப்பினும், பொருளைவிடச் சிறந்தது அறிவு. ஏனெனில், பொருளை நன்முறையில் ஈட்டுவதற்கும், பின் அதனைக் காப்பாற்றுதற்கும், வழியறிந்து செலவு செய்தற்கும் அறிவு இன்றியமையாதது. அறிவு இல்லையெனில், இவையெல்லாம் தலை தடுமாற்றமாய் நிகழும். இது பற்றியே 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்றார் திருவள்ளுவர். அறிவு கல்வியால் கிடைத்தலின், "தனந்தரும்" என்பதை அடுத்து, **"கல்வி தரும்"** என்றார்.

அறிவே, 'ஞானம்' எனப்படுகின்றது. விஞ்ஞானம், அரசியல் ஞானம், ஆன்ம ஞானம் முதலாக ஞானம் பலவகைப்படும். விஞ்ஞானம், அரசியல்ஞானம் முதலிய எந்தவகையான ஞானங்கள் இருப்பினும், ஆன்மஞானம் இல்லாவிடில் பயனில்லை. ஆன்ம ஞானமாவது, தன்னையும், தலைவனையும் பற்றி நன்குணர்வது;

> "தன்னை யறியார்; தலைவன் றனையறியார்;
> முன்னை வினையின் முடிவறியார்"

என்றார், எங்கள் ஆதிபரமாசாரியர். எனவே, ஜீவான்மாவாகிய உயிர்களின் கீழான நிலையையும், பரமான்மாவாகிய

இறைவனது மேலான நிலையையும், அவ்விறைவன் தனது கைம்மாறற்ற கருணையால் உயிர்கட்குச் செய்துவரும் உபகாரங்களையும் நன்கு உணர்ந்து, மனமொழி மெய்களால் அவனை ஒல்லும் வகையான் வழிபடுதலே ஆன்ம ஞானம் என்பது புலனாகும்.

இந்த ஆன்மஞானத்தினால் தான் உலக வாழ்வில் நேர்மையும் உண்டாகும். உலகில் பலர் நேர்மை தவறி நடப்பதற்குக் காரணம், ஆன்ம ஞானம் இல்லாமல், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று இருப்பதுதான்.

மயிலாப்பூரில் வாழ்ந்த **சிவநேசச் செட்டியார்** என்பவர், ஞான சம்பந்தர் மேல் கொண்டுள்ள அன்பினால், தமக்கு அருமையாகப் பிறந்த **'பூம்பாவை'** என்னும் மகளை ஞானசம்பந்தருக்கே கொடுப்பது என்று வைத்திருந்தார், ஆனால் அப்பெண் பாம்பு கடித்து இறக்க நேர்ந்தது. அப்போதும், அவளைத் தகனம் செய்து, எலும்பையும், சாம்பலையும் அப்படியே சேமித்து வைத்திருந்து, ஞானசம்பந்தர் மயிலாப்பூருக்கு எழுந்தருளியபொழுது அவர் முன் கொண்டுபோய் வைத்தார். தம்மீது அன்புகொண்ட செட்டியாரது துன்பத்தை நீக்கக் கருதிய ஞானசம்பந்தர், ஒரு திருப்பதிகம் பாடி அந்த எலும்பைப் பெண்ணாகச் செய்தார். அதுகண்டு மகிழ்ச்சி யடைந்த செட்டியார், 'இவளை உமக்கென்றே வைத்திருந்தேன்; மணம் புரிந்துகொள்ள வேண்டும்' என்றார். ஞானசம்பந்தர், "நீர் பெற்ற பெண் இறந்து விட்டாள்; இப்பொழுது நமது பதிகத்தால் எழுந்துவந்தமையின், இவள் நம் மகளே" என்று சொல்லி, மணம் புரிய மறுத்து விட்டார். பதினாறு வயதுள்ள ஒருவனுக்குப் பன்னிரண்டு வயதுடைய அழகி ஒருத்தியைப் பெரிய செல்வர் ஒருவர், அச்செல்வத்தோடு வலியக் கொடுக்க வருகிறார் என்றால், எந்த ஆடவனாவது, 'வேண்டாம்' என்று சொல்லிவிட்டுப் போவானோ? ஞானசம்பந்தர் ஞானத்தின் திருவுருவாய் இருந்தமையாலன்றோ அதை மறுத்து, உண்மையை விளக்கினார். இவ்விடத்தில் சேக்கிழார் பூம்பாவையாகிய பெண்ணை, கண்ணுதற்பெருமானது கருணைவெள்ளத்தை அகத்தில் உள்ள ஆயிரம் ஞானக் கண்களால் கண்டார் என்று கூறுகின்றார்.

"எண்ணில்ஆண் டெய்தும் வேதா
படைத்தவள் எழிலின் வண்ணம்
நண்ணும்நான் முகத்தாற் கண்டான்;
அவளினும் நல்லாள் தன்பாற்
புண்ணியப் பதினா றாண்டு
பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிர முகத்தாற் கண்டார்"

என்பதே அப்பாட்டு. எனவே, இத்தகைய பண்பாடும், நேர்மையும் ஆன்ம ஞானத்தினாலேயே உண்டாகும் எனத் தெரிகின்றது. அத்தகைய ஆன்மஞானத்தை வளர்க்கவே இத் **தெய்விகப் பேரவை** அமைந்துள்ளது.

ஒருவனுக்கு நல்ல பண்பும், நல்ல ஒழுக்கமும், சிறந்த ஞானமும் உண்டாவதற்கு முதலில் நல்லார் இணக்கம் வேண்டும். உயர்ந்த சிவபக்தராகிய **சேரமான் பெருமாள்** நாயனாருக்கு இறைவன சுந்தரரது இணக்கத்தைக் கூட்டுவித்தான். "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்று திருவள்ளுவர் 'நட்பு இவ்வுலகில் தான் உதவும்'' என்று கூறினர். அது உலகியல் நட்பு. சுந்தரருக்கும், சேரமான் பெருமாள் நாயனாருக்கும் உண்டாகிய நட்பு அருளியல் நட்பு. அது கயிலாயம் வரையிலும் சென்று உதவியது. சுந்தரர் வெள்ளை யானையின் மேல் திருக்கயிலைக்குச் செல்வதையறிந்த சேரமான் பெருமாள் தாம் ஜெபித்த பஞ்சாட்சரத்தைத் தம் குதிரையின் காதில் ஓதினார். அது ஆகாய வீதியில் செல்ல, சேரமான் பெருமாள் சுந்தரரை வணங்கிக் கொண்டு முன்னே சென்றார். சேரமான் பெருமானைச் சிவபெருமான், "இங்கு நாம் அழையாமல் நீ எய்தியது என்?" எனக் கேட்டதற்கு அவர், "அடியனேன் ஆரூரர் கழல்போற்றிப் - புரசை யானைமுன் சேவித்து வந்தனன்" என்று கூறினர்.

இது சுந்தரரோடு அவருக்கிருந்த நட்பின் பயன் அன்றோ! பஞ்சாட்சரத்தின் மகிமையால் அரிய தவத்தினருக்கும் கிடைத்தற்கரிய கயிலாயம் ஒரு குதிரைக்குக் கிடைத்தது. இது நல்லவருக்கு வாகனமாய் இருந்ததன் பயனேயாகும். அத்தகைய நல்லவர் குழாத்தை இத் தெய்விகப் பேரவை பல இடங்களிலும் உண்டாக்க வேண்டும்.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணி அமைந்துள்ளது. அதைச் செய்துகொண்டே இடையில் ஆண்டவன் பணியையும் செய்யவேண்டும். ஆண்டவன் பணியிலேயே பொழுதையெல்லாம் செலவிட்ட எங்கள் ஆதிகுருமூர்த்திகள்,

“ உனக்குப் பணிசெய்ய உன்றனைஎந் நாளும்
நினைக்க வரம்எனக்கு நீ தா—மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே
எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா ”

என்று வேண்டினார்கள். அவரது திருவருள் நோக்கம் பெற்றுத் திருமடத்தில் இருந்து அடியார்கள் சாத்திர விசாரணையிலும் சிவானந்த அனுபவத்திலும் திளைத்திருந்தார்கள் என்பதை,

“ ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை,
ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம்,
கல்வி கேள்வி அல்லல்
ஓய்வார், சிவானந்த வாரியுள் ளேஒன்
றிரண்டும் அறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர
காசன்மெய்த் தொண்டர்களே”.

என்ற **சம்பந்த சரணாலயர்** வாக்கால் அறிகிறோம். திருமடத்தின் அடியார்கள் நிலையே இது என்றால், அவர்களுக்கு அந் நிலையை வழங்கிய குருமூர்த்திகளின் நிலை எத்தகையதாய் இருக்கும்? அவர்களே ஆண்டவனை நோக்கி அவன் பணியினை வேண்டுவார்களாயின், நாமெல்லாம் எந்த அளவு அதனை வேண்டுதல் வேண்டும்!

சிவனடியார்களில் பலர் அரசர்களாகவும், அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். **சேரமான் பெருமாள், புகழ்ச் சோழர்** முதலியவர் அரசர்கள். **மாணிக்கவாசகர், சேக்கிழார்** முதலியோர் அரசர்களுக்கு முதலமைச்சர்கள். **சிறுத்தொண்டர்** போன்றவர்கள் படைத்தலைவர்கள். இவர்களுக்கில்லாத பணி நமக்கில்லை. இப்பணிகளுக்கிடையே ஆண்டவன் பணியையும், அவர்கள் ஆர்வத்தோடு செய்து பயன் பெற்றார்கள். அதுபோலவே நாமும் பெறுதல் கூடும்.

நமது மாநில முதலமைச்சர் உயர்திரு. **எம். பக்தவத்சலம்** அவர்களும், சேக்கிழார் போல அமைச்சர் பணியுடன் ஆண்டவன் பணியிலும் ஈடுபடுகின்றவர்கள். அதனால்தான் இத்தெய்விகப் பேரவையில் கலந்துகொண்டு சிறப்பிக்க வந்தார்கள். நம் அறநிலைய ஆணையர்—**திரு. எம். எஸ் சாரங்கபாணி முதலியார்** அவர்களது பக்திப் பெருக்கத்தினைச் சொல்லவேண்டுவதில்லை. இத்தெய்விகப் பேரவைக்கு அவரே மூலகாரணர்.

“ எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்
பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே”

என்றபடி, பெரும்பணியாயினும், சிறு பணியாயினும் எப்பணியில் ஈடுபட்டிருப்பினும் ஆண்டவன் பணியினை மறுத்தல் கூடாது. ஏன்? என்பதற்கு விடை, முன் சொன்ன எங்கள் ஆதிபரமாசாரியார் வாக்கில்

“ மனக்கவலை—நீக்குகின்ற தென்மதுரை
நின்மலனே ”

என்ற பகுதியில் அமைந்துள்ளது. அதாவது, கவலை இல்லாதவர் உலகத்தில் இல்லை. ஆனால், அந்தக் கவலை அவரவர் நிலைமைக்குத் தக்கபடி இருக்கும்! ‘பாலுக்குப் போடச் சர்க்கரை இல்லையே’ என்பவர்கள் அடைகின்றதும் கவலைதான்; அதே சமயத்தில், ‘கூழுக்குப் போட உப்பில்லையே’ என்பவர்கள்

அடைகின்றதும் கவலைதான். ஆனால், அதன் வடிவம்தான் வேறு. ஆகவே, கவலை இல்லாதவர்கள் யாரும் இல்லை. ஆனால் அந்தக் கவலையை நீக்குபவன் ஆண்டவன் ஒருவன்தான். ஆகையால் அவனையடைந்து அவனது திருவடிகளுக்குப் பணி செய்பவர்கள்தாம், கவலையினின்றும் நீங்கமுடியும் என்பதே இப்பகுதியில் காணக்கிடக்கிறது. திருவள்ளுவரும் மனக்கவலையை மாற்றிக் கொள்வதற்கு என்ன வழி கூறுகிறார்? ஆண்டவனது அடிகளையே துணையாகப் பற்றவேண்டும் என்றுதான் கூறுகிறார்.

“ தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது”

என்ற திருக்குறளை அறியாதார் யார்! ஆயினும் அதன்படி அவனது அடிகளை அடைந்து வழிபடுகின்றவர்களைப் பார்ப்பதுதான் மிகவும் அரிதாய் உள்ளது. அந்நிலை மாறி, எங்கும் அரன் நாமமே சூழவும், அதனால் வையகம் துயர் தீர்ந்து மனக்கவலையின்றி வாழவும் இத்தெய்வீகப் பேரவை வழி வகுக்குமாக. இதன் பணிகள் யாவும் வெற்றியுற விளங்க, ஞானசம்பந்தர் நல்லருள் வாக்கினைக் கொண்டு வாழ்த்துவோமாக.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் ;
வீழ்க தண்புனல் ; வேந்தனும் ஓங்குக ;
ஆழ்க தீயது ; எல்லாம்அரன் நாமமே
சூழ்க ; வையகமும் துயர் தீர்கவே.

—திருச்சிற்றம்பலம்.

## கோயில் நிகழ்ச்சிகள்.

ஆடித் தவசுத் திருவிழா :

சங்கரநயினார் கோயில் ஸ்ரீ சங்கரநாராயண சுவாமி தேவஸ்தானம்.

ஆடிப்பூரத் திருவிழா :

1. திருவாஞ்சியம் வாஞ்சிநாதர் திருக்கோயில்.
2. திருவாடானை ஸ்ரீ சிநேகவல்லி சமேத ஆதிரெத்தினேஸ்வரர் ஆலயம் (இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம்)
3. திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
4. சேலம் செவ்வாய்ப்பேட்டை ஸ்ரீ மாரியம்மன் தேவஸ்தானம்.
5. ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் தேவஸ்தானம்.
6. நாகப்பட்டினம் ஸ்ரீ காயாரோகண சுவாமி ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பாள் கோயில்.

பிரமோற்சவம்:

ஸ்ரீகள்ளழகர் தேவஸ்தானம், திருமாலிருஞ்சோலைமலை, அழகர் கோயில். மகா கும்பாபிஷேகம் :

1. திருவதிகை ஸ்ரீ ரெங்கநாத சுவாமி ஆலயம்.
2. பரமக்குடி ஆயிர வைசிய சபைக்குப் புராதனப்பாத்தியமான ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயில்.
3. மதுரை ஸ்ரீ மீனாட்க்ஷி சுந்தரர் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும் ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானுக்கும், வன்னிவிருட்ச கணபதிக்கும் நடக்கும் மகா கும்பாபிஷேகம்.

## (2) ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய பண்டார சந்நிதி அவர்கள்,

ஆதீனகர்த்தர்

திருவாவடுதுறை மடம், திருவாவடுதுறை, தஞ்சை மாவட்டம்

அமைதிக்கு உறைவிடம் தெய்வ நலனைச் சிந்திக்கும் தெய்வீக சமயம். சமயம் உறுதியும் ஒழுக்கமும் ஆகிய இரண்டு கால்களில் இயங்குவது. உறுதி எனினும் ஊக்கம் எனினும் ஒக்கும். உறுசி, இடரினும் தளரினும் நினகழல் அல்லால் நினையேன் என்ற நிலையான எண்ணம். உறுதியின் அளவை, "வங்கினைப்பற்றி நீங்கா வல்லுடும்பு" என்னத் திண்ணனூர், காளத்தியப்பர் கழலிணையைப்பற்றி நின்றார் என்று தெய்வச் சேக்கிழார் பெருமான் தெரிவிக்கின்றார். உறுதி என்னும் பழமரத்திற்கு வேர்ப்புழு, அளவைகட்கு உட்படாத ஆராய்ச்சி. ஆராய்ச்சி மனவுறுதியை தளரச் செய்வது. பேசக் கற்றுக்கொண்ட குழந்தை தனக்கு வரும் நன்மை தீமைகளுக்குத் தாய் தந்தையரை நம்பியிருக்கிருக்கிறது. எதற்கு எடுத்தாலும் அப்பாவிடம் சொல்லுகிறேன் பார், அம்மாவிடம் சொல்லுகிறேன் பார் என்றுதான் சொல்லுகிறது. அப்பாவும் அம்மாவும் காப்பாற்ற மாட்டார்கள் என்ற அவநம்பிக்கையிருந்தால் அப்படிச் சொல்லுமா? அதுபோலத் திடமான நம்பிக்கை கடவுளிடம் அடைய வேண்டும். அதற்குரிய உபாயம், இளமையிலிருந்தே கடவுளுக்கும், மனித சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்பும், இடைவிடாத சிந்தனையும் நிகழ்ந்து கொண்டேயிருக்கப் பழக்க வேண்டும். ஆகவே முதல் முதல் அலுவலாகக் குழந்தைகளிடம் கடவுள் அன்பு உண்டாகச் செய்வதே, நம் **பேரவையின்** கடமையாகும். நாற்றில் இல்லாத வளம் பயிரிலா வெளிப்படப் போகிறது! ஆகவே கொடுக்கிற ஊட்டத்தை நாற்றிலேயே கொடுக்க வேண்டும்.

விதை, வளமான பொறுக்கு விதைதான். நல்ல தண்ணீர், எரு தக்க பருவத்தில் விதைத்து விட்டார்கள். ஆனால் நிலம் பொட்டல். பொட்டல் நிலத்தில் விதைத்த விதை வளமுற வளருமா? ஆகவே நிலத்தையும் திருத்தி வளம்படுத்துவது அவசியம் ஆகிறது. அது போலக் குழந்தைகள் உள்ளம் தெய்வீக ஒளியுடன் விளங்க வேண்டுமானால், பெற்றோர்கள்—பெரியோர்களின் சிந்தையிலும் தெய்வீக சக்தி விளங்கவேண்டும். இந்த இரு வேலைகளும்—ஒருசேர நிகழ்ந்தால்தான் நம் **பேரவையின்** பணி சிறப்புறும். அதற்குரிய வழிகளாகச் **சென்ற கூட்டம்** வெளியீடு, பிரசாரம், சமயப் பயிற்சி நிலைய அமைப்பு முதலிய பணிகளைச் செயற்படுத்தச் சிந்தித்தது.

செயல்கள் யாவும் சிந்தனைப் பயிற்சியிற் சென்று லயிப்பதே உண்மையான சமய அனுபவம், அதற்குரிய எளிய, இனிய முறைகளையும் அவரவரும் கையாளச் செய்ய வேண்டியது நம் **பேரவையின்** லட்சியம் ஆகும்.

சமய அனுபவம், செபம், தவம், தியானம், பூசை என்ற நான்கு படிகளால் முறையே வளர்வது. அவற்றுள் செபம், தனியே யிருந்து சிந்தையை ஒருக்கி வாயாலும் மனத்தாலும் எண்ண வேண்டிய செயல். இது கை வந்து சித்தியான பிறகுதான் தவம் நிலைக்கும்.

தவம்—கண் காது மூக்கு நாக்கு உடம்பைக் கட்டியாளும் பழக்கம். அது எத்தனையோ வகையாகக் கையாளப்படுகிறது. மனிதனுடைய மனப் பரிபாகத்திற்கு ஏற்ப அமைகிறது எனத் **திருமூலர்** தெரிவிக்கின்றார்.

அத்தகைய தவம் நிலைத்தால் தியானம் நிலைக்கும். தியானம், வைத்த மனம் வாங்காமல் "தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன

தாள் கண்டார் தாளே கண்டார்" என்ற நிலையில் மனத்தை நிலைத்து நிற்கப் பழக்குவது.

இத்தகைய தவம் நிலைத்தால் தைலதாரைபோல இடைவிடாத தியானம், நிகழும். தியானம் என்பது, "நாயகன் சேவடி தைவரும் சிந்தையும்" என்று அப்பர் சுவாமிகளைப் பற்றிச் சேக்கிழார் தெரிவித்தார் அல்லவா, அந்நிலையில் மனத்தைப் பழக்கி நிலையாக நிறுத்தும் முதிர்ந்த அனுபவம். இந்த மூன்றையும் முறையே ஒவ்வொன்றாகப் பழகுவதானல் நாளும் அதிகம் பிடிக்கும். ஒன்று பற்ற, ஒன்று நம்மை விட்டு மறந்தும் போகும். மனம் மறதிக்கும் நினைப்பிற்கும் அடிமையானது. ஆதலால் மூன்றையும் ஒருங்கு பழகவேண்டும். அதற்காக அமைந்தனவே பூசை. பூசையில் செபம் உண்டு. தவம் உண்டு. தியானம் உண்டு. மூன்றும் ஒருங்கே நிகழ்வதால் சமய அனுபவம் விளைகிறது. இதனை இறுதியாகப் பயில்விப்பதே நம் பேரவையின் பரம லட்சியமாகும்.

ஏனையவற்றை அங்கமாகக் கொண்டு, இவற்றை இயற்ற முற்படுவதே நம் பேரவையின் கடமையாகும். நல்ல முறையிற் பணி கொள்ளும் ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமான் நம்மை இத்துறையில் ஆட்கொள்ளுவாராக.

---

# மதிப்புரை

## திருவாமாத்தூர்த் தலபுராணம்

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டு பல சிறந்த தமிழ்ப் பெருஞ் சான்றோர்களும், அரும் பெருங் கவிஞர்களும் வாழ்ந்திருந்த மாட்சிமையுடையது. வடலூர் இராமலிங்க அடிகள், மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்ற பல பெருஞ் சான்றோர்கள் தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர்: அத்தகையவர்கள் பலருள் மகான் வண்ணச் சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் (கி. பி. 1839—1898) அவர்களும் ஒருவராவர். திருப்புகழ்ச் சுவாமிகள் எனவும் முருகதாசச் சுவாமிகள் எனவும் இவர் போற்றப்படுவர்.


இப்பெரியார் முருகப் பெருமானிடத்தில் எல்லையற்ற பேரன்புடையவர். முருகனையே தம் வழிபடு தெய்வமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர். என்றாலும் இவர் சமய சமரச உள்ளம் கொண்ட சான்றோராகத் திகழ்ந்து வந்தார். பழநித் திருவாயிரம திருவரங்கத் திருவாயிரம போன்ற இவர் தம் அரும் பெறல் நூல்கள் இவர்தம் பக்திச் சிறப்பினையும் பண்பாட்டு மேன்மையினையும் விளக்குவனவாகும். இவர் பாடியருளிய நூல்கள் பற்பல, அவற்றுள் புலவர் புராணம் என்பது, பண்டைத் தமிழ் பெருங் கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுவைமிகு விளக்கும்சிறந்த இலக்கியப் பெரு நூலாகும். அதனல் இந்நூல் தமிழறிஞர்கள் அனைவராலும் தனிச் சிறப்பாகப் போற்றப் பெற்று வருகின்றது.

சுவாமிகள் தம்முடைய வரலாற்றைக் குருபர தத்துவம் என்னும் பெயரில் ஓர் அழகிய இலக்கிய நூலாக இயற்றி யிருக்கின்றார்கள். அந் நூலின் வாயிலாகச் சென்ற நூற்றாண்டின் தமிழக நிலையினையும், தமிழ்ப் பெரும் புலவர்கள் பலரைப் பற்றிய செய்திகளையும் அறிந்து பயன் பெற முடிகிறது.

இங்ஙனம் சுவாமிகள் இயற்றிய நூல்கள் பலவற்றில் திருவாமாத்தூர்த் தலபுராணம் என்னும் நூலும் சிறந்ததொன்றாகும். இந்நூல் இரண்டு காண்டங்களாக, ஆயிரம் பாடல்கள் கொண்டதாக உள்ளது. நாடு நகரம் தலம் தீர்த்தம் மூர்த்தி திருவட்டப் பாறை ஆகியவற்றின் சிறப்பைச் சுவாமிகள் முதல் ஆறு பகுதிகளில் விளக்கியுள்ளார். பின்னர், திருவாமாத்தூர் என்னும் பெயருக்கேற்பப் பசுக்களும், அம்பிகை விநாயகர் முருகன் நாரதர் பிருங்கி மதங்கர் நான்முகன் துவாதசஆதித்தர் அஷ்டவசுக்கள் இராமபிரான் கலைமகள் திருமகள் முதலினோரும் வழிபட்ட வரலாறுகளை விளக்கியுள்ளார். அடுத்து அப்பர் சம்பந்தர் சுந்தரர் இரட்டையர் முதலியவர்கள் வழிபட்டு மகிழ்ந்த செய்திகளும் பிறவும், இதன்கண் அழகுறக் கவிதைச் சுவை அமைய விளக்கப்பெற்றுள்ளன.

இத்தகைய சிறந்த தலபுராணத்தினைத் திருவாமாத்தூர்க் கௌமார சபையின் பதிப்பாக வெளியிட்டிருப்பது, மிகவும் பாராட்டி மகிழத் தக்க செயலாகும். செய்யுட்களைப் பதம் பிரித்தும், குறிப்புரை வரைந்தும், திருத்தமாகப் பதிப்பித்திருப்பது படிப்பவர்களுக்குப் பெரிதும் உதவும். பயன்மிக்க இந்நூல் வெளியீட்டுக்கு உதவிய அன்பர்கள் அனைவருக்கும் நம் நன்றி உரியது. இதனை அன்பர்கள் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக.

— ஆசிரியர்.







பேரவையின் பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கு மகா சந்நிதானங்கள் எழுந்தருளும் காட்சி.



காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் பொது மக்கள் திரளுக்கு ஆசியும், அருளுரையும் வழங்குதல்.

PUBLIC LI
5 - APR 1967
MADRAS





திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் தலைவர் தவத்திரு அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் புதுப் பெரியவாள் அவர்களும் கலந்து அளவளாவி மகிழும் காட்சி.



தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் அமைப்பு விதிகளை மகா சந்நிதானங்கள் ஆராய்ந்து முடிவு செய்தல்

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR - 67
MADRAS

(3) சென்னை மயிலாப்பூர் பி.எஸ். ஹைஸ்கூல் மைதானத்தில் சென்ற 13-6-1966-ந் தேதி மாலை நடைபெற்ற தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் பொதுக்கூட்டத்தில்

## ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசரிய சுவாமிகள் விடுத்த அருளுரை

"ஒவ்வொரு குடும்பத்தினரும் மஞ்சளில் தோய்த்த கயிறு ஒன்றை ஒரு சொம்பின் மேல் சுற்றி அந்த சொம்பில் ஒவ்வொரு நாளும் ஒரு பிடி அல்லது அரை பிடி அரிசையையாவது போட்டு வைக்க வேண்டும். ரேஷன் காலத்தில் இது முக்கியமாகச் செய்யப்பட வேண்டிய காரியமாகும். முடியுமானால் அந்த அரிசியுடன் நாள் ஒன்றுக்கு ஒரு பைசா நாணயத்தையும் சேர்த்துப் போடலாம். சொம்பில் அரிசி நிறைந்தவுடன் அதைப் பக்கத்திலுள்ள ஓர் ஆலயத்திற்குக் கொண்டுபோய் அங்கு வைக்கப்பட்டிருக்கும் ஓர் மரப் பெட்டியில் அதைக் கொட்டி வைக்க வேண்டும். அந்த அரிசியை அன்னமாக்கி அதை ஒவ்வொரு நாளும் அந்த ஆலயத்திலுள்ள ஸ்வாமிக்கோ அல்லது அம்பாளுக்கோ நிவேதனம் செய்ய வேண்டும். சேர்ந்த பைஸா நாணயங்களை உபரியாகச் சாமான்கள் வாங்க உபயோகப்படுத்தலாம். நிவேதனம் செய்யப்பட்ட அந்த அன்னத்தை மிளகு கலந்த சம்பா சாதமாகவோ அல்லது தயிர் சாதமாகவோ பட்டைகள் போட்டு ஏழை மக்களுக்கு மிகக் குறைவான விலையில் அதைப் பங்கிட்டுக் கொடுக்கலாம். வெளியில் ஐம்பது பைசா கொடுத்து வாங்கக் கூடிய சாதத்தைப் பத்து பைசா கொடுத்துப் பெறக் கூடிய வகையில் பசியுள்ள ஏழை மக்களுக்கு இந்த ஏற்பாட்டினால் வகை அளிக்க வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் உள்ள பிள்ளையார் கோவில்களிலோ, மாரியம்மன் கோவிலிலோ, ஐயனார் கோவிலிலோ மற்றும் கிராம தேவதை கோவில்களிலோ இந்த ஏற்பாடு அமுலுக்கு வருமானால் ஊரின் எந்தப் பாகத்தில் வசிக்கும் தொழிலாளியும் எளிதில் பசியாற்றிக் கொள்ளலாம். நாள் முழுவதும் உழைக்கும் அவனுக்கு மிகக் குறைவான விலைக்கு உணவு கிடைக்கும் என்னும் நம்பிக்கையும் ஏற்படும். கடவுளுக்கு நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்தைப் புசிப்பதால் அவ்விதம் புசிப்பவர்களது மனதில் நல்லெண்ணங்களே தோன்றும். இந்த ஏற்பாடு அமுலுக்கு வரும்போது ஏழைகளுக்கு இஃதோர் வரப்பிரஸாதமாக அமைவதுடன் பஞ்ச காலத்தில் நிவாரணமாகவும் அமையும்.

சொம்பில் சேர்ந்த அரிசியைப் பெட்டியில் கொட்டாமல் வேறு விதமாகவும் கோவிலில் சேர்ப்பிக்கலாம். ஒரு வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது பதினைந்து நாள்களுக்கு ஒரு முறையோ வீட்டின் தலைவனோ தலைவியோ அவர்களுக்குப் பக்கத்தில் உள்ள கோவிலுக்கு அந்த அரிசியை எடுத்துப் போய் ஸ்வாமிக்கோ அம்பாளுக்கோ முன் ஒரு இலையை பரப்பித் தரித்திர நாராயணனுக்குச் சேவை செய்யும் வகையில் பக்தி சிரத்தையுடன் அதைக் கொட்ட வேண்டும். இலைகளில் பரப்பப்பட்ட அந்த அரிசியைக் கொண்டு அந்தக் கோவில் நிர்வாகிகள் அன்னம் தயாரித்து, அதை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்து அதை முன் சொன்னது போலவே ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் விநியோகம் செய்ய வேண்டும். ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யும் அன்னத்தின் ஒரு பாகத்தை அர்ச்சகர்களுக்கும் மற்ற சிப்பந்திகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்கலாம். விற்பனையிலிருந்து கிடைக்கும் சிறிய தொகையைக்கொண்டு சமையலுக்குத் தேவையுள்ள விரகு வகையறா வாங்கலாம். இந்தப் பணிகளைச் செய்ய ஊதியம் எதிர்பாராமல் சமூக சேவை என்னும் எண்ணத்துடன் செய்ய ஊழியர்கள் தேவை. பெரிய ஊர்களில் ஒவ்வொரு வீதியிலும், சிறிய ஊர்களில் ஒரு பகுதியிலும் ஏழுபேர்கள் கொண்ட கமிட்டிகளை அமைத்து வீடுகளில் சேகரிக்கப்பட்ட அரிசியை வசூலித்தும், அதைக் கோவில்களில் கொண்டுபோய்ச் சேர்த்தும், ஒரு பொது இடத்தில் ப்ரஸாதங்களை

விற்பனை செய்தும், விற்பனை செய்த தொகையை, போஸ்ட் ஆபீஸிலோ பாங்கிலோ டெபாஸிட் செய்வதுமான பணிகளில் அவர்களை ஈடுபடச் செய்ய வேண்டும்.

நமக்கு மூச்சுவிடுவதற்குக் காற்றையும், தாகத்திற்குத் தண்ணீரையும், பசிக்கு உணவையும் அளித்துவரும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நாம் நமது நன்றியை இதன் மூலம் தெரிவிக்கலாம். அவனது அருள் இல்லாமல் ஓர் புல்கூட முளைக்காது. நமக்கு வேண்டுவதை யெல்லாம் கடவுளே கருணையுடன் நமக்கு அளிக்கின்றார். ஆனால் நம்மிடம் எதையும் அவர் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் நமக்குக் கிடைக்கும் எதையும் அவருக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும் என்னும் எண்ணத்தை நமது மனதில் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறு.''

நமது கோவில்களையும் அதையடுத்த இடங்களையும் மக்கள் அசுத்தமாக்குவதைப் பற்றி ஸ்ரீ சுவாமிகள் மிக்க மன உருக்கத்துடன் கீழே கண்டவாறு குறிப்பிட்டார்கள் :—

''ஆலயங்களின் மூலைமுடுக்குகள் உள்ள இடங்களைச் சிலர் புகை பிடிப்பதற்கும், சூதாட்டம் ஆடுவதற்கும் உபயோகித்து வருவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இதற்குக் காரணம் நமது ஆலயங்கள் நமக்குச் சொந்தம் என்னும் எண்ணம் நம்மிடம் இல்லை. மேலும் அவைகள் நமது மதத்திற்கும் கலாசாரத்திற்கும் ஏற்பட்ட சின்னங்கள் என்பதையும் நம் மக்கள் உணரவில்லை. முகம்மதியர்களின் மசூதிகளையும் கிருஸ்துவர்களின் சர்ச்சுகளையும், பார்ஸிகளின் கோவில்களையும் அந்தந்த மதத்தினர் எவ்வளவு சுத்தமாக வைத்து அவைகளைப் பாதுகாத்து வருகின்றார்கள் என்பதைக் கவனித்தால், அவர்கள் அவைகளைத் தங்களது சொந்தச் சொத்தாக மதித்து வருவதை நாம் காண்கிறோம். நமது கோவில்களெல்லாம் நம்மைச் சார்ந்தன; நம்மிடமிருந்து பிரிக்க முடியாதன என்னும் எண்ணத்தை இந்துக்களாகிய நாம் நம் மனதில் நிலைக்கச் செய்ய வேண்டும். நமது வாழ்க்கையும் கலாசாரமும் அவைகளை யொட்டியே அமைந்துள்ளன என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

நகரங்களிலும், பெரிய ஊர்களிலும் உள்ள சில பெரிய கோவில்களைத் தவிர மற்ற ஊர்களின் கோவில்களின் பக்கத்தில் வசிக்கும் மக்கள் ஆங்காங்கு சிறிய கமிட்டிகளை ஏற்படுத்திக் கொண்டு கோவில்களையும் அவைகளின் சுற்றுப்புறங்களையும் அசுத்தம் செய்யாமல் பாதுகாக்கக் கோவில் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும். புனிதமான ஆலயங்களை அசுத்தம் செய்பவர்களிடம் நியாயமாகவும் நயமாகவும் சொல்லி அவர்கள் அத்திய செயல் புரிபவர்களைத் தடுக்கலாம். அவசியமானால் சிறிது பலாத்காரத்தையும் கூட உபயோகிக்கலாம் என எனக்குத் தோன்றுகிறது. இந்தக் கமிட்டியாரே கோவில்களில் நிவேதனம் செய்யப்பட்ட பிரஸாதத்தை மக்களுக்கு விநியோகம் செய்யும் பணியையும் ஏற்றுக் கொள்ளலாம். குறைந்த வருமானமுள்ள குருக்கள்களும் அர்ச்சகர்களும் வளர்ந்து வரும் அவர்களது குடும்பச் செலவுகளை ஈடு செய்ய ஒருவரே பல கோவில்களில் பூஜை செய்யும் பணியை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் சிறிய கோவில்களில் பூஜைகள் திருப்திகரமாக நடைபெறுவதில்லை. அவர்கள் சிரமமில்லாமல் வாழ்க்கை நடத்தப் போதிய ஊதியம் அவர்களுக்குக் கொடுத்துச் சிறிய கோவில்களில் கூட முழுநேர ஊழியர்களாக அவர்களை நியமித்து அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். ஆலயங்கள் விஷயத்தில் பொது மக்கள் இவ்விதம் சிரத்தை எடுத்துக் கொள்வதினால் கோவில் பூஜைகள் நல்ல முறையில் நடைபெறுவதுடன அந்தந்த இடங்களில் உள்ள மக்கள் பெருமையுடன் கோவில்கள் தங்கள் சொத்து என்பதை உணர்வதற்கும் வகை ஏற்படும்.

நம் ஆலயங்களைப் பாதுகாக்க இவ்விதக் கமிட்டிகள் தமிழ் நாட்டில் ஏற்

பட்டால்தான் இன்று துவங்கும் அவைக்குத் **"தமிழ் நாடு தெய்விகப் பேரவை"** என்னும் பெயர் பொருந்தும். இந்தக் கமிட்டிகளைச் சிற்றவை என அழைக்கலாம். கலாசாலைகள் யூனிவர்ஸிடியுடன் சேர்க்கப்படுவது போல (*Affiliation*) இந்தப் பேரவையோடு இந்தக் கமிட்டிகள் இணைக்கப்பட வேண்டும்.

"ஒவ்வொரு இந்துவும் தனது குலத்திற்கு ஏற்பட்ட அனுஷ்டான முறைகளுடன், ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் கடவுளை நினைவுபடுத்தும் வகையில் அவரது நாமத்தைச் சொல்லி வரவேண்டும். நாம் சர்க்காருக்கு வரி செலுத்தி வருகிறோம். இந்த வரிக்கு இராமநாதபுரம் ஜில்லாவில் "கடமை" என்று கூடப் பெயர் உண்டு. நாம் வரி செலுத்துவதற்குக் கைம்மாறாகக் கெவர்மெண்டும், முனிஸிபாலிடிகளும் நமது தேவைகளைக் கவனித்துப் பலவிதமான வசதிகளைச் செய்து கொடுக்கின்றார்கள். அதுபோல் நாம் ஒவ்வொரு நாளும் காலை, மாலை நேரங்களில் ஐந்து நிமிஷங்களாவது மௌனமாக இருந்து கடவுளைத் தியானம் செய்தால் அதுவே கடவுளால் நாம் அடையும் எல்லா நன்மைகளுக்கும், நாம் அவருக்கு மனம் கசிந்து செய்யும் கைம்மாறாகும். காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே கடவுள் நாமத்தை வாயால் உச்சரித்துக் கொண்டே எழுந்திருக்க வேண்டும். சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் மற்ற எல்லா வேலைகளையும் நிறுத்திக் கொண்டு, குறைந்தது ஐந்து நிமிஷங்களாவது மௌனமாக இருந்து கடவுளைத் தியானம் செய்ய வேண்டும். இந்தப் பழக்கத்தைக் குழந்தைகளுக்கும் கற்பித்தால் இது அவர்கள் ஆயுள் வரை நிலைத்து விடும். ஒவ்வொரு நாளும் நாம் கடவுளிடம் கோரும் முதல் கோரிக்கை அவரது நினைவு நம்மை விட்டு என்றும் அகலாமல் இருக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொள்வதேயாகும். நமது அரசியல் சமுதாயம் இவைகள் யாவும், மதத்தின் அடிப்படையிலும் கடவுள் பக்தியுடனும் செயற்படுமானால், நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் எல்லாத் துன்பங்களும் அகன்று எங்கும் சந்தோஷமும் அமைதியும் நிலவி, மக்கள் எல்லா நன்மைகளையும் அடைவார்கள்.



4-ம் திருவிழா கற்பகவிருக்ஷம்

திருவண்ணாமலை

4 மதுரை ஆதீனகர்த்தர் அவர்கள் 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை' 13-6-66 அன்று வழங்கிய அருளுரை

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர்
குறைவிலைக்
கண்ணில் நல்ல.' துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை
இருந்ததே"

மெய்யன்பர்களே!

இந்து சமய உண்மைகளை, உலகுணரச் செய்யும் வழி வகைகளை ஆராய்ந்து, நல்ல முறையில் செயல்படவே, இந்த தெய்விகப் பேரவை திருவருளால் கூட்டப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு மடாதிபதியும். இந்து சமய வளர்ச்சிக்காக, தனித் தனியாக அரும்பெரும் பணிகள் பல புரிந்து கொண்டேயிருக்கிறார்கள். அவ்வாறு தனித் தனியாகத் தொண்டாற்றி வந்த சைவ, வைணவ மடாதிபதிகளை ஒன்று கூட்டி, ஒரு முகமாக அப்பணிகளைச் செய்விக்க வேண்டும் என்று கருதியே, இறைவன், நமது சென்னை மாநில அறநிலைய ஆணையர், திரு. மா.சே. சாரங்கபாணி முதலியார் அவர்களை, அதிட்டித்து நின்று, இந்த செயற்கரிய செயலை, வெற்றிகரமாகச் செய்து முடிக்கும்படி, திருவருள் பாலித்திருக்கிறான். இதுவரை ஒன்று கூடாதிருந்த மடாதிபதிகளை, ஒன்று கூட்டிய இச்செயல், உலக சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் எழுதப் பெற்று, உலகம் போற்றக்கூடிய ஒரு அரும்பெரும் செயலாகும். மெய் வருத்தம் பாராமல், இந்த நற்பணியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து, இந்த தெய்வகப் பேரவையை வெற்றிகரமாகக் கூட்டி வைத்த, அறநிலைய ஆணையர் அவர்களையும், அவர்களுக்குப் பல வகைகளிலும் உறுதுணையாக இருந்து ஒத்துழைத்த அன்பர்கள் பலரையும் பாராட்டுகின்றோம். மனமார வாழ்த்துகின்றோம்.

உலகம் முழுவதும் நம்முடைய இந்து சமயம் பரவியிருந்தது என்பதற்கும், சிவலிங்க வழிபாடு இருந்தது என்பதற்கும். புதைபொருள் ஆராய்ச்சியாளர் தக்க சான்று தருகின்றனர். இந்து சமயம் என்பது எல்லாவிதமான வழிபாடுகளையும் ஏற்றுக் கொள்ளுகிற, பரந்த நோக்கம் கொண்ட மாபெரும் சமயமாகும். இந்துக்களுக்குள்ளேயே சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, விஷ்ணு வழிபாடு, விநாயகர் வழிபாடு. சுப்பிரமணியர் வழிபாடு, சூரிய வழிபாடு ஆகிய ஆறுவித வழிபாடுகள் உண்டு. ஆனால் எல்லோரும் முன்பிறவி, மறுபிறவி உண்டு என்பவர்களே. யார் எந்த தெய்வத்தை இச்சித்து, எவ்விதமாக வழிபாடு செய்தாலும், பாவ மன்னிப்பும், பாவ விமோசனமும் பெற்று. மோக்ஷ நிலை எய்தலாம் என்று கூறுகின்ற, விரிந்த நோக்குடையது இந்து சமயம். உருவமில்லாத அருவ வழிபாட்டையும், உருவத்தோடு கூடிய உருவ வழிபாட்டையும், அருவமும், உருவமும் இல்லாத அருஉருவமாகிய சிவலிங்க வழிபாட்டையும், குருவழிபாட்டையும், "அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற முறையில், தாய் தந்தையர் வழிபாட்டையும், எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்ற முறையில் ஆசிரியர் வழிபாட்டையும் ஆதரித்து, எல்லாவற்றிற்கும் பலன் தருகின்ற பரம்பொருள், ஒன்றே என்று கூறுவது, நமது மாண்பு மிக்க இந்து சமயம். இதனை வலியுறுத்தவே:—

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள்
சொல்ல
இனமலர் கையில் கொண்டு அங்கு இச்சித்த
தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றிவாழும் செயல் அறமானால்
யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்கும் செயற்கு முன்
னிலையாம் அன்றே!"

என்று வடமொழி தென்மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற, அருணந்தி சிவாசாரியார் அருளிச் செய்திருக்கிறார். இதி

லிருந்து இந்து மதம் எம்மதத்தவரும், எவ்வித வழிபாடு செய்தாலும், பிறப்பு இறப்பற்ற முத்தி நிலையை அடையலாம் என்று சொல்லுகிறது என்பது தெளிவாகும். ஆனால் உலகிலுள்ள பிற சமயங்களெல்லாம் தங்களது கொள்கைகளின் படி நடந்தாலன்றி, நற்கதியடைய முடியாதென்ற குறுகிய நோக்கம் கொண்டனவாகும்.

இந்து சமயத்தின் பிரிவுகளாகிய பௌத்தமும், சமணமும், இந்து மதக் கோட்பாடுகளான முற்பிறவி, மறு பிறவிகளை ஒப்புக்கொண்டாலும், எந்த தெய்வத்தை எவ்வித வழிபாடு செய்தாலும், பாவ மன்னிப்பும், பாவ விமோசனமும் பெற்றுப் பிறவியற்ற "நிப்பாண" (மோக்ஷ) நிலையை எய்த முடியாதென்றும், தீவினை செய்தவன் தீவினைப் பலனை அடைந்தே தீர வேண்டுமென்று, நம்பியும் சொல்லியும் வருவன. இந்தக் கொள்கை இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள நாடுகளில் உள்ளன.

ஆனால் இந்தியாவிற்கு மேற்கேயுள்ள நாடுகளிலுள்ள கிறிஸ்தவ மதமும், முகம்மதிய மதமும், கிழக்கேயுள்ள இந்து மதம், பௌத்த மதம் சமண மதம் ஆகிய மூன்றினுடைய, ஒன்றுபட்ட கோட்பாடான, முன்பிறவி மறுபிறவிக் கொள்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றன. ஆனால் முகம்மதியர்கள் வெளிப்படையாக துர்ப்பிரசாரம் ஏதும் செய்யவில்லை. கிறிஸ்தவர்கள்தான் முன்பிறவி, மறுபிறவிக் கொள்கைகள் அஞ்ஞானிகளது அபத்தக் கொள்கைகள் என்றும், தங்களது ஒரு பிறவிக் கொள்கையே மெய்ஞ்ஞானிகளது உண்மையான கொள்கையென்றுப், நம்பியும் போதித்தும் வருகிறார்கள்.

ஆனால் கிழக்கேயுள்ள நாடுகளுக்கும், மேற்கேயுள்ள நாடுகளுக்கும் இடையேயுள்ள, இந்திய நாட்டிலுள்ள இந்து மதம், முன் பிறவிகளில் செய்த வினைகளையும் ஒத்துக் கொண்டு, தீர்ப்புக் கொடுக்கிற கடவுளையும் ஒத்துக் கொண்டு, அவரவர் செய்த வினைகளுக்குத் தகுந்தபடியே கடவுள் நியாயத் தீர்ப்புக் கொடுத்து, ஒவ்வொருவரும் அதன்படியே பிறந்து, வாழ்ந்து, வளர்ந்து, இறக்கின்றோம் என்ற உண்மையை மறுக்க முடியாத முறையில் நிரூபிப்பது. இப்பேருண்மையை வலிறுத்தியே சேக்கிழார் பெருமான்,

> செய்வினையும், செய்வானும், அதன் பயனும். சேர்ப்பானும்
> மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
> இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றிற்கு இல்லையென
> உய்வகையால் பொருள் சிவம் என்று அருளாலே உணர்ந்தறிந்தார்,

என்று அருளியிருக்கிறார்.

யார் யார் எந்த தெய்வத்தை எவ்வாறு வழிபட்டாலும் நமக்கு உடன்பாடே என்றும், அஹிம்சா மூர்த்திகளாகத் தாங்களுண்டு, தங்கள் தங்கள் வழிபாடுண்டு என்றும் பொறுமையாகவும், சாந்தமாகவும் இருக்கிற இந்துக்களது மனம் பொறுக்க முடியாத அளவுக்குக் கிறிஸ்தவர்கள் இந்து மதக் கொள்கைகளைத் தாக்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்களது பிரசாரம் முழுவதும், கிறிஸ்தவ வேத நூலில் பரமண்டலத்திலிருக்கிற பிதா கற்பித்திருக்கிற நியமப் பிரமாணங்கட்கும், இயேசுநாதர் அருளிய மலைப்பிரசங்கத்திற்கும், உண்மைக்கும் மாறானவை என்பதை, யாவரும் ஒத்துக்கொள்ளுமாறு நிரூபிக்க நாம் சில நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறோம். அவற்றுள் "இறந்தவர்கள் வாழும் நிலையும்பேசும் முறையும்" என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அது சுத்தத் தங்கத்தையும், போலித் தங்கத்தையும் வெளிப்படுத்துகிற திராவகம் (nitric acid) போன்றதாகும்.

அது தவிர கிறிஸ்தவ வேத நூலாகிய பைபிளையும், முகம்மதிய வேத நூலாகிய திருக்குரானையும் நன்றாக ஆராய்ந்து, கடவுளுக்கு உருவம் உண்டு என்பதற்கு "விக்ரக ஆராதனையின் விளக்கம்," என்ற நூலில் மேற்கோளாகக் காட்டியிருக்கி

றோம் அல்லாமலும் "இந்து மதக் கொள்கைகளையே கிறிஸ்தவ வேத நூலும், இயேசுநாதரும் உணர்த்தியிருப்பதன் விளக்கம்" என்ற நூலில் இந்துக்கள் செய்து வரும் விக்ரக ஆராதனையும், சைவச் சின்னமாகிய திருநீறு (விபூதி அல்லது கிடாரியின் சாணியைச் சுட்டெரித்த சாம்பல்) தயாரிக்க வேண்டிய முறையையும், அது எல்லாவிதத் தீட்டுகளையும் போக்கிச் சுத்தம் செய்யவும், பாவத்தை பரிகரிக்கவும் உபயோகப்படுத்தப் பெறல் வேண்டும் என்ற உண்மைகளையும் ஆதரித்துக்கிறிஸ்தவ வேதநூலும், இயேசுநாதரும் உணர்த்தியிருக்கும் வசனங்களைத் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். முன்பிறவி, மறுபிறவி உண்டு என்பதற்கும், மனிதனாகப் பிறந்திருக்கிற யாவருக்கும், பிறக்கு முன்னரேயே பெயர் தீர்மானிக்கப் பெற்றிருக்கிற உண்மைகளுக்கும் பைபிளில் இருக்கிற ஆதாரங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

ஒருவருடைய பெயரும், பிறக்க வேண்டிய ஊரும், பெற்றோர்களது பெயரும், அவருக்கு வேண்டிய புகழும், இகழும், இன்பமும், துன்பமும், வயதும் (இவ்வுலகிலுள்ளதும், ஆவி உலகிலுள்ளதும்), சாவும் இவ்வுலகில் ஸ்தால உடல்விட்டு உயிர் சகல அவயங்களும் உடைய ஆவி உடலுடன் பிரிவதும். அவ்வுலகில் ஆவி உடலைவிட்டு உயிர் அணுப்பிரமாணமுள்ள புரியட்டக சரீரத்தோடு பிரிவதும்) ஆகிய சகலமும் அவர் கருவடையும் முன்னரேயே கருணையுள்ள கடவுளால் அவரவர் முன்பிறவிகளில் ஈட்டிய புண்ணியபாவங்களுக்கேற்பத் தீர்மானிக்கப் பெற்றவை என்பதை வலியுறுத்தியே "மேலைத் தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்" என்றும், "பதவீ பூர்வ புண்ணியாணும்" என்றும் சான்றோர் அருளியிருக்கின்றனர். இதனை வலியுறுத்தியே

"பேறு, இழவு, இன்பமோடு, பிணிமூப்பு,
சாக்காடு என்னும்
ஆறும் முன்கருவுட்பட்டது ; அவ்விதி
அனுபவத்தால்
ஏறிடும் முன்பு செய்தகன்மம் இங்கு
இவற்றிற்கு ஏது
தேறு நீ இனிச்செய் கன்மம் மேலுடற்
சேருமென்றே"

என்று அருணந்தி சிவாச்சாரியார் இன்னும் துலக்கமாக அருளியிருக்கிறார். திருவள்ளுவரும் ஊழியலில், ஊழ் என்று தனி அதிகாரம் வகுத்து அதில் ஆண்டவனது தீர்ப்பாகிய தலைவிதி அல்லது தலையெழுத்து எவ்வளவு வலிமையுடையது என்பதைக் கூறியிருக்கிறார் சுய அறிவு கொண்டு முன்செய்த செயல்களுக்குரிய தீர்ப்பே தலையெழுத்தாகும். அது பிறர் மூலம் ஊட்டப் பெறுவது, இப்பிறவியில் நல்லது செய்தால் நல்லதீர்ப்பும், தீயது செய்தால் கெட்ட தீர்ப்பும் கிடைக்குமென்று உணர்ந்து தீமையை விலக்கி நல்லதையே செய்ய வேண்டும்.

தென்னிந்தியாவில் பல இடங்களிலுள்ள நாடி சாஸ்திரம் எனப்படும் ரேகை சாஸ்திரம் மேலே சொன்ன உண்மைகளை எம்மதத்தவரும் மறுக்க முடியாத முறையில் நிரூபிக்கின்றன. இதனை இந்துக்களும், கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும், ஆங்கிலேயர்களும் சோதனை செய்து பார்த்து ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். வானத்தில் ஜோதி சொரூபமாகக் காணப்படுகிற சூரியன், சந்திரன் செவ்வாய், புதன். வியாழன். வெள்ளி, சனி, ராகு, கேது முதலியவற்றைக் கொண்டே சகல வன்மையுள்ள ஆண்டவன் தன்னுடைய நியாயத் தீர்ப்பை அமுல் நடத்துகிறார் என்பதை நன்குணர்ந்த நம்முடைய முன்னோர்கள் ஆலயங்களிலெல்லாம், மூலஸ்தானத்தில் சிவலிங்கத்தையோ, மகாவிஷ்ணுவையோ பிரதிஷ்டை செய்து முன் மண்டபங்களில் மேலே சொன்ன ஒன்பது கிரஹங்களையும், அவை சஞ்சாரம் செய்து உலகத்தை நடத்துகின்ற (மேஷம், ரிஷபம், மிதுனம் கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், என்ற) பன்னிரண்டு ராசிகளையும் கல்லில் அமைத்திருக்கிறார்கள். கோயில்களிலுள்ள முன் மண்டபங்களை மேலே அண்

ணுந்து பார்த்தால் இதனைக் கண்டு கொள்ளலாம். ஆகவே பணம் வருவதும் நிற்பதும், போவதும், படிப்பு வருவதும், வராதிருப்பதும். அப்படிப்பு பயன் தருவதும் தராதிருப்பதும், பதவி வருவதும், நிலைப்பதும். போவதும் ஆண்டவன் போட்ட தீர்ப்பால் அமைந்த கிரஹ நிலைகளின் உச்சம், நட்பு, பகை மூன்றுக் கொன்றுள்ள பார்வைகள் முதலியவற்றைப் பொறுத்தே அமைகின்றன என்ற மறுக்க முடியாத உண்மையை யாவரும் உணர்த்திருத்தல்வேண்டும்.

ஒருவருக்கு இடப்பெற்றிருக்கிற பெயர் யாராலும் காணமுடியாத உயிரிருக்கும் அல்ல. யாவரும் காணக்கூடிய எலும்பு, மாமிசம், தோல், இவற்றாலாகிய பாரமுள்ள உடலுக்கும் அல்ல; ஸ்தூல உடலும் உயிரும் சேர்ந்திருக்கிற நிலைக்கும் அல்ல. சொப்பனத்தில் தொழிற் படுகின்ற சகல அவயங்களும் கொண்ட பாரமில்லாத ஆவி உடலுக்கே பெயரிடப் பெற்றிருக்கிறது. உயிர் தனது உள்ளுடலாகிய ஆவி உடலை இயக்கியே மேலே உள்ள ஸ்தூல உடலாகிய வெளி உடலை இயக்குகிறது. நான்கு பேர் தூக்க வேண்டிய சடலத்தை பாரமில்லாத உள்ளுடலே தூக்கித் திரிகிறது. ஆவி உடலுக்கு இரவு பகல் கிடையாது. எங்கும் செல்வதற்கு வாகன வசதிகள் வேண்டிய தில்லை. ஆவி உடல் இன்ப துன்பம் அனுபவிப்பதற்கு ஸ்தூல உடலின் உதவி தேவையில்லை. ஆனால் அந்த உள்ளுடலின் உதவியின்றி வெளியுடல் தொழில் படுவதில்லை என்ற உண்மைகளை யாவரும் எம்மொழியாளரும் எம்மதத்தவரும் அவரவரது சொப்பன அனுபவங்களிலிருந்து யூகித்து உணர்ந்து கொள்ளலாம். பாரமுள்ள சடலத்திற்குள் அடைபட்டு அதனைச் சதாவும் தூக்கித் திரிந்து கொண்டிருந்த ஆவி உடலுக்கு அந்தச் சுமையைக் கீழே போட்டு விட்டுச் சுதந்திரமாக வாழ்ந்து வரும்படியாகச் செய்கின்ற பெரியதோர் விடுதலையே மரணமாகும் என்பதையும், இறந்தவர்களுக்கு முந்தின பெயரும் முந்தின உறவுப்பிரியமும், அன்பும், ஆதரவும் இன்ப துன்பமும் சொப்பன அனுபவம் போன்று உண்டு என்பதையும், அம்மரணம் உறங்கப் போவது போன்ற செயலே யன்றித் துன்பம் தரக்கூடியதல்ல என்பதனையும், விளக்கி இவ்வுண்மையினை உணர்ந்த யாருக்கும் மரணபயம் ஏற்பட முடியாது என்றும் எல்லோருக்கும் ஆவி உடல் கொடுத்தவரும் அதற்குப் பெயர் இட்டவரும் ஆண்டவனே யாதலால் எல்லா மக்களுக்கும் ஆண்டவனே அம்மையப்பன் ஆகின்றான் என்றும். எல்லோரும் சகோதர சகோதரிகளே என்றும், பெற்றோர்கள் பாரமுள்ள சடலடயாகிய சடலங்களைக் கொடுத்த தாதியர்களே ஆவார்கள் என்றும் ''மரணபயம் தீரும் வழி'' என்ற புத்தகத்தில் பல மேற்கோள்களுடன் எழுதியிருக்கிறோம்.

இப்பூலோக வாழ்வு முடிந்ததும் சாதாரணக் கண்களுக்குத் தெரியாத ஆவி உடலோடு தொடர்ந்து வாழ்ந்து வருகின்ற உண்மையும், அவ்வாழ்வு முடிந்ததும், தெய்வத் தன்மை அடையாத உயிர்கள் திரும்பவும் இப்பூவுலகில் புதிய உடலோடும் பெயரோடும் பிறக்க வேண்டியதிருக்கிற உண்மையும் உறுதிப்படும் பொழுது தான், கண்ணுக்குத் தெரியாத அவ்வுலக வாழ்விலிருந்துதான் கண்ணுக்குத் தெரிகின்ற இவ்வுலக வாழ்விற்கு வந்திருக்கிறோம் என்ற உண்மையும், இப்பூவுலகில் பிறக்கு முன்னர் நாம் வாழ்ந்திருந்தோம் என்ற உண்மையும் தெளிவாகும். ஆகவே ஆவி உலக ஆராய்ச்சியும், இரேகைசாஸ்திரம் எனப்படும் நாடி சாஸ்திர ஆராய்ச்சியும், ஒவ்வொரு பிறவியும், ஒவ்வொரு நியாயத் தீர்ப்பினால் ஏற்பட்டதே என்ற இந்து மதக் கொள்கையை எம்மதத்தவரும் சோதித்துப் பார்த்து ஒப்புக் கொள்ளச் செய்கின்ற வலிமை வாய்ந்த கருவிகளாகும் என்பது உறுதியாகும்.

இந்து சமயம் ஒன்றுதான் அவரவர்கள் இவ்வுலகில் காணப்படுகின்ற பல்வேறு நிலைகளுக்கு அவரவர்கள் சுய அறிவு கொண்டு செய்த நல்வினை தீவினைகளே மூலகாரணம் என்பதைச் சுட்டிக் காட்டித் தன் குற்றத்தைப் பிறர்மேல் செலுத்தாமல் தன்னைத் தானே நொந்து

கொள்ளவும் திருந்தி நடந்து கொள்ள வும், அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும், மன நிம்மதியோடு நல் வாழ்வு வாழ வழி வகுக்கின்றது. அதனாலேயே பிற மதத்தவர்கள் தற்கொலையும் பிறர் கொலையும் செய்கின்ற அளவுக்கு இந்து மதத்தினர் செய்யாதிருக்கின்றனர். இறந்தவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று கிறிஸ்தவர்கள் செய்கின்ற, உண்மைக்கும் பைபிளுக்கும், இயேசுநாதரது போதனைகளுக்கும் மாறான துர்ப்பிரசாரமே இப்பொழுது இந்தியாவிலுள்ள தற்கொலைக்குக் காரணமாகும். ஆண்டவன் இப்பூவுலகில் இவ்வளவு காலம் வாழ வேண்டுமென்று தீர்ப்புப் போட்டிருக்க, அதற்கிடையில் அத்தீர்ப்புக்கு மாறாகத் தன் இஷ்டம்போல் வாழ்க்கை நடத்த முடியாத மனக்கசப்பால் தற்கொலை செய்து கொண்டால் பேயாகத் திரிந்து, அலைந்து இன்னும் அதிகம் கஷ்டப்பட வேண்டியது வரும் என்று தற்கொலையையும், பிறர் கொலையையும் இந்து மதம் வன்மையாகக் கண்டிக்கிறது. அச்செயல் ஒருவன் சிறைச்சாலைக்குள் இத்தனை வருஷம் வாழவேண்டுமென்று, அரசாங்கம் தீர்ப்பு அளித்திருக்க அதற்கு முன்னதாக நேர்வழியை விட்டுக் கட்டிடத்தை உடைத்துக் கொண்டு, கோணல் வழியில் செல்லுகின்ற மூர்க்கரது செயல் போன்றதே என்றாய், அவனுக்கு முந்தின தண்டனையோடு, சிறைச்சாலையிலிருந்து தானாக வெளியேறியதற்குரிய தண்டனையும் உண்டல்லவா? அது போலவே தற்கொலை செய்தவர்களுக்கும் தண்டனை இரட்டிப்பாகும் என்று இந்து மதம் காரண காரியத்தோடு உண்மைகளைப் போதிக்கிறது. இந்து மத உண்மைகள் முதலில் தமிழ் நாட்டிலும் பின் இந்தியா முழுவதும், ஏன் உலகம் முழுவதுமே பரவச் செய்து, மக்கள் பக்தியுடனும், பண்புடனும், வாழச் செய்யவே **தமிழ் நாடு தெய்விகப் பேரவை** திருவருளால் துவங்கப் பெறுகிறது. அது நல்ல முறையில் செயல்பட்டு நற்பலனை அளிக்கவும், உலக மக்கள் எல்லோரும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழவும் திருவருள் பாலிக்குமாறு எம்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

---

## தேவாரம்

ஏரிசையும் வடவாலின் கீழிருந்திங் கீரிருவர்க் கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை உரைத்தொளிசேர் நெறியளித்தோன் நின்ற கோயில்,

பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும் மிழலை யாமே.

—திருஞானசம்பந்தர்

## (5) சீலத்திரு. அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்,

## திருவண்ணாமலை ஆதீனம். குன்றக்குடி

---

தமிழகம் தெய்வம் மணங்கமழும் திருநாடு; விண் அளந்து காட்டி வினைமறைக்கும் திருக்கோயில்கள் பல சூழ்ந்த நாடு; பாசம் துடைத்து – ஞானம் விளக்கி வாழ்விக்கும் திருமடங்கள் நிறைந்த நாடு. தமிழின வரலாற்றில் புகழ் நிறைந்த செய்தி திருக்கோயில்களின் தோற்றமும் திருமடங்களின் தோற்றமாகும். தமிழகத்தையாண்ட மூவேந்தர்களும் – அவர் தம்வழி நின்ற சிற்றரசுகளும் – பின் வந்த குறுநில மன்னர்களும் தமது அரசின் நிலையின்மையைக் கண்டுணர்ந்தவர்கள். ஆதலால் தமது வாழ்க்கையின் இலட்சியமாகப் பேணி வளர்த்த சமய வழிபாட்டு நெறியைப் பேணிப் பாதுகாக்கத் திருக்கோயில்களையும் – சமய வழிப்பட்ட சமுதாயத்தைப் பாதுகாக்கத் திருமடங்களையும் தோற்றுவித்து நிறையப் பெருள் வழங்கினர். அரசுகள் மாறின. ஆயினும் அவர்கள் கண்ட நிறுவனங்கள் இன்றளவும் உலகில் விளக்கமுற நிலவுகின்றன. காலப்போக்கின் காரணமாகத் திருமடங்கள் தம்முடைய இனிய கடமைகளை முழு அளவில் அல்லது தேவைக்கேற்பச் செய்யத் தவறிவிட்டன என்பது மறுக்க முடியாத ஒன்று: அதன் காரணமாகச் சிறந்த தெய்விகச் சிந்தனையில் நிலைபெற்று இன்ப அன்பு கலந்த வாழ்க்கையில் நிலைபெற்றிருக்க வேண்டிய நம்முடைய சமுதாயம் நெறியில்லா நெறிதன்னில் நடைபோடலாயிற்று. இந்தச் சூழ்நிலையில் கடந்த பல ஆண்டுகளாகத் திருமடங்கள் காலத்தின் தேவைக் கேற்ப இணைந்து ஒருமுகப்பட்டுப் பணிகளைச்செய்ய வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வந்தது. இந்த வகையில் அருள் நெறித் திருக்கூட்டத்தினர் சிந்தனை செய்து – செயல்பட்டனர்.

திருக்கோயில்கள் காதலாகி – கசிந்து கண்ணீர் மல்கி நின்று பத்திமை செய்தலுக்குரிய இடம். திருமடங்கள் ஆன்மாக்களின் திருகலாயதோர் சிந்தையினைத் திருத்தி – கேளாதனவற்றைக் கேட்பித்து – காணாதனவற்றைக் காண்பித்துப் பரமாயதோர் ஆனந்தம் பெற்று மகிழத் தூண்டுதலும் — கற்றுத் தருதலும் – வழி நடத்தலும் – துணை நிற்றலுமாகும் திருமடங்களின் கடமை. திருக்கோயில் சென்று திருவருள் சிந்தனையில் திளைத்திடத் திருமடங்களின் வாயில்களைத் துணைக் கொண்டே மக்கள் வருவர். இந்த அரிய பணியைச் செய்ய வேண்டிய திருமடங்கள், மக்கள் சமுதாயத்தினின்று தூய்மையின் பேராலும் மரியாதை என்ற பெயராலும் செல்வச் செழிப்பின் காரணமாகவும் நெடுந்தூரம் விலகிச் சென்றுவிட்டன. மக்கள் தங்களுடைய ஆன்மா காவலின்றி – அநாதைகளாகி, கண்ட கண்ட வழிச் செல்லத் தலைப்பட்டு – கடைசியில் நாத்திக நெறிக்கும் ஆட்படும் நிலை ஏற்பட்டு விட்டது. தமிழகம் திருவருள் வைப்பு நிறைந்த நாடு. மாதேவனை வான்பழித்து இம்மண் புகுந்து – திருவருள் பெருக்கிய நாடானதால் எப்போதும் முற்றிலும் கெட்டு விடுவதில்லை. நிலத்தின்கண் நீருற்று மறைந்து கிடந்து அகழும் போது வெளிப்படுதல்போலத் தமிழகத்திலும் திருவருள் நிகழ்ச்சிகள் நிகழும். அது ஒரு எழுச்சியும் ஏற்றமும் நிறைந்த திருப்பு முனையாக அமையும். ஞாலமுய்ய—நாமுய்யச் சைவ நன்னெறியின் சிலமுய்யத் திருமுறைகளை அருளிச் செய்து நாட்டின் நாலு புறங்களிலும் நடமாடி நன்மை பெருகு அருள் நெறியை வளர்த்த நாயன்மார்கள் காலம் – ஒரு திருப்பு முனை. திருமுறைகளைக் கண்டு— நாட்டிற்கு வழங்கிய அநபாய சோழன் காலம் ஒரு திருப்பு முனை. அறிவின் பிணக்கில் சமயவாது பெருகிய காலத்தில் தத்துவச் செறிவோடு சமய சாத்திரங்களை இயற்றித் தந்த சமய ஆசிரியன்மார்கள் காலம்—ஒரு திருப்பு முனை! பதிபசு பாசத்தை ஆய்ந்து அடங்கி ஒழுகி—மக்கட் சமுதாயத்தை ஒழுக்க நெறிப் படுத்தும் திருமடங்கள் தோன்றிய காலம் ஒரு திருப்பு முனை! இன்று கூடித் தொழுது அடியார் நடுவுள் இருந்து தேசம் உய்ய

திருத் தொண்டின் வழித் திருமடங்கள் ஈடுபடத் தெய்விகப் பேரவை தோன்றி யிருப்பது ஒரு திருப்பு முனை. இன்றைய எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் வித்தாக அமைந்தது திருமுறைக் காவலர் **மா. சே. சாரங்கபாணி முதலியார்** அவர்களின் நன்மனமும் அவர் தம் உள்ளார்ந்த திருவருள் தோய்வுமேயாகும். அவர் தம் சாதனை அநபாய சோழனின் சாதனையை ஒத்தது. தமிழகச் சமய வரலாறுஇதனைப் புகழ்படப் பாராட்டிக் கொள்ளும் என்பது உண்மை.

தெய்விகப் பேரவை சம்பிரதாயமான ஓரமைப்பாக விளங்காது என்று நம்புகின்றோம். அது மேற்கொள்ள வேண்டிய கடமைகள் ஆயிரம் ஆயிரம் உள்ளன. உள்ளார்ந்த உணர்வுடன் நடைமுறைக்கியைந்த மனப்பாங்குடன் பேரவை அந்தக் கடமைகளைச் சாதிக்கச் சிந்தையுள் தெளிவாகவும் தெளிவினுள் சிவமாகவும் நின்று அருள்வழங்கிப் பேரவையினை வழி நடத்த வேண்டும் என்பது பிரார்த்தனை.

பேரவையின் முதல் தலைவராகத் தருமையும்—கமலையும் விரிதமிழ்க் கூடலும் வீற்றிருந்து அருள் செய்யும் **தருமைக் குருமணி** அமர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இடர்ப்பாடுற்ற காலத்தில் செந்தமிழையும்—சிவநெறியையும் காப்பாற்றிய தலைநகரம் மதுரை. திருவால வாயில் அங்கயற்கண்ணியொடு அமர்ந்து திருவருள் வழங்கியருளும் அழகன் - ஆலவாயிலுறை அப்பன்—நம்முடைய வழிவழிக் குடிமுழுதும் ஆட்கொள்ளும் தந்தை - இன்றும் அவன் நம்மை ஆட்கொண்டருளும் களம், திருவிளையாடல், தெய்விகப் பேரவை!

வாழ்க தெய்விகப் பேரவை!

வளர்க அதன் பணி,

---

## திவ்வியப் பிரபந்தம்

[redacted]

உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும்வெற் றிலையுமெல்லாம்
கண்ணன், எம்பெருமா னென்றென் றேகண்கள் நீர்மல்கி,
மண்ணினுள் அவன்சீர் வளமமிக் கவனூர் வினவி,
திண்ண மென்னிள மான்புகு மூர்திருக் கோளூரே.

— நம்மாழ்வார்.

தேவிமா ராவார் திருமகள் பூமி
யேவமற் றமரராட் செய்வார்,
மேவிய வுலகம் மூன்றவை யாட்சி,
வேண்டுவேண் டுருவம்நின் னுருவம்,
பாவியேன் றன்னை யடுகின்ற கமலக்
கண்ணதோர் பவளவாய் மணியே,
ஆவியே! அமுதே! அலைகடல் கடைந்த
அப்பனே! காணுமா றருளாய்.

— நம்மாழ்வார்.

## (6) ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
## ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்

"நம: பார்வதி பதயே, அரகர மகாதேவா"

அன்பர்களே,

'மகாதேவா' என்று சொன்னால் தேவர்களில் ஒரு மகாதேவன் என்று அர்த்தம். 'நம: பார்வதி பதயே' என்று சொன்னால், பார்வதி நாயகன் பரமசிவனைக் குறிக்கும். அப்பெயரையே எண்ணி அழைத்தால் அவன் செவி சாய்த்து நமக்குக் கருணை புரிவான். நீங்கள் எல்லோரும் சேர்ந்து இந்த நமச்சிவாய மந்திரத்தை ஒருமுறை சொன்னால் உங்கள் எல்லோருடைய உள்ளமும் குளிர்வதாகும். காலையிலும். மாலையிலும் 11 முறை இதைச் சொன்னால் உங்களுடைய பாவங்கள் எல்லாம், சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்',

நிற்க, இந்தப் பேரவையைக்கூட்டிய அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் திரு. சாரங்கபாணி முதலியார் அவர்களுக்கு நீங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளீர்கள். ஆஸ்திகப் பெருமக்களே! அவர்களுடைய விடா முயற்சியினாலேதான் அவர்கள் அன்பின் வசப்பட்டு, இங்கே ஆச்சாரியாள், மகாசந்நிதானங்கள் எல்லோரும் எழுந்தருளிக் காட்சி அருளியிருக்கின்றார்கள். நீங்கள் செய்த பாக்கியமே பாக்கியம். என்னையும் இங்குப் பேச வைத்த திருவருளை வாழ்த்திக்கொண்டு சில சொல்லுகின்றேன்.

சென்னை நகரில் முக்கியமாக, தாய்மார்கள் முதற்கொண்டு வீட்டில் கணக்கு எழுதுவது பழக்கம். கணக்கு எழுதாவிட்டால், அவர்கள் வீட்டுக்காரர் இந்த மாதம் என்ன கொண்டு வந்தார். என்ன மீதம் இருக்கிறது. அடுத்த மாதம் செலவுக்கு ஏதாவது வைத்து இருக்கிறாரா அல்லது சேவிங்க்ஸ் பாங்க்கில் ஏதாவது போட முடியுமா? என்ற விவரங்கள் தெரியாது. அதனால் கணக்குப் பார்ப்பது வழக்கம். கடவுள் கணக்கு ஒன்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆண்டவன் நம்முடைய கணக்கை எழுதுகிறான். நாம் எல்லோரும் நம்முடைய கணக்கை எழுதிக்கொள்கிறோம். ஆனால் ஆண்டவன் ஆன்மாக்கள் ஆகிய நம்முடைய வரவு செலவுக்காக டி, சி. பி. போட்டு எழுதிக்கொண்டிருக்கிறான். நமக்காக அவன்தான் எத்தனை சிரமம் எடுத்துக்கொள்கின்றான். நம்மீது கருணை பாலிக்கும் பொருட்டே அவன் அவ்வாறு கணக்கு எழுதுகிறான். எனக்கு முன் மதுரை ஆதீன மகா சந்நிதானம் அவர்கள், முற்பிறவியிற் செய்த வினை இப்பிறவியில் வந்து பயனைத் தரும்; முன்பு செய்தது புண்ணியமானால் இன்பம் அடைவோம். பாவமானால் அதற்குரிய துன்பங்களை அனுபவித்தே தீர வேண்டும் என்று சொன்னதுபோல, அப்பர் சுவாமிகள் ஒரு கணக்குச் சொல்லுகின்றார். உயிர்கள் செய்யும் புண்ணிய பாவங்களை அவரவர்கள் செய்த புண்ணிய பாவத்திற்குத் தக்கவாறு அருள் பாலிக்கிறார். இதை நம் அப்பர்சுவாமிகள்,

> "தொழுது தூ மலர் தூவித் துதித்துநின்று
> அழுது காமுற்று அரற்று கின்றாரையும்
> பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
> எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே"

எனப் பாடுகின்றார்.

ஆகையால் நாம் எய்திய மானிடப் பிறவிதான் அரிது. தாயுமானசாமிகளும் இப்பிறவி எடுத்தகின் பயனை அடையாது இவர்கள் வீணாகுகின்றார்களே என்றார். ஆகையால், உங்களுடைய வாழ்நாளை நல்ல பயனுள்ளதாக ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்! அப்படிச் செய்தால் எடுத்த பிறவியில் நீங்கள் நினைத்த காரியங்கள் யாவும் சித்திக்கும்.

ஆண்டவன் எழுதிக்கொள்கின்ற அந்தக் கணக்கில், நாம் அவனுடைய அருளைப்பெற வேண்டுமென்ற ஆசையோடு,

நாம் எல்லோரும் ஆண்டவனைப் பிரார்த்தித்து ஆண்டவனுடைய திருவருளைப் போற்றுவோமாக.

இங்குக் கூடியிருக்கும் எல்லா அன்பர்களுக்கும், செந்திலாண்டவன் திருவருள் உண்டாவதாகுக. 'நமச்சிவாய' என்று உங்களைச் சொல்லக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மந்திரத்தைச் சொன்னால் நீங்கள் முன் செய்த பாவங்கள் எல்லாம் உடனே விலகும். இம்மாதிரி நீங்கள் வீட்டுக்குச் சென்று வீட்டுக் குழந்தைகளுக்கு முன் சொல்ல வேண்டும். உடனே என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா என்று சொல்லுவார்கள். அதைப் பற்றிக் கவலைப்படாமல் வீட்டிற்குப் போனவுடனே சொல்வீர்கள் என்று நம்புகிறேன். வீட்டிற்குச் சென்று நமச்சிவாய மந்திரத்தை நீங்கள் இடைவிடாமல் சொல்லி இறைவனைத் தியானிக்க வேண்டும்.

'நம: பார்வதி பதயே'

---

## மதிப்புரை

**மேக விடு தூது:**

இந்நூல் மதுரை ஸ்ரீ அங்கயற்கண் அம்மையின் மீது, பூம்புகார் மேலையூர்ச் சிவராஜயோக மடம் மறைத்திரு. மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள் பாடியது.

இதன்கண், வெண்மேகத்திற்கு வெண்ணீறொளியும், அது திரண்டு வானிற் படர்தற்கு வாணிகத்தின் சாத்தும், அதன் கருமைக்குத் திருமாலின் நிறமும், அது மீள்தலுக்கு நீள் நிதிதேடி மீள்வாரும், அது மின்னெறிதலுக்கு வாள் எயிறு தோன்ற நகுவாரும் முதலியனவாகக் கூறிய உவமைகள் மிக்க சுவை பயக்கின்றன. பாலைத்திணை ஆராத காமம், அன்பறியார் உள்ளம், ஓராக் கொடுங்கோல் வேந்தன் போன்றது; கார் காலம் முல்லை மூறுவலிப்ப, கொன்றை முகையவிழ, காயா மலர் விரிய, இல்லமொடு தோன்றி இணர் ஊழப்ப, புதல்மலர, மரங்கள் தழை அடர, விளங்குகின்றது; என்றெல்லாம் கவிஞர் பாடியிருப்பது மிகவும் சிறப்பாக உள்ளது. மேகவிடு தூது என்ற பெயருக்கு ஏற்ப, மழை புயல் கொண்டல் மாரி வான் கார் மஞ்சு செல் விசும்பு எழிலி முதலிய பெயர்களை ஆசிரியர் பொருத்தமுறக் கையாண்டுள்ளார். பசுவிற் பாலாய், கரும்பில் சாறாய், மலரில் தேனாய், தெங்கில் இளநீராய்ச் சுவை தருவது மேகமே எனக் குறிப்பிட்டு,

"ஆக்குவாய் காப்பா யழிக்கவும்வல் லாய்நின்னைப்
போக்கறு நூல் செய்த புலவோனும்—நோக்கிவியந்
தெல்லாம் மழையென் றியம்பி முடித்தனனேல்
சொல்லேன்? இனியொன்று சொல்லக்கேள்"

என்று ஆசிரியர் நூலின் முற்பகுதியை அழகுற அமைத்துள்ளார். மீனாட்சியம்மையின் அருளைக் குமரகுருபர சுவாமிகள்—அபிராமி பட்டர்—திருவண்ணாமலைக் குருநமச்சிவாயர் முதலியோர்களின் வரலாற்றுக் குறிப்புக்களோடியைத்துப் பாடியிருப்பது, ஆசிரியரின் சான்றோர் ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறது. நூலின் 76-ஆம் வரியில்,

"காளமுகி லேஎனது காதையையும் ஈங்கினியான்
நீளமின் றிச் சற்றே நிகழ்த்தக் கேள்"

என்று தொடங்கி 126-ஆம் வரி வரையில், தம்முடைய வாழ்க்கை வரலாற்றையும், தமக்கு நேர்ந்த இன்ப துன்பங்களையும் உள்ளம் உருகி உள்ளவாறு எடுத்துப் பாடியிருப்பது, படிப்பவர்களுக்கு மகிழ்ச்சியும் உருக்கமும் விளைவிக்கின்றது. தமிழ்க் கவிதை உலகில் இங்ஙனம் உள்ளது உள்ளபடி வரன்முறையாக எடுத்து விளக்கி உருக்கமாகப் பாடிய சிறப்பு, இந்நூலாசிரியருக்கே உரியதெனலாம். அம்பிகையை நூலின் இடை இடையே துதித்திருக்கும் தூய இனிய செந்தமிழ்த் தொடர்கள் பெரிதும் போற்றற்பாலன. உருவிற் சிறியதாயினும், பொருளால் மிக்க சிறப்புடையது இந்நூல்! — ஆசிரியர்.

## (7) மயிலம் ஸ்ரீ பொம்மபுர ஆதீனம் 19-ஆம் பட்டம்

## ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மகாசந்நிதானம்

உலகம் இன்ப துன்பங்களுக்குட்பட்டது. இவ்விரண்டும் நல்வினை தீவினைகளால் ஏற்படுவன. இவ்வினைகளை உயிர்கள் அறிந்தும் அறியாமலும் செய்கின்றன; நல்லது தீயது அறியாமல் செய்யும் உயிர்கள் விலங்கு, பறவை முதலியன. அறிந்து செய்யும் உயிர்கள் மனித உயிர்களே. அறியாமல் செய்யும் மனித உயிர்களும் உண்டு, அறிந்து செய்யும் மனிதர்கள் பகுத்தறிவுள்ளவர்களாதலின் மக்கள் எனப் பெறுவர். அறியாது செய்யும் மனிதர்கள் பகுத்தறிவில்லாதவராதலின் விலங்கொடு சேர்ந்து மாக்கள் எனப் பெறுவர். இன்றைய நிலையில் மக்கள் நிலையில் உள்ள மனிதர்களைக் காட்டிலும் மாக்கள்நிலையில் உள்ள மனிதர்களே மிகுதியும் உள்ளனர். அதனால்தான் மாக்களால் நிகழும் தீமைகள் அதிகம் காணப்படுகின்றன, மாக்களால் நன்மைகளும் நிகழாமலில்லை. மாக்களால் நன்மைகள் அதிகம் நிகழுமானால் உலகம் அமைதியாக இருக்கும். தீமைகள் நிகழுமானால் உலகம் கொந்தளிப்பாக இருக்கும்.

நன்மைகளைச் செய்யும் மக்கள் நல்லது எது தீயது எது என்று பகுத்துணர்ந்து நல்லதையே மேற்கொள்வார்கள். அவ்வாறு கொள்வதற்கு அவர்களின் கடவுள் உணர்வே காரணமாம். தீமைகளைச் செய்யும் மக்கள் நல்லது கெட்டது பகுத்துணரும் ஆற்றல் இருந்தும் கடவுளுணர்வில்லாமையால் தீயதைச் செய்கின்றனர். எனவே கடவுளுணர்வு பெருகிய மக்கள் அதிகம் உள்ள காலத்தில் உலகம் அமைதியில் இருக்கும்- அஃதில்லாதவர்கள் காலத்தில் கொந்தளிப்பில் இருக்கும். அக் கொந்தளிப்பு மிகுகின்ற காலத்தில் அதை அடக்கக் கடவுள் தானுகவோ அடியவர் மூலமாகவோ மக்களுக்கு அருள் பாலிக்கின்ருர். கடவுள் தானுகவே புரிந்த திருவிளையாடல்கள் பல. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர் போன்ற அடியவர்களையும், ஆழ்வாராதியர்களையும்கொண்டு புரிந்த திருவருளும் பல.

அடியவர்களைக் கொண்டு தீமைகளை அடக்கிவந்த முறையில் ஏற்பட்டனவே திருமடங்கள். சிவபிரான் கயிலையில் மேற்கு வாயில் காவலராக இருந்த சங்குகன்னர் என்ற கணத்தலைவரைப் பூமிக்கு அனுப்பி வீரசைவமாம் நன்னெறியினை வளர்க்கச் செய்தார். அந்நிலையில் தோன்றி வளர்ந்து வருவதே எங்கள் மயிலம்—பொம்மபுர ஆதீனம். இப்படியே பிற திருமடங்களும் வந்தன,

திருமடங்கள் யாவும் ஒரே நெறியில் இருப்பனவல்ல. வீரசைவம், சைவம், வைணவம், கௌமாரம் முதலிய பல பிரிவின; அதனுல் வெவ்வேறு சமயத்தன. என்ருலும் யாவும் "கடவுள் ஒருவர் உண்டு" என்ற கொள்கையில் மாறுபடவில்லை. அக் கொள்கையில் நின்று உலகில் தம் சமயங்களைப் பரப்பி வருகின்றன.

இந்தியாவின் மிகப் பழைய சமயங்களாக சைவம், வைணவம் என்ற பெரும் சமயங்கள் உள்ளன. யாவும் இவ்விரண்டில் அடங்கும். இந்தியச் சமயங்களாகக் கருதப்படும் இவற்றுக்கும் இவற்றின் அடங்கும் சமயங்களுக்கும் பொதுவாக இந்து சமயம் என்று பெயரிட்டனர். இச் சமயத் திருமடங்கள் தம் கடமைகளைச் செய்து வந்தாலும் தீயனவற்றின் தாக்குதல் பெருகி வருகிறது இன்று. இதனுல் கடவுள் உணர்வே இல்லாமல் போய்விடும். இதனைப் போக்குதல் திருமடங்களின் கடமை, இதை யறிந்த நிலையில் தான் நம் தமிழகத் திருமடங்கள் ஒன்று சேர்ந்தன. "தமிழ்நாடு தெய்விகப் பேரவை"யை ஏற்படுத்தின. இப்பேரவையானது பல சமய நெறிகளைப் பரப்புவதைவிடப் பொதுவான கடவுட் கொள்கையை நிலைநாட்ட வேண்டிய அவசி

யத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாறே இது செயல்படும். இது செயல்பட வேண்டிய முறைகள் பல. அவற்றுள் ஒரு முறை எங்களால் பல ஆண்டுகளாகச் செயல் படுத்தப் பெற்று வருகின்றது.

கடவுளை அப்பரடிகள் 'தமிழன்' என்றார், சிவபிரான் பாண்டியனாகவும், உமையம்மை மீனாட்சியம்மையாகவும் முருகவேள் உக்கிர குமார பாண்டியனாகவும் எழுந்தருளியது தமிழமுதத்தைக் கூட்டுண எழுந்த வேட்கையால் என்று குமர குருபரர் கூறினர். திருமாலைப் பைந்தமிழ்ப்பின் சென்றவர் என்பர். எங்கள் ஆதீனப் புலவர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்.

> "விரைவிடை இவரும் நினைப்பிறவாமை
> வேண்டுநர் வேண்டுக மதுரம்
> பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக்கணியும்
> பிறவியே வேண்டுவன் தமியேன்"
>
> (சோணசைலமாலை)

என்று சிவபிரானுக்குத் தமிழ் மலரணியும் பிறவி வேண்டும் என்றார். எனவே நாட்டில் சிறப்பாகத் தமிழகத்தில் கடவுளுணர்வு பெருகச் செய்யவேண்டும் என்றால்தமிழுணர்வுபெருகச்செய்யவேண்டும் என்பது தெளிவு. எனவே தமிழ்த் தொண்டு கடவுள் தொண்டாம். எங்கள் ஆதீனத்து 18-ஆம் பட்டத்து ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் அக் கொள்கையிலேயே ஒரு தமிழ்க் கல்லூரியை நிறுவினார்கள். அதைத் தோற்றுவிக்குமுன் 'முருகன் செந்தமிழ்க் கழகம்' என்ற பெயரில் ஒரு கழகம் தோற்றுவித்தார்கள். அதன் மூலம் கடவுட்பணி செய்து வந்தார்கள். அக்கழகத்தின் வளர்ச்சியே மேற்படி "சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி' தோன்றக் காரணமாக இருந்தது. அக்கழகம் இன்னும் செய்து வரும் தொண்டுகள் பின்வருவன :

(1) கல்லூரி மாணவர்களைக் கொண்டு மயிலம் முருகன் திருக்கோயில் வெள்ளிக்கிழமை தோறும் வார வழிபாடு நடத்தி வருகின்றது.

(2) விழாக் காலங்களில் சொற்பொழிவின் மூலம் சமயப் பணி செய்து வருகின்றது.

(3) 'தொண்டர் குழு' என்று ஒரு குழுவினை அமைத்து மயிலத்துச் சுற்றுப்புற ஊர்களில் சென்று அங்கங்கே கழகம் அமைத்தும் சொற்பொழிவாற்றியும் கடவுளுணர்வைப் பெருகச் செய்து வருகின்றது. கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் இக் குழுவுக்குத் தலைவராக இருந்து வருவார். இத் தொண்டர் குழுவால் சிற்றூர் மக்கள் கடவுளுணர்வு பெறுதலே யன்றிக் கல்லூரி மாணவர்களும் தமக்குள்ள கடவுளுணர்வினைப் பெருக்கிக் கொண்டு உறைப்பாக அதில் நிற்றலோடு பிறர்க்கும் எடுத்துரைக்கும் ஆற்றலும் பெறுகின்றனர். எனவே மயிலத்துச் சுற்றுப்புற ஊர்களில் மட்டுமன்றிக் கல்லூரியினின்றும் படித்து வெளியேறும் மாணவர்களால் அவரவர் ஊர்களிலும் கடவுள் உணர்வு பெருகுவதற்கு இக்குழு துணை செய்வதாகிறது.

இப்படியே இன்னும் சில திருமடங்களும் செய்து வருகின்றன. இன்று தெய்விகப் பேரவையானது செயல்படுங் காலத்தில் எங்கள் திருமடம் மேற்கொண்டு இச்செயலையும் ஏற்றுத் தானும் செயல்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

'இப்பேரவை என்றும் நிலவுக' என எங்கள் ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகளையும் முருகப் பெருமானையும் நினைவு கூர்கிறோம்,

வாழ்க சீரடியாரெல்லாம்.

## (8) ஸ்ரீலஸ்ரீ தவத்திரு சுந்தர சுவாமிகள், கௌமார மடாலயம், சிரவணபுரம், கோவை-6.

நமது பாரதநாடு சமயப் பண்பாட்டால் உயர்ந்த நாடு. மேலை நாடுகளை விட மேலான சிறப்பு ஒன்று நமது நாட்டுக்கு உள்ளது. அது ஆன்மீக தத்துவமாகும். கண்ணுக்குப் புலனாகும் பௌதிகப் பொருள்களைக் கொண்டு, மேனாட்டு விஞ்ஞானிகள், மனிதனுக்குத் தேவையான பல வசதிகளைத் தருகின்றனர், நமது நாட்டு மெஞ்ஞானிகளோ எனில், கண் முதலான ஐம்புலன்களால் காண முடியாதவையான, உயிர், கடவுள் முதலான மெய்ப் பொருள் தத்துவங்களை ஆராய்ந்து பல உண்மைகளைக் கூறிவைத்துள்ளார்கள்.

நமது தமிழ்நாட்டில் சைவ, வைணவ, சமயங்களை மறைத்து, சமண, பௌத்த மதங்கள் விரிந்து, நாடாள்கின்ற மன்னரும், குடிமக்களும் சமண சமயத்திலும், பௌத்த சமயத்திலும் சார்ந்து ஒழுகி வந்தனர். அக்காலத்தில்தான், அவர்களது சமய இலக்கியங்கள், இலக்கண நூல்கள், நீதி நூல்கள் முதலியன சமணர்களால் இயற்றப்பட்டன. இந்நிலையில்தான் சமயாச்சாரியர்களும் ஆழ்வார் ஆதியர்களும் தோன்றி, மன்னர்களையும், மக்களையும் சைவ, வைணவ சமயங்களில் ஒழுகும்படி செய்தனர். மன்னர்களது உள்ளங்களை மாற்றி, வானளாவிய கோபுரங்களையும், கோயில்களையும் கட்டும்படி செய்தனர். மன்னர்கள் தாம் வாழ்ந்த அரண்மனைகளைப் பெரிதாகக் கட்டாமல் தேவாலயங்களைப் பெரிதாகக் கட்டினர். ராசராசன் வாழ்ந்த அரண்மனையும், மதுரை ஆலவாய்க் கோயிலைக் கட்டின பாண்டியன் அரண்மனையும், இருந்த இடம் தெரியவில்லை. ஆனால் அவர்கள் கட்டிய திருக்கோயில்கள் இன்று நமது பாரதநாட்டிற்கே சிறப்புத் தந்துகொண்டிருக்கின்றன. இக்கோயில்களைப் போல இன்று நம்மால் கட்ட முடியுமா? மன்னர்களுக்கு இத்தகைய மனப் பண்பை உண்டாக்கினர், நாயன்மார்களும், ஆழ்வார்களும். நாட்டிலுள்ள கோயில்களுக்கெல்லாம் கால் நடையாகவே சென்று பதிகம் பாடி இறைவனை வழிபட்டு, ஆங்காங்கு உள்ள மக்களையெல்லாம் சமய நெறி பற்றி வாழச்செய்தார்கள். நாடாளும் மன்னர்களே சமண மதம் சார்ந்து சமண சமயத்தை ஆதரித்த அக்காலத்தில் திருநீறு அணிந்தவர்களைக்கண்ணில் காண்டலே கூடாது, முட்டு என்று சொல்லி வந்த காலத்தில் நாடு முழுவதும் நடந்தே சென்று சைவ, வைணவ சமயங்களைப் பரப்பினார்கள். விரைந்து செல்லும் வாகன வசதியும், ஒலி பெருக்கி முதலான பல சாதனங்களும் உள்ள இந்நாளில், நமது சமயச் செந்நெறியை நாட்டினிடம் பரப்ப நாம் சரியாக முயற்சி எடுத்துக் கொள்ள வில்லை.

சுதந்திரம் பெற்ற நாட்டினராகிய நாம், நம் நாட்டின் பண்பாடாகிய வைதிக சமய நெறிகளை, இந்து தர்மத்தை, சாதாரண மக்கள் உள்ளத்திலும் பதியும்படி செய்யவேண்டும். வாழ்க்கை வேறு சமயம் வேறு என்று இல்லாமல், வாழ்வும் சமயமும் ஒன்றாகப் பிணையும் சிறந்த நிலையை உண்டாக்க வேண்டும். உணவும் தண்ணீரும் மூச்சுக் காற்றும் போலச் சமயமும் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்ற எண்ணம் மக்கள் மனத்தில் உண்டாக்க வேண்டும். இங்கு, கோயமுத்தூர்ப் பகுதியில், பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களும், பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுமான, இரண்டாயிரம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, "மருதமலை திரு. அருணகிரிநாதர் அருள் நெறிக் கிருத்திகைக் கழகம்", மருதமலையில் கிருத்திகை தோறும் அபிஷேக ஆராதனைகள் நடத்தி வருவதோடு, இரண்டாயிரம் உறுப்பினர்க்கும் திருநீற்றுப் பிரசாதம் அளித்து வருகிறது. கிருத்திகைக்கு மறுநாள், கோவை அரசினர் மருத்துவ மனையிலும் மற்றும் சில மருத்துவ மனையிலும் உள்ள பிணியாளர் அனைவருக்கும், கிருத்திகை அபிஷேகத்

திருநீறு வழங்கி வருகிறது. கோவை மத்தியச் சிறைச்சாலையில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பஜனையும் நீதிபோதனையும் சமய போதனைச் சொற்பொழிவுகளும் நடத்தி வருகிறோம். எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும், தெய்விகப் பேரவையின் சார்பில் இதுபோன்ற சமயப்பணிகளைத் தொடங்க வேண்டும். நமது இந்து சமயத்தில் சேர விரும்பும் பிற மதத்தவர்களை, விதிப்படி சமயத் தீக்கை செய்து, இந்து வாக்கவேண்டும். இந்த மதமாற்றம் சில இடங்களில் நடைபெற்று வருகிறது. இது எல்லா இடங்களிலும் நடைபெறத் ''தெய்விகப் பேரவை'' முயற்சி செய்ய வேண்டும்.

தேர்த்திருவிழா நடந்துகொண்டிருந்த கோயில்களில் தேர்சிதைந்ததின் காரணமாக விழா நின்றுபோயிருந்தால் தேரைப் புதுப்பித்து விழாவை நடத்தப் 'பேரவை' முயலவேண்டும். தேர்த்திருவிழாவில், பல்லாயிரம் மக்கள் ஒன்று கூடி வழிபடும் நிலை உண்டாகிறது. அண்மையில் சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை (சதுரகிரி) அறப்பளீசுரர் கோயிலுக்குச்சென்று இருந்தோம். மலையின் மீது பதினான்கு மைல் காரில் சென்று, கால் நடையாக ஒன்பது மைல் சென்று, ஒரு ஆற்றைக் கடந்து கோயிலை அடைந்தோம். அழகான கோயில், அங்கு அறப்பளீஸ்வரர், அறம் வளர்த்த நாயகி, சண்முகப் பெருமான் முதலான மூலவர்களும், பெரும் திருவிழாவிற்குரிய உற்சவர்களான பஞ்சமூர்த்திகள், நடராசர், சிவகாமி, சந்திரசேகரர், முதலான மூர்த்திகளும் இருந்தன. தேர் சிதைந்து போய், சில தேர்ச் சிற்பங்களே இருக்கின்றன. கொல்லிமலையில் சுமார் இருநூறு சிறு கிராமங்கள் இருக்கின்றன. இருபதினாயிரம் மக்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் உரிய திருக்கோயில் அறப்பளீஸ்வரர் கோயில். எல்லா ஊரவர்களும் ஒன்று கூடி ஆடிமாதம் தேர்த்திருவிழா நடத்துகின்றனர். தேர் சிதைந்துவிட்டதால் சாதாரண சப்பரத்தில் வைத்துத் திருவிழா நடத்துகின்றனர். வருவாய் இல்லாத மலைவாசிகள் வாழுகின்ற அந்த மலையில் தேர் செய்து கொடுப்பது மிகவும் அவசியம். மரம் அங்கேயே ஏராளமாகக் கிடைக்கும். அந்த மலைவாழ் மக்கள் ஒன்று கூடிச் சமய நெறி ஒழுகச் செய்வதற்குத் திருத்தேர் செய்து தருவது ஒரு சிறந்த செயலாகும். கோவை மாநகரிலிருந்து தடாகம் என்ற ஊருக்கு மேற்கே அட்டப்பாடி மலை என்ற மலைப் பிரதேசம் (கேரளா நாட்டிற்குச் சேர்ந்தது) இருக்கிறது. அங்கு பல ஊர்களில் இந்துக் கோயில் எதுவும் இல்லை. இரண்டு ஆண்டுகட்கு முன் அங்கு சிறுவாணி ஆற்றின் கரையில் ஒரு விநாயகர் வைத்துப் பிரதிஷ்டை செய்துவந்தோம். அந்தப் பகுதியில் பல கிராமங்களுக்கு சிறு கோயிலாவது அல்லது விநாயகர் மேடையாவது கட்டித்தர வேண்டும்.

நால்வர் வரலாறு, ஆழ்வார்கள் வரலாறு, இந்து சமயங்களின் தத்துவம் முதலியவற்றைச் சிறிய அளவில் எழுதித் தொடக்கப்பள்ளி மாணவர்கள் முதல் எல்லாக் கல்வி நிலைக்கும் உரியபடி வெளியிட்டுப் படிக்கும்படி செய்யவேண்டும். தேவாரம், பிரபந்தம், திருப்புகழ் ஆகிய நூல்களில் சில பாடல்கள் அச்சிட்டு அவைகளைப் படித்து ஒப்புவிக்கும் பள்ளி மாணவர்கட்கு, ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனியே பரிசுகள் வைக்க வேண்டும்.

தேவாரம், பிரபந்தம், திருப்புகழ், இசை வகுப்புகள், வேத ஆகமப் பாடசாலைகள் மாவட்டத்திற்கு ஒன்றுவது அவசியம் இருக்க வேண்டும். வாரத்தில் ஒருநாள் ஒவ்வொரு ஊரிலும் அந்த ஊரிலுள்ள கோயிலுக்குக் கூட்டமாகச் சென்று வார வழிபாடு நடத்தவும், இறைவன் நாமங்கள் கூட்டாகப்பாடிப் பரவவும் கிராம சங்கங்கள் மூலம் ஏற்படுத்த வேண்டும். அதன் ஆரம்பத்திற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியைப் பேரவை கொடுத்து உதவ வேண்டும். ஒல்லும் வகையால் மக்களைச் சமய நெறி பற்றி வாழச் செய்யப் பேரவைக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## (9) காஞ்சி தொண்டை மண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளுரை

இப் பேரவை 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை' என்றுள்ளது. எல்லா நாட்டிற்கும் இவ்வவை இயன்ற அளவெல்லாம் நலமே புரியும். இதைக் கூட்டிய திருமுறைக்காவலர் உயர்திருவாளர் **மா. சே. சாரங்கபாணி முதலியார்** பி. ஏ., பி. எல்., அவர்களுக்கும், உறுதுணையாயுள்ள சென்னை மாநில முதலமைச்சர் கனம் எம். **பக்தவத்சலம்**, பீ. ஏ., பி. எல்., அவர்களுக்கும், அன்பர் பிறர்க்கும் தமிழகம் பெரிதும் கடப்பாடுடையது.

தமிழகத்தே இதுபோல ஒரு பேரவை கூடியிராது. இருவர் மூவர் கூடிய அருட்கூட்டமே உலகிற்கு அளவிலா நலன் விளைத்துள்ளது, திருவீழிமிழலையில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கூடிய கூட்டம் விளைத்த பெருநலத்தால் உலகம் உளதாயிற்று என்று நம்பியாண்டார் நம்பி அருளினர். இதிற்குறித்த உலகம் திருவீழிமிழலைப் பக்கத்திற் பசியால் வாடி வருந்திய மக்கட் கூட்டத்தை நோக்கியதாகும்.

> பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில்பெற்ற
> நீடிய சீர்த்திரு ஞானசம்பந்தன் நிறைபுகழான்
> சேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக்
> கூடிய கூட்டத்தினல் உள தாய்த்திக் குவலயமே

திருப்புகலூரில் திருமுருக நாயனர் திருமடத்தில் திருஞானசம்பந்தர் முதலிய அருளாளர் கூடிய கூட்டமும் எல்லார்க்கும் தெரிந்தது.

இது **'பேரவை'** என்ற பெயருக்குத் தக எல்லா மடங்களின் தலைவரும் ஒருங்கு கூடி உலகிற்குப் பொதுமையிலும், தமிழ் நாட்டிற்குச் சிறப்பிலும் தெய்விகத்ததாய் விளங்கி, மக்களைத் தெய்வமாக்கும் வன்மையை விரைவில் உறும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலே, தெய்வத்துள் ஒன்ருகத் திகழ்வதற்குத் தக்க வழி. மக்கள் தெய்வ சிந்தனையை எய்தாவிடில், அம்மக்கள் மாக்களாகவும் உலகில் இருத்தல் இயலாது. இது திருவள்ளுவர் கட்டளை. அவர்களைப் 'பேய்' ஆகச் சபித்தார். பேய் வானில் அலையும். தரையில் வாழுமோ? அது வானப் பேய். இது 'வையகப் பேய்' என்ருர் திருவள்ளுவ முனிவர். அலைதலால் **'அலகை'** எனப்பட்டது பேய். அது நடுவில் ஐகார வோசை அளவிற் குறைந்தது. **அல்கை** என்று வழங்கலாயிற்று. ஐகாரம் மொழியின் முதலிடை கடை மூன்றிடத்தும் அளவு குறையப் பெறும். அஞ்சு (ஐந்து), மலப்பழம் (மலைப்பழம், மலம் என்பது இங்குத் தகுமோ?), தவள (தவளை) முதலிய தமிழில் வழங்கக் காண்கிரும். தெய்விக வாழ்வை வேண்டாத மக்களைத் திருவள்ளுவர் பேயாகக் கொண்டுள்ளமை தெரியும்.

சுந்தரமூர்த்தி நாயனர் 'நாயேன் பல நாளும் நினைப்பின்றி மனத்து உன்னைப் **பேயாய்த்** திரிந்து எய்த்தேன்' என்றும், திருவாதவூரடிகள் 'நமச்சிவாய என்றுன்னடி பணியாப் **பேயன்'** என்றும் அருளியமை அறிக. பிறரும் இக்கருத்தை வெளியிட்டனர். மக்களை மாக்களாக வொட்டாமலும், மண்ணுலகப் பேயாக வொட்டாமலும் செய்தற் பொருட்டே, இத்தெய்விகப் பேரவை தோன்றியது. இந்த அருளாளர் **பேரவை வெல்க.** வாழ்க உயிரெலாம்.

# "நம்பி யாரூரன் நாம்தொழும் தன்மையான்"

## முன்னுரை :

"நம்பி யாரூரன் நாம் தொழும் தன்மையான்" என்னும் அழகிய இனிய சொற்றொடர், சைவ சமய ஆசிரியர்களாய நால்வர் பெருமக்களுள்ளே, சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருமை பெருமைகளை நம் மனோர்க்குப் பல வகையிலும் நினைவூட்டி அறிவுறுத்தி நிற்கின்றது. இவ்வழகிய இனிய அரிய தொடர்,

"சம்பு வின் அடித் தாமரைப் போதலால்
எம்பி ரான்இறைஞ் சாய்இஃ தென்எனத்
தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்
நம்பி யாரூரன் நாம்தொழும் தன்மை
யான்..."

என வரும் பெரிய புராணப் பாடலின்கண், உபமன்னிய முனிவர் கூற்றாக வந்துள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சிறந்துயர்ந்த தன்மைகளைப்பற்றி நீள நினைந்துணர்ந்து நெஞ்சுருக நேரும் போதெல்லாம், இவ்வருமைத் தொடரினைப் பலகாலும் நாம் நினைவு கூர்ந்து மகிழ்கின்றோம். சுந்தர மூர்த்திகளின் சிறப்புக்களை யெல்லாம் உள்ளடக்கிச் சுருக்கமாகக் குறிப்பிடுதற்கு, இதனினும் சிறந்த பொருள் பொதிந்த வேறொரு தொடரினை நாம் காண்டல் இயலாது.

## நம்பியாரூரன் ;

சுந்தரர்க்குப் பல்வேறு பெயர்கள் உண்டு. பிற சமயாசிரியர்கள் எவரும் கூறிக்கொள்ளா வகையில் "திருமருவும் திரள்தோளான்" "மலை மலிந்த தோளூரன்" "உரையினார் மதயானை நாவலாரூரன்" 'மல்லின் மல்குதிரள் தோளூரன்" "அல்லியந் தாமரைத்தார் ஆரூரன்" என இவர் தம்மைத் தாமே புகழ்ந்து குறிப்பிட்டுக் கொள்ளும் அளவுக்குப் பேரழகு வடிவம் உடையவராக விளங்கியிருந்தமையின், மக்கள் இவரைச் சுந்தரர் என்றும் சுந்தரமூர்த்தி என்றும் வழங்ினராதல் வேண்டும். "வடிவு நம்பியாரூரர் செம்பொன்மேனி வனப்பாக..." என வரும் சேக்கிழார் பெருமான் கூற்றும் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. "மற்று நீ வன்மை பேசி வன் தொண்டன் என்னும் நாமம் பெற்றனை" எனவும் 'தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்' எனவும் சிவபெருமான் அருளிச் செய்தமையால், வன்தொண்டர், தம்பிரான் தோழர் முதலிய பெயர்கள் இவருக்கு ஏற்பட்டன. நம்பியாரூரர் என்பது பெற்றோர்கள் இவருக்கு இளமையில் இட்டு வழங்கிய பெயர். "நம்பியாரூரர் என்ற நாமமும் சாற்றி......" என்பது இதனை வலியுறுத்தும். இனி, 'நம்பி' என்பது ஆண்பாற் சிறப்புப் பெயர் என்றும், 'ஆரூரன்' என்பதே பெற்றோர்கள் இட்ட பெயர் என்றும், பண்டைக் காலத்தில் பாட்டனின் பெயரைப் பேரனுக்கு வைத்து வழங்குதல் மரபு என்றும், "அருமறை நாவல் ஆதி சைவன் ஆரூரன் செய்கை" எனப் போதரும் பெரிய புராணப் பாடலால், சுந்தரரின் பாட்டனார் பெயர் 'ஆரூரன்' என்று தெரிதலால், அப் பெயரே இவர்க்குப் பெற்றோர்களால் இட்டு வழங்கப் பெற்றதாகல் வேண்டும் என்றும் நாம் கொள்ளுதல் கூடும். நம்பியாரூரர் என்னும் இப் பெயரையே மந்திரமாகக் கொண்டு வழிபட்டுப் 'பெருமிழலைக் குறும்பர் எனும் பரமயோகியார்' வீடுபேறு அடைந்தனர்.

": நாளும் நம்பி யாரூரர் நாமம் நவின்ற
நலந்தாலே
ஆளும் படியால் அணிமாதி சித்தி யான
அணைந்ததற்பின்"

எனவரும் பெரிய புராணப் பாடலால், நம்பியாரூரர் என்னும் பெயரையே மந்திரமாகக் கொண்டு ஓதிவந்தால், அணிமாதி சித்திகள் அனைத்தும் பெறலாம் எனவும் உணர்கின்றோம். உபமன்னிய முனிவர், பெருமிழலைக் குறும்பர் போன்ற தவப் பெருஞ் சான்றோர்கள் 'நம்பியாரூரர்' என்னும் பெயரைப் பாராட்டிப் போற்றியமைபற்றியே, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் "தம்பிரான் அருளினாலே தவத்தினால் மிக்கோர் போற்றும் நம்பியாரூரர் என்ற நாமம்" என விதந்தெடுத்துப் போற்றியருளினார் போலும் !

எனவே, நம்பியாரூரர் என்னும் பெயர் எத்துணைச் சிறப்புடையது என்பதனை யாவரும் இனிது உணரலாம்.

### நாம் தொழும் தன்மையார் :

இனி, நம்பியாரூரர் நாம் தொழத் தகுந்தவர் என்பதும், அதற்குக் காரணம் "குணநலம் சான்றோர் நலனே" என்றபடி, அவர்பால் அமைந்து விளங்கிய சிறந்த பல உயர்ந்த தன்மைகளேயாம் என்பதும், மேலைத் தொடரால் நாம் அறியக் கிடைத்தலின், நாம் தொழந் தகுந்தவராகும்படி, நம்பியாரூரர்பாற் சிறந்து விளங்கிய தன்மைகள் சிலவற்றைபேனும் ஆராய்ந்துணர்ந்துய்தல், நம் மனோர்க்கு இன்றியமையாத கடமையாகும்.

### நுணங்கிய கேள்வி மேலோன் :

நம்பியாரூரர் வையத்து வாழ்வாங்குவாழ்ந்தவர்; "விரம்பிய வாழ்க்கை" நடத்தியவர். திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில், மாதொருபாகனுர்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்துள், மேம்படு சடையனுர்க்கு, ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்பால், தீதகன்று உலகம் உய்ய அவர் திருவவதாரம் செய்தார். தெருவில் தேருருட்டும் சிறு பருவத்தில் நரசிங்கமுனையரையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு, இவரை அன்பினால் மகன்மை கொண்டார். அரசர் காதற் பிள்ளையாய் வளர்ந்து வந்த இவர், இளமையிலேயே அளவில் தொல் கலைகள் ஆய்ந்து தேர்ந்தார். 'நுணங்கிய கேள்வி மேலோன்' என விளங்கினுர். "முடியால் உலகாண்ட மூவேந்தர்களும்" மதித்து வணங்கும் வண்ணம் எல்லாப் பெருஞ் சிறப்பும் உடையவராகத் திகழ்ந்தார். இறைகளோடிசைந்த இன்பமும், இன்பத்தோடிசைந்த வாழ்வும் இவர்க்கு அமையப் பெற்றிருந்தன. இங்ஙனம் மகிழ்ச்சியின் மைந்துற்றிருந்த போழ்தும், "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்னும் பேருண்மையினை நன்கறிந்திருந்தார். "மத்த யானை ஏறி மன்னர் சூழ வருவீர்காள், செத்த போதில் ஆரும் இல்லை, சிந்தையுள் வைம்மின்கள்" என இவர் அனைவர்க்கும் அறிவுறுத்துகின்றுர்.

### 'விருந்தாய சொன்மாலை':

'கற்ற கல்வியினும் இனியவன்' ஆக இறைவனைக் கண்டுணர்ந்து போற்றிய இவர், சங்ககால இலக்கியங்கள் பலவும் கற்றிருந்தாராதல் வேண்டும்! "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" எனப் பாடியிருத்தலொன்றே, இவர் தம் சங்கநூற் புலமைக்குச் சான்று பகரும். "குமண மாமலைக் குன்று போல் நின்று தங்கள் கூறை ஒன்றின்றியே" "சொல்லரும் புகழான் தொண்டைமான்" என வரும் இவர் தம் பாடற் பகுதிகளால், குமணன், தொண்டைமான் இளந்திரையன் முதலிய சங்க கால அரசர்களையும் இவர் குறிப்பிட்டிருத்தல் புலனுகின்றது. திருநெல்வாயில் அரத்துறைப் பதிகத்தில் திருக்குறள்கள் சிலவற்றை இவர் எடுத்தாண்டிருப்பது, 'கற்பவை' கற்கும் முறையினை நமக்குத் தெற்றென விளக்குகின்றது. திருக்கருப் பறியலூர்ப் பதிகத்தில் "விருந்தாய சொன்மாலை கொண்டேத்தி" என வரும் தொடரை, அரசஞ்சண்முகனுர் அவர்கள் தொல்காப்பியத்துட் போதரும் 'விருந்து' என்னும் பகுதிக்கு மேற்கோளாகக் கூறினுர் என்பராகலின், ஆளுடைய நம்பிகள் ஆய்ந்து தேர்ந்த நூல்களுள் தொல்காப்பியமும் ஒன்றுதலை உணர்கின்றேம்.

* "It has always seemed to me a much more magnificent and impressive thing that a *human being* should rise to great heights, mentally and spiritually, and then seek to raise others up, rather than that he should be the mouthpiece of a divine or sperior power.

Some of the founders of religions were *astonishing individuals*, but all their glory vanishes in my eyes when I cease to think of them as human beings.

What impresses me and gives me hope is the growth of the *mind and spirit of man*, and not his being used as an agent to convey a message".

—SHRI JAWAHARLAL NEHRU,
*The Discovery of India.*

"இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரையன்" என எண்ணித் தொகையையும் குறிப்பிட்டுப் பாடியிருத்தலால், கற்பவை கசடறக் கற்றுயர்ந்த இவர் தம் சீர்த்தி தெரிகின்றது. மணிவாசகரின் திருவாசகமும் சுந்தரரின் மனங்கவர்ந்த நூல்களுள் ஒன்றாக இருந்திருத்தல் கூடும் என்று தோன்றுகின்றது. "உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயின் ஒப்பாய் விழைதருவேன்" என்னும் திருவாசகத்தின் எதிரொலியை, "வாளூர் நுதலார் வலைப்பட்டு அடியேன் பலவின்கனி ஈயது போல் வதன்முன்... உய்யப் போவதோர் சூழல் சொல்லே" என்னும் வரிகளில் நாம் கேட்கின்றோம். "தில்லை வாழ் அந்தணர்" எனச் சுந்தரர் குறிப்பிட்டது, மாணிக்கவாசகரையே யாகலாம் என்று கருதி ஐயுறும் நல்லறிஞர்கள் சிலரும்கூட உண்டு.

## 'மிக்க விழுத்தவ வேந்தர்' :

இனி, "சடையன்றன் சிறுவன் இசைஞானி காதலன்" எனப் பலவிடத்தும் இவர் தம்மைச் சுட்டிக் கொள்ளுதலால், தாய் தந்தையர்பால் இவர்க்கிருந்த பேரன்பு புலப்படுகின்றது. "நாதனுக்கூர், நமக்கூர், நரசிங்கமுனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செய்யும் ஊர், அணி நாவலூர்" எனவரும் இவர் தம் திருமொழியால், தம்மை எடுத்து வளர்த்துப் போற்றிய நரசிங்க முனையரையர்பால் இவர் கொண்டிருந்த நன்றியுணர்வும், ஊர்ப்பற்று நாட்டுப் பற்று முதலியனவும் வெளிப்படுகின்றன. இவர் தம் இல்லற வாழ்க்கை காதலின்ப நலம் சிறந்து திகழ்கின்றது. "பண் மயத்த மொழிப்பரவை, சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே" என்பன போன்ற பகுதிகள், இவர்களின் தூய காதலின்ப வாழ்வின் சிறப்பினைத் தெரிவிக்கின்றன. 'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசு' அமையுமாறு, அருளுணர்வு மீக்கூர, இவர் காதலின்ப நலம் நுகர்ந்தமை கருதுதற்குரியது. தொல்காப்பியர் விதித்த தவநெறி வாழ்க்கையினையே, இவர் சிவனுறையும் திருத்துறையூர் சென்றணைந்து, பவநெறிக்கு விலக்காகும் பதிகம் பாடிப் பெற்றனர் போலும்! "அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல்" எனத் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் வகுத்துரைத்த 'தவநெறி' வாழ்க்கைக்குச் சிறந்த இலக்கியமாக விளங்குபவர் சுந்தரரேயாவர். இச் சிறப்புடைமை பற்றியே "மிக்க விழுத்தவ வேந்தர்" "மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்" என்றெல்லாம் இவர் புகழ்ந்து போற்றப் பெற்றுள்ளார் எனலாம். இல்லற வாழ்க்கையின் தொல்லைகளுக்கு இடையேயும் சுந்தரர் இறைவனைச் சிறிதும் மறவாதிருந்தமையை, "பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்" என்னும் பதிகம் காட்டுகின்றது. இப்பெருஞ் சிறப்பினை விதந்தெடுத்து வியந்தே,

> "செல்வநல் ஒற்றி யூரன்
> செய்யசங் கிலியால் ஆர்த்து,
> மல்லலம் பரவை தன்கண்
> மாழ்குற அமிழ்த்து மேனும்,
> அல்லும்நன் பகலும் நீங்கா
> தவன்மகி ழடியில் எய்தி
> நல்லஇன் படைந்தி ருப்பன்
> நம்பியா ரூரன் தானே"

எனச் சிவப்பிரகாசர் இருபொருள்பட அழகுறப் புகழ்ந்து மகிழ்ந்தார். "ஏடு தரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே, இடைக்கே, எறிவிழியின் படு கடைக்கே கிடந்தும், இறை ஞானம் கூடுமவர் கூடரிய வீடும் கூடிக் குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர்" என்னும் சிவஞானசித்தியார் திருப்பாடலுக்கு நம்பியாரூரரே நல்ல எடுத்துக் காட்டாவார். இறைவனை நினையாது கழிந்த நாட்களை இவர், "ஓவும் நாள், உணர்வு அழியும் நாள், உயிர்போகும் நாள், உயர்பாடைமேற் காவும்நாள் என்று இவையலாற் கழிந்தேன்" என இழித்துப் பழித்துக் கூறியிருப்பது, நம்மனோர் நினைவிற் பதிக்கற்பாலதாகும்.

## 'அடியார்க்கு அடியார்'

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் போன்ற நம் சமயச் சான்றோர்கள்பால், நம்பியாரூரர் கொண்டிருந்த நன் மதிப்பிற்கு எல்லையே இல்லை. "நாவின்மிசை அரையன்னொடு தமிழ்ஞான சம்பந்தன் யாவர் சிவனடியார்களுக்கு அடியான்அடித் தொண்டன்" "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" எனவரும் பாடல்கள் இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். "உடைய அரசு, உலகேத்தும் உழவாரப் படையாளி, விடையவர்க்குக் கைத் தொண்டு விரும்பு

பெரும் பதியை, மிதித்து அடையுமதற்கு அஞ்சு வன்" என்று திருவதிகையில் சித்தவடமடம் சேர்ந்ததும்; "பிள்ளையார் திருவவதாரம் செய்த பெரும்புகலியுள்ளும் நான் மிதியேன்" எனச் சீர்காழ்ப்பதியின் ஊரெல்லைப்புறம் வணங்கிப் போந்ததும் பிறவும், ஆரூரரின் அருமைமிக்க அடக்கவுணர்வினைப் புலப்படுத்துகின்றன. ஞானசம்பந்தர்க்கும் நம்பியாரூரர்க்கு மிடையே பலதிறப் பண்பொப்புமைகளை நாம் காண்கின்றோம். நம்பியாரூரர் தமக்குரிய இனிய தலைவராக ஞானசம்பந்தப் பெருமானையே கொண்டிருந்தார் என்றுணர்த்தும் சான்றுகள் பலப்பல வுள்ளன.

## நட்புரிமை நலம் :

சேரமான் பெருமாளும் நம்பியாரூரரும் கொண்டிருந்த நட்பின் சிறப்புப் பெரிதும் பாராட்டற்பால தொன்றாய்ப் பிறங்குகின்றது. "இன்ப வெள்ளத் திடைநீந்தி ஏறமாட்டா தலைவார்போல் என்பும் உருக உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றும் என இசைந்து" தழுவி மகிழ்ந்து நின்ற இவர்களின் ஒப்புயர்வற்ற சிறந்த நட்பின் திறம்,நட்பின் இலக்கணத்திற்கே நல்லதோர் எடுத்துக்காட்டாக இலங்குகின்றது. "பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் தங்கிற்றுலகு" என்பதற் கேற்பப், பகைமை பாராட்டுபவர்களையும் கூடப் பண்பார்ந்த நண்பர்களாக்கிக் கொள்ளவல்ல பெருந்திறன் படைத்தவர் நம்பியாரூரர் என்பதற்கு, விறன்மிண்டர்-ஏயர்கோன் கலிக்காமர் வரலாறுகளே கரி போக்கும். தோழராகப் பழகுதற்கு இனிய துணைவர் இவர் என்பது, சோமாசிமாறர் - கோட்புலியார் முதலானோர் பால் இவர் கொண்டிருந்த தொடர்பால் நன்கு விளங்கும். கோட்புலியாரின் புதல்வியர் இருவரையும் மணந்துகொள்ள உடன்படாது "தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத் தூயமக்கள்" எனக் கூறி, அது முதல் "வனப்பகை-சிங்கடியப்பன்" எனத் தம்மைக் குறித்துக் கொள்வது, இவர் தம் சான்றாண்மையை இனையதென உணர்த்தும், அவிநாசிப் பதியில் முதலையுண்ட மதலையை வருவித்துக் கொடுத்த அருள் நிகழ்ச்சி, ஆரூரரின் அளப்பரிய இரக்கவுணர்வை விளக்கப் போதிய சான்றாகும்.

## நகைச்சுவை நயம் :

நம்பியாரூரரின் பாடல்களில் ஞானசம்பந்தர் பாடல்களின் சாயல் காணப்படுகின்றது. தோழமை இயல்பைக் காட்டும் நகைச்சுவை நலங்கள் நிரம்பியுள்ளன. "வாழ்ந்து போதீரே!", "எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே?,, என்பன போன்ற பகுதிகள், இறைவன்பால் இவர் பெற்றிருந்த நட்புரிமையின் பெற்றிமையை நன்கினிது விளக்குகின்றன. "பாதியோர் பெண்ணை வைத்தாய்! படர்சடைக் கங்கை வைத்தாய்! மாதர் நல்லார் வருத்தம் அது நீயும் அறிதியன்றே?" முதலிய பாடல்கள் இவரது சொல்லாற்றலைப் பல்லாற்றானும் விளக்க வல்லனவாகும். "பத்தூர்புக் கிரந்துண்டு" எனத் தொடங்கும் திருநாகைக் காரோணப் பதிகத்தால் "வாழ்க்கை வாழ்வதற்கே" என்பதுதான் இவர் தம் கோட்பாடு போலும் எனத் தோன்றுகின்றது. "நீதியில் ஒன்றும் வழுவேன் நிட்கண்டகம் செய்து வாழ்வேன்" என்பனபோல, இவர் தம் பண்புகளைத் தாமே குறிப்பிட்டுரைத்திருத்தல், இவரது சிறந்த தன்மைகள் இவையிவை என உணர்ந்துகொள்ள நம்மனோர்க்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

## சைவப்பயிர் வளர்த்த சான்றோர் :

நம்பியாரூரர் திருநெறி இயக்கத்தின் மாபெருந் தலைவர்களுள் ஒருவர். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தொடங்கி நடத்திப் பரப்பிய திருநெறி இயக்கத்தினை, அவர்களுக்குப் பின்னர்த் தலைவராகப் போந்து, அவர்தம் அடிச்சுவட்டில் நன்கினிது காத்து வளர்த்து, என்றும் நின்று நிலவுமாறு செய்தருளிய பெருந்தகையாளர் நம்பியாரூரரே யாவர். தொல்காப்பியர், திருவள்ளுவர் போன்ற சான்றோர்கள் அறிவுவெளியில் நின்று தனித்திருந்து ஆராய்ந்து, தத்தம் நூல்களை இயற்றித் தமிழ்த் தொண்டாற்றிப் போந்தனர். ஆனால், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் முதலிய சமயாசிரியர்கள்தாம், முதல் முதலில் மக்களோடு மக்களாகக் கலந்து பழகி, பல்லாயிரக் கணக்கான மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் பெற்று, நாட்டு மக்களிடையே ஒரு மாபெரும் இயக்கத்தினைத் தோற்றுவித்துச் சங்ககாலத்திற்குப் பின்னர் இடைக்காலத்தில் தமிழ்நாட்டிற்கு நேர்ந்த எத்தனையோ பல கேடுகளையெல்லாம் நீக்கிப் போக்கித், தமிழகத்திற் புதியதொரு

பெரும் புரட்சியும் மறுமலர்ச்சியும் விளையுமாறு செய்தருளினர். இஞ்ஞான்றை அரசியற் புரட்சி களைவிட, நால்வர் பெருமக்களின் அருளியற் புரட்சி எத்தனையோ பல மடங்கு ஏற்றமுடைய தாகும். இத்தகைய திருநெறி அருளியற் புரட்சி இயக்கத்தின் வளர்ப்புத் தந்தையாகவும், மாபெருந் தலைவராகவும், வரலாற்றாசிரியராகவும் வயங்கிய பெருந்தகுதி பொருந்திய பெருந்தகையாளர் நமது நம்பியாரூரர் பெருமான்! சுருங்கக் கூறல் வேண்டின் வளமிழந்து வறண்டு கடந்த இடைக்காலத் தமிழ் நிலத்தைப் பண்படுத்திப் புன் சமயக் களை எடுத்துப், பத்தி விதை விதைத்துத் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் சென்றனராக, அன்பு நீர் பாய்ச்சிப் பாதுகாத்துச், சைவப் பயிராகத் தழைத் தோங்கி வளருமாறு செய்தவர் நம்பியாரூரர் பெருமானே யாவர் என, ஒருவாறு கூறி முடிக்கலாம்.

"படியில் நீடும் பத்திமுதல்
அன்பு நீரிற் பணைத்தோங்கி,
வடிவு நம்பி யாரூரர்
செம்பொன் மேனி வனப்பாகக்,
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து, கதிர்பரப்பி,
முடிவி லாத சிவபோகம்
முதிர்ந்து, முறுகி விளைந்ததால்/"

**முடிவுரை:**

என ஆசிரியர் சேக்கிழார் அடிகளும், இவ்வுண்மையினை அழகுற விளக்கியருளியிருத்தல் காணலாம். நம்பியாரூரரால் தமிழ் மக்கள் அடைந்துள்ள நன்மைகளுக்கு அளவேயில்லை. அவர் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகை ஒன்றினால் மட்டுமே, தமிழ்நாடு எண்ணிறந்த பல நன்மைகளை எய்தியுள்ள தெனலாம், சேக்கிழாரடிகள் திருத்தொண்டத் தொகையின் சிறப்பினைப் பலவிடத்தும் பாராட்டியுரைத்திருத்தல் இதனை வற்புறுத்தும். எனவே, திருத்தொண்டத் தொகையினை அருளிச் செய்தவர் என்பதொரு காரணமே, "நம்பியாரூரர் நாம் தொழும் தன்மையர்" என்று நம்மனோர் நன்கினிது துணிந்துணர்ந்து கொண்டு, வணங்கி யுய்தற்குச் சாலும்/

—ஆசிரியர்

## திவ்வியப் பிரபந்தம்

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுதுய ராயின வெல்லாம்,
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்,
நலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்,
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்.

—திருமங்கையாழ்வார்

## திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பு ஆலயம்;
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாயில்:
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்:
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே.

—திருமூலர்,

# சிவலிங்கத் திருவுருவம்

## முன்னுரை :-

நமது இந்திய நாட்டிலும், குறிப்பாக இந்து மதத்திலும் சிறப்பாகப் போற்றி வழிபடப்பெறும் தெய்வத் திருவுருவங்கள் அல்லது அடையாளங்களில் சிவலிங்கத் திருவுருவம் மிகவும் சிறப்புடைய தொன்ருகும். இமயம் முதல் குமரி வரையிலுள்ள எண்ணிறந்த எத்தனையோ பல தலங்களிலும் கோயில்களிலும் சிவலிங்கத் திருவுருவங்கள் சிறப்புற நிறுவப்பட்டுத் தொன்றுதொட்டு நெடுங்காலம் முதல் இன்றளவும், இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலுமே பல கோடிக்கணக்கான மக்களால் பரவிப் போற்றி வணங்கப்பட்டு வருகின்றன.

சிவலிங்கத் திருவுருவின் பழமையும்பெருமையும் எல்லையற்றன. மொகஞ்சதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் நிகழ்ந்த அகழ்வு ஆராய்ச்சிகளில் மிகப்பல சிவலிங்கத் திருவுருவங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. அதனுல் சற்றேறத்தாழப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிக காலத்திற்கு முன்னரே, சிவலிங்க வழிபாடு இந்திய நாட்டில் நிலவி இருந்தமை புலனுகிறது.

சிந்து வெளிப் பகுதியில் கிடைத்த சிவலிங்கத் திருவுருவங்கள் மிகப் பலவற்றைக் கண்ட மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்கள் வியப்படைந்து, உலகிலேயே மிகவும் தொன்மை வாய்ந்த சமயம், சைவ சமயமே ஆதல் வேண்டும் என்னும் உண்மையை உணர்ந்து குறிப்பிட்டுள்ளனர் (1).

---

(1) "Among the many revelations that Mohanjo Daro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that *Saivism* has a history going back to the Chalco-lithic age or perhaps even further still and that it thus takes its place as the most ancient living faith in the world."

*— Sir John Marshall.*

## உலகெங்கும் நிலவியமை :

சிவலிங்கத் திருவுருவங்களும், சிவலிங்க வழிபாடும் இந்திய நாட்டில் மட்டுமே யன்றி எகிப்து, சிரியா, பாரசீகம், சிறிய ஆசியா, கிரீசு, இத்தாலி, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, திபெத்து, சீனு, ஜப்பான் முதலிய உலகின் பல பகுதிகளிலும் ஒரு காலத்தில் பெரிதும் பரவி யிருந்தது. இதனை 'வெஸ்ட்ராப்', இ. பி. டெய்லர், ஆலன் கிராண்ட் முதலிய மேற்புல அறிஞர்கள் தத்தம் நூல்களில் ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளனர். (2)

---

(2) "The practice of Linga-worship was so general as to have spread itself over a large part of the habitable globe, for it flourished for many ages in *Egypt and Syriya, Persia, Asia Minor, Greece and Italy.* It still is in vigour in *India* and many parts of *Africa* and was even found in *America* on its discovery by the Spaniards, being regarded as the most sacred object of worship and consecrated by religion. The culture was associated with the very idea and sentiment which was regarded as ennobling to man".

*—H. M. Westropp*

"Once this Old Shiva, riding on his bull and taboring on his Damarug travelled from India, on the one side, to *Sumatra, Borneo, Celebes, Australia,* as far as the shores of *America,* and on the other side, this Old Shiva battened his bull in *Tibet, China, Japan* and as far up as *Siberia,* and is still doing the same".

*—Swami Vivekananda.*

அமெரிக்காவில் கொலரடோ என்னும் மலை நிலப் பகுதியில் மிகப் பெரிய சிவாலயம் ஒன்று, 1937 ஆம் ஆண்டில் ஆராய்ச்சியாளர்களாற் கண்டு பிடிக்கப் பெற்றது. அதன் காலம் 10000 ஆண்டு களுக்கும், அல்லது அதற்கும் பழமை வாய்ந்த காலம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் (3)

இங்கிலாந்தில், 'செயிண்ட பால்-கெத்தீட்ரல்' என்னும் கிறித்தவக் கோயிலிலும் ஓரிடத்தில் இன்றும் கூட ஒரு சிவலிங்கம் இருந்து வருவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இசுலாமிய சமயத் தின் மாபெரும் புனிதத் தலமான மெக்கா நகரிலும் 'காபா'என்னும்பெயரில் விளங்குவது சிவலிங்கமே என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். ஜப்பானில் பௌத்த மதத்தின் ஒரு பிரிவான 'ஷிண்டோயி சம்' என்பதில் சிவலிங்கத்திருவுருவத்திற்குப் பெரு மதிப்பு தரப் பெற்று வருகின்றது. மேடம் பிளாவட்ஸ்கி அம்மையார் 'மறைவியற் கொள்கை' என்னும் நூலில் விளக்கியுள்ள 'லிபிகா' என்னும் அடையாளமும் சிவலிங்கமேயாகும். இந்தகைய பல செய்திகளை மிகவும் நுணுக்கமாக ஆராயத் தலைப்பட்டால், சிவலிங்கத்திருவுருவின் சிறப்பினை நாம் பெரிதும் அறிந்து மகிழ்தற்கு வாய்ப்புளது.

## இயற்கைக்கு இயைந்தது;

இறைவனைக் குறிக்கும் திரு அடையாளங்கள் வெவ்வேறு சமயங்களிலும் பல்வேறு வகையில் விளங்கி வருதலை நாம் காண்கின்றோம். அத்தகைய அடையாளப் பொருள்களில், இயற்கைக்கு ஏற்ற நிலையில், சிவலிங்கத் திருவுருவம் மிக்க சிறப்பு வாய்ந்த தொன்றாகக் காணப்படுகின்றது. இயற் கையின் நுட்பத்தினை இனிது ஆராய்ந்துணர்ந்த அடிப்படையிலேயே, நம் முன்னோர்கள் இறைவ னின் திருவடையாளங்களுள் ஒன்றாகச் சிவலிங்கத் தினைத் தேர்ந்தெடுத்து அமைத்துள்ளனர். நாக லிங்கப்பூ என்பதன் நல்லமைப்பை உற்று நோக்கி உணரும் போது, இவ்வுண்மை செவ்விதிற் புலனாகி றது. மேலும் வடக்கே இமய மலைக்கு அணித்தே யுள்ள அமரநாதம் என்னும் புனிதத் தலத்தில், இயற்கையாகவே பனிக் கட்டியினால் சிவலிங்கத் திருவுருவம் அமைந்து விளங்கும் திறனும், உன் னுந்தோறும் நமக்கு உள்ளத்தில் வியப்பும் விம்மி தமும் விளைவிக்கின்றது. இவ்வாற்றால் இறைவ னின் இயற்கைத் திருவுருவம் சிவலிங்கமே ஆகும் என்பதனை நாம் தெள்ளிதின் அறிகின்றோம்,

## பழம் பெரு நூல்கள்:

இருக்கு வேதம், மகுடாகமம், சுப்பிரபேத ஆக மம், அக்கினி புராணம், இலிங்க புராணம், கூர்ம புராணம், மச்ச புராணம், இருக்கு சங்கிதை, வியாச பாரதத்தில் துரோண பருவம் முதலிய பழம் பெரும் வடமொழி நூல்களிலும், சிவலிங்கத் திருவுருவின் சிறப்புக்கள் பலவாறு விளக்கப் பெற் றுள்ளன.

அருவமாய் முதலும் முடிவுமின்றிப் பரவெளி யாய்ச் சத்திய சொரூபியாய்ப் பரம்பொருள் உள் ளது. அதனிலிருந்தே தானு வடிவமாகிய சிவ லிங்கம் தோன்றியது. சிவலிங்கமே ஐம்பூதங் களுக்கும் தாயகம். உண்மையிற் சத்து சித்து ஆனந்தம் என்பனவே இலிங்க வடிவம் ஆயிற்று.

மலரும் அதன் மணமும் ஆகிய இரு தன்மைகள் ஒன்றுபட்டு நிற்பது போல, உருவம் அருவம் என்னும் இரண்டும் ஒன்றுபட்டு நிற்கும் சதா சிவ மூர்த்தமே சிவலிங்கம் எனப்படும். அதுவே சிவ யோகிகள் வழிப்படத் தக்கது. தேவர்களும் முனி வர்களும் பூசித்து வணங்கும் தெய்வமும் அதுவே.

பிரமன் விஷ்ணு ருத்திரன் என்னும் முப்பெருந் தத்துவங்களும் சேர்ந்த ஒன்றே சிவலிங்கம். அது சாட்சாத் மகேசுவரனேயாய், பரானந்த ஆன்மக மாய் விளங்குகின்றது. சிவலிங்க வழிபாடு செய்தே எல்லாத் தேவர்களும் தத்தம் சிறந்த நிலையினைப் பெற்றார்கள். சர்வாதார வடிவினன்

---

(3) "In the wild mountainous state of *Colorado*, seventh largest in America, scientists of the U. S. Museum of Natural History three months ago announced discovery of a 'Lost world'. The focal point was *Siva's Grand Temple*, a half square mile of solid rock plateau isolated from the mainland by 9000 feet. Canyons eroded by rivers some 200000 years ago."

—*News Review, London, 1937*

ஆகிய சிவபிரான், சிவலிங்கத் திருமேனியின்மூலம் தன்னை வழிபடுவோர்களுக்கு எளிதாகவும் இனிதாகவும் அருள் புரிகின்றான்.''

திருமலிந்த இருக்கு எனும் மாமறையைச் சார்ந்த
சிவச்சோதி எனும்பாகம், தெள்ளி தாக
அருமலிந்த ஆதியந்த ரகித விண்ணாய்
அசத்தியம்இல் லாதபரம் இருந்தது, அத்திற்
பொருவுறஉண் டாயதன்றே தானு ரூபம்?
புலரும்அஃ தேபூதங் களுக்கு மாத்ரு !
சருவசச்சி தானந்தம் இலிங்கா காரம்
சத்தியமாய் இருப்பதெனச் சாற்றும்
அன்றே. (1)

பூமணம்போல் இரண்டுதன்மை ஒன்றாய் நின்று
போதுளும், ரூபாரூப சதாசி வம்தான்
தா மிகுந்த சிவலிங்கம் ஆம்! அதன்கண்
துலங்குருவம் எழுந்தருளும் மூர்த்தி யாகும்!
மாமிகுந்த அருவம்அது சிவயோ கத்தார்
வழிபடுவ தாம்! தெரிந்த இலிங்க மூர்த்தி
ஏம அன்பர் சுரர் முனிவர் இறைஞ்சு தேவாம்!
எனமகுடம் சுப்ரபேதம் இயம்பு மாலோ (2)

சிவலிங்கம் அயன்விண்டு சிவான்மம் என்றே
செப்பிடுமே அக்கினியின் புராணம்; அந்தச்
சிவலிங்கம் சாட்சாது மகேசன் என்றே
தெரிந்திடுமே இலிங்கம்எனும் புராணம் ;
அந்தச்
சிவலிங்கம் பரானந்தான் மகமாம் என்றே
தெரிவிக்கும் கூர்மம்எனும் புராணம்; அந்தச்
சிவலிங்க மகிமை பலவாய்க் கிளத்தும்
தெற்றெனவே மச்சம்எனும் புராணம்;
மாதோ! (3)

எச்சுரரும் சிவலிங்க வழிபாட் டாலே
எய்தினர்கள் தங்கள் சிறப் புகளை; அங்ஙன்
சச்சிதவிண் டுவும்அடைந்தான் என இருக்கு
சங்கிதைசொல் விடும்; துறக்கர் புத்தேள்
ஆகி
அச்சுதன்என் றுளஅரிதான் சிவனைச் சர்வா
தாரவடி வினன்என்றாய்ந்து இலிங்கத் தின்பால்
துச்சமற ஆராதிக் கின்றான் என்றே
துரோண பருவம்கழறல் கண்கூ டாமே. (4)



## சேக்கிழார் சுவாமிகள் :

கடவுளைச் சில மதங்கள் அருவம் என்று கூறுகின்றன. மற்றும் சில மதங்களோ உருவம் என்று கொள்கின்றன. இவ்விரு வேறு திறமான கொள்கையினருக்கும் ஏற்புடைய நிலையில் சிவலிங்கம் சிறப்புற்றுத் திகழ்கின்றது. முகம் கை கால் முதலிய உறுப்புக்கள் எதுவும் இல்லாமல் இருத்தலின் ஒரு வகையில் அருவமாகவும்; கண்ணுக்குப் புலனாகும் வகையில் ஒரு பிழம்பாகத் தோன்றித் திகழ்தலின் ஒரு வகையில் உருவமாகவும், இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் அருவுருவம் ஆகச் சிவலிங்கம் அமைந்துவிளங்குகிறது. இச்சிறப்பினையே,

“காணாத அருவினுக்கும்
உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாம் சிவலிங்கம்''

என்னும் வரிகளில் பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விளக்கி யருளி யுள்ளார். எனவே இறைவனின் அருவுருவத் திருமேனியே சிவலிங்கம் என்றும், இதனிலிருந்தே இறைவனின் ஏனைப் பல திருவுருவங்கள் எல்லாம் தோன்றுகின்றன என்றும் நாம் அறிந்துகொள்ளலாம்.

## பாம்பன் சுவாமிகள்

அண்டம் எனப்படும் பரந்த இப் பெரிய உலகமே (Macrocosm) ஒரு வகையில் சிவலிங்கம் எனும்படி திகழ்கின்றது. சிவலிங்கத்தின் அடிப்பகுதி பீடம் அல்லது ஆவிடை எனப்படும். அதன் நடுவில் நீண்டு விளங்கும் பிழம்பு லிங்கம் எனப்படும். இம்முறையில் இவ்வுலகின் வானப் பெருவடிவே லிங்கம் ஆகவும், பரந்து விரிந்த நிலப்பரப்பே ஆவிடை என்னும் பீடமாகவும் அமைந்துள்ளது. அதற்கு இயையப் பிண்டம் எனப்படும் நம் உடம்பின் அமைப்பும் (Microcosm), சிவலிங்கம் போலவே ஞானிகளின் காட்சிக்கு நலமுற அமைந்து தோன்றுகின்றது. ''மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்'' என்பது திருமூலர் திருமந்திரம். நம் உடம்பில் தோளுக்கு மேலுள்ள பகுதியை இலிங்கமாகவும், மற்றைய கீழ்ப்பகுதியை ஆவிடை எனும் பீடமாகவும் கொள்ளுதல் வேண்டும். இது

தூல வடிவம். சூக்கும நிலையில், நம்முடைய இதய கமலம் பீடம் எனவும், அங்கே நிலவும் சிதாகாசம் என்பது இலிங்கமாகவும் உள்ளன. இனி இதற்கும் மேற்பட்ட அதிசூக்குமம் ஆன நிலையிலும் ஞானிகள் சிவலிங்கத் திருவுருவினைத் தமது ஞானக் கண்களால் காண்கின்றனர். சிதாகாசம் என்பது ஆன்மாவாக அமைய, அதனுடைய இதய கமலம் பீடமாக விளங்க, அங்கே உள்ள மகா சிதாகாசம் என்பதுதான். உயிருக்கு உயிராக உள்ள இறைவனின் வடிவமாகிய சிவலிங்கத் திருவுருவம் ஆகும். இத்தகைய நுட்பங்களைத் தவத்தாலும் ஞானத்தாலும் உணர்ந்து திருவருட் பேற்றால் சிவலிங்க மயமாக விளங்கப் பெற்று இன்புறுதலே வீடு பேறு எனவும் ஞானிகள் கூறுவர். திருவெண்காடர் என்னும் பட்டினத்தடிகள் திருவொற்றியூரில் சிவலிங்க மயமாகும் இத்தகைய சிறந்த முத்தியினையே பெற்றார் என்றும் பெரியோர்கள் கூறுவர்.

மேற்கொள்ஆ காரலிங்கம் அதுவே வானம்,
விருத்தவடிவு ஆவிடையே அகன்ற பூமி,
தோற்பிண்டம் அதில்தோளின் மேற்பாக
கந்தான்
தூய்தாய அவ்இலிங்கம் ஆகும்; ஏனைப்
பாற்பாகம் பரைஎனும் ஆவிடைதான் ஆகும்;
பணித்தஇது தூலார்த்தம்; சூக்கம் என்று
மேற்கொள்ஒரு பொருள்இதய கமலம் பீடம்,
விமலசிதா காசம்அதே இலிங்கம் ஆகும். (1)

அவ்விமல சிதாகாசம் ஆன்மா ஆகும்,
அதன்இதய கமலம்அதே பீடம் ஆகும்:
செவ்வியஅங் குள்ளமகா சிதாகாசம் தான்
சேதனர்க்குச் சேதனனும் இலிங்கம் ஆகும்;
கவ்வுடைய ஈதுஅதி சூக்குமார்த்தம் ஆகும்
கழறியஅப் பீடமுதல் அருளாம், அத்தைத்
திவ்வியதே வடிவென்பர் அதனால் ஆ சி
செயப்படுஉயிர் எலாம்அடிமை என்ப
ஆன்றோர். (2)

சொற்ற இலிங் கம்தானே சிகாரம், அந்தத்
துகளில்அருட் பீடமதே வகாரம், அங்கன்
ஒற்றுமையா நிற்கும்நிலை சிவமாம் அன்றோ?
ஓதரும்அத் திருவடியைச் சேர்ந்த ஆன்மா
அற்றமிலாச் சிவத்துடனும் கூடா நிற்கும்
ஆனந்தம் சிவலிங்க மயம தாகும்;
குற்றமிலா இந்தமுத்தி திருவெண் காடர்
கொண்டதுபோல் எண்ணிறந்தோர்
கொண்டுய்ந் தாரே! (3)

இந்தநிலை யைத்தானே சிவத்திற்கு அங்கம்
என இருத்தல் முத்திஎன்றும் சொற்றார் சைவர்;
அந்தமுடி வும்சைவ சித்தாந் தத்திற்கு
அயலன்று; சொற்றஇலிங் கத்தின் நிர்வை
எந்தவிதம் பார்த்தாலும் அகண்ட சச்சி
தாஙந்தம் எனச்சிறக்கும்: இதனை என்றன்
பந்தம்எலாம் எருக்கிஅருள் அருணைப் பேரான்
பரம்என்னும் குகன்அருளால் அறி!
கற்பானே! (4)

## தத்துவ நுட்பங்கள் :

திருமூலர் அருளிய திருமந்திரம் இலிங்கத்தின் சிறப்பினை, அண்டலிங்கம் பிண்டலிங்கம் சதாசிவ லிங்கம் ஆத்மலிங்கம் ஞானலிங்கம் சிவலிங்கம் எனப் பல தலைப்புகளில் விளக்கியுள்ளது. இவ்வுலகை உள்நோக்கி ஆராயுங்கால், ஓங்கியுயர்ந்த வானமே இலிங்கம், சுற்றிச் சூழ்ந்து அகன்றுள்ள எண்டிசையின் விரிவே ஆவிடை, பரந்து விரிந்துள்ள நிலப்பரப்பே பீடம் எனலாம்படி அமைந்திருத்தலை உணரலாம்.

கோயில்களிற் கருவறையின் மேலுள்ள விமானம் தூலலிங்கம். கருவறையின் உள்ளே இருப்பது சூக்குமலிங்கம். விந்து நாதம் என்னும் தத்துவங்களை முறையே வட்ட வடிவமாயும், நீண்ட கோடு வடிவமாகவும் பெரியோர்கள் குறிப்பர். விந்து நாதம் ஆகியவை இரண்டும் சேர்ந்து அமைந்த உருவமே சிவலிங்கம்,

விந்துவும் நாதமும் மேவும் இலிங்கமாம்
விந்து வதேபீடம் நாதம் இலிங்கமாம்
அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்
வந்த கருஐந்தும் செய்யும் அவைஐந்தே

மேலும் சிவலிங்கமானது, பிரணவம் என்னும் பெருஞ் சிறப்புடைய மந்திரத்தின் அடையாளமாகவும் கொள்ளப்பெறும். இலிங்கத்தின், அடிப்பகுதியாகிய பீடம் ஓங்காரம், அதன் நடுப்பகுதியாகிய கண்டம் மகாரம், உள்வட்டம் உகாரம், மேற்பகுதி அகாரம்.

இலிங்கநற் பீடம் இசையும்ஓங் காரம்
இலிங்கநற் கண்டம் நிறையும் மகாரம்
இலிங்கத்துள் வட்டம் நிறையும் உகாரம்
இலிங்கம் அகாரம் நிறைவிந்து நாதமே.

என்றெல்லாம் சிவலிங்கத்தின் இயல்பினைத் திருமூலர் விளக்கியருள்கின்றார். உலகிற்குத் தாயும் தந்தையுமாக விளங்கும் சத்தி சிவத்தின் அடையாளமே சிவலிங்கம் என்பதனை,

சத்தியும் சிவமும் ஆய
  தன்மைஇவ் வுலகம் எல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்
  உணர்குண குணியும் ஆக
வைத்தனன் அவளால் வந்த
  ஆக்கம்இவ் வாழ்க்கை எல்லாம்:
இத்தையும் அறியார் பீட
  லிங்கத்தின் இயல்பும் ஓரார்

என அருள்நந்தி சிவா சாரிய சுவாமிகள், தமது சிவஞான சித்தியாரில் விளக்கி யருளியிருத்தல் அறிந்தின்புறற்பாலது.

## சுவாமி விவேகானந்தர்:

இன்னோரனைய நுட்பங்களை உன்னி யுணர மாட்டாதபுன்மக்கள் சிலர் சிவலிங்கத்திருவுருவினை வேறுஏதோ ஒரு குறிப்புடையதாக இகழ்ந்து கூறுவதும் உண்டு. அவர்களின் கூற்றை மறுத்து' அதர்வண வேத சம்மிதையில், வரும் புகழ்மிக்க பாடல் ஒன்றினால். போற்றப் பெற்ற வேள்வித் தூண் ஆகிய யூபஸ்தம்பம் என்பதில் இருந்தே, சிவலிங்கம் பற்றிய கருத்துத் தோன்றியது என்று, சுவாமி விவேகானந்தர் அவர்கள் விளக்கியுள்ளார்கள். (1)

இந்தவிதம் சுருதி சிவாகம புராண
  இதிகாச வழியாகச் சிவலிங் கம்தான்
அந்தம்இடை ஆதியிலாப் பரமாய் யார்க்கும்
  அருள்புரியும் பெருங்கருணை யாய் இருக்கச்,
சந்தமிகும் உமையின்பெண் குறியும் முக்கட்
  சங்கரன்ஆண் குறியும்அந்த இலிங்கம் என்ன
நிந்தைபுரி பொய்ச்சரிதம் தீட்டி அஃதை
  நிகழ்த்துபெருஞ் சிதடர் அடை கதிஎன்
    ஆமே

எனப் பாம்பன் சுவாமிகளும், மேற்குறித்த இழிசினர்களின் கூற்றை மறுத்தருளியிருத்தல் காணலாம்.

## நெருப்பு வழிபாடு:

பண்டைக் காலத்தில் முதன் முதலாகத் தோன்றிய மக்கள் குறிஞ்சி நிலமாகிய மலைப்பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பகலில் சூரியனையும், இரவில் சந்திரனையும், இவையிரண்டும் காணப்பெறாத இருள் மிக்க காலங்களில் நெருப்பினையும் வணங்கி வந்தார்கள். நெருப்பினால் பயன் மிகப் பெற்ற பண்டைக்கால மக்கள் நெருப்பினை இறைவனுடைய இயல்புடையதாகக் கருதினார்கள். நெருப்பைக் குறிக்கும் தீ என்னும் சொல்லினின்றே தெய்வம், தேவர், தேவதை (Deity) முதலிய சொற்கள் தோன்றியுள்ளமை காணலாம். நெருப்பு வழிபாடே இறைவழிபாடாக மக்கள் பலரும் கருதி வந்துள்ளனர். அதனால் எரி ஓம்புதல், முத்தீ வேட்டல் முதலியன, சமயக் கடமைகளாகக் கொள்ளப் பெற்று வந்தன. அதன் பயனாகத் தீ வளர்க்கும் குழிக்கு (யாக குண்டம்) அறிகுறியாக வட்ட வடிவமான பீடமும், அக்குழியில் வளர்க்கப்படும் தீயினுக்கு அறிகுறியாகக் குவிந்து நின்ற வடிவில் அமைந்த இலிங்கமும், நாளடைவில் ஏற்படலாயின.*

---

(1) "The worship of the *Siva-Lingam* originates from the famous hymn in the Atharva Veda Samhita sung in praise of the *Yupa-Stamba*, the sacrificial post... The Yupa-Stamba gave place in due course of time to the Sivalingam, and was deified to the high Devahood of Sri Sankara."

(2) "The explanation of the Siva-lingam as a *phallic emblem* was brought forward by the most *thoughtless*, and was forthcoming in India in her most *degraded times*, those of the downfall of Buddhism".

— *Swami Vivekananda.*

(*) 'In many ancient temple fire was kindled night and day and the light was never allowed to go out even for a second and this custom still prevails in all the celebrated Siva Temples as well as in the *Parsi* sancturies where this is observed with particular care...In this way, the worship of *Siva Lingam* which is but the form of *fire* transferred to a cone-shaped stone or any other object like it".

—*Swami Vedachalam.*

சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய்த் திகழும் இறைவனின் திருவடையாளமே கோயில் களிலுள்ள சிவலிங்கம்; இறைவனல்லாத ஏனைய உயிரினங்களைக் குறிக்கும் அடையாளமே நந்தி வடிவம், இறைவனை வழிபட்டு உயிர்கள் கழித்துக் கொள்ளும் அறியாமையாகிய மலமே பலிபீடம்! இவ்வுண்மையினை,

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கம் ஆம்
ஆய பசுவும் அடலேறு என நிற்கும்
ஆய பலிபீடம் ஆகும் நற்பாசம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்க்கே"

என்னும் திருமந்திரச் செய்யுள் தெளிவுற உணர்த் துதல் காணலாம்.

## திருக்களிற்றுப்படியார் :

இறைவனின் திருவுருவங்களில் சிறந்தது சிவ லிங்கம் ஆவது போலவே, அவ்விறைவனை வழி படும் நெறிகளில் சிறந்ததும் சிவலிங்க வழிபாட்டு நெறியாகும். தேவர்களும் முனிவர்களும் சிவ லிங்கத் திருவுருவங்களை வழிபட்டு உய்ந்த வர லாறுகளை எண்ணிறந்த தல புராணங்கள் கொண்டு இனிதறியலாம். 'இலிங்கம்' என்னும் என்னும் சொல்லுக்குப் பொருள் அடையாளம் என்பதாகும். சித்திரிப்பது, சித்திரிக்கப்பட்டது என வும் இதற்குப் பொருள் கூறுவர். இலங்கு என் னும் தமிழ்ச் சொல்லின் அடிப்படையிலேயே, இலிங்கம் என்னும் சொல் தோன்றியது எனவும் கூறுவது உண்டு.

"கிரியை யென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும்
நூல்கள்"

என்றபடி புறத்தே உள்ள கோயில்களுக்குச் சென்று சிவலிங்கத்தை வழிபடுவது சிறப்பேயா யினும், அதனினும் பெருஞ் சிறப்புடையது உள்ள மாகிய கோயிலிலே சிவலிங்கத் திருவுருவம் அமைத்து வழிபடும் செயலாகும். கோயில்களில் செய்வது புறவழிபாடு. உள்ளத்தே இயற்றுவது அக வழிபாடு. புறவழிபாடும் அகவழிபாட்டிற்கு ஓர் அடிப்படையான சாதனமாகும். நாம் நம் முடைய உடம்பின் உள்ளேயே சிவலிங்கம் அமைந் திருத்தலை உணரவும் வழிபடுதலும் வேண்டும். சிவலிங்கத்திற்குப் பூத்தூவுதல் போல, நாம் நம் முடைய ஆன்மாவையே ஒரு பூவாகச் சங்கற்பம் செய்து, நம் உள்ளத்தினுள்ளேயிருக்கும் சிவலிங் கத்திற்குத் தியானத்தினால் அருச்சனை செய்வோ மானால், அது மிகச் சிறந்த தலையான சிவ பூசை யாகும்.

" தம்மில் சிவலிங்கம் கண்டதனைத் தாம்
வணங்கித்
தம்அன்பால் மஞ்சனநீர் தாம்ஆட்டித்—
தம்மை ஒரு
பூவாக்கிப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை அன்றே உடல்."

எனவரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் இச் சிறந்த உண்மையை உணர்த்துதல் காணலாம்.

## முடிவுரை :

இத்தகைய சிறந்த சிவலிங்க வழிபாட்டினை நாம் அனைவரும் குருவருளும் திருவருளும் பெற்று, இயன்றவரை இடைவிடாமற் செய்ய நம் வாழ் நாளில் முயன்று உய்வோமாக.

—ஆசிரியர்

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

திரு. வி. பலராமையா அவர்கள் பி.ஏ.பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8

சித்தியடைவதற்கு ஆதாரம் சீவ காருண்ய ஒழுக்கமென்று முன் கட்டுரையில் எழுதப்பெற்றது. கொலை, புலை தவிர்த்தால் சீவகாருண்ய ஒழுக்கம் பூத்தியாகிவிட்டதா வென்பது ஒரு முக்கியமான கேள்வி. அதற்குப் பதில், இல்லை யென்றே உறுதியாய்க் கூறலாம்.

மனம், வாக்கு, காயத்தால் ஒரு சீவனுக்கு மற்றொரு சீவன் மனம் புண்படும்படி நடந்து கொள்வது சீவகாருண்ய ஒழுக்கத்திற்கு முற்றிலும் முரண்பாடுடையது; ஒருவருக்குத் தீங்கு செய்ய வேண்டுமெனக் கருதி அத்தீங்கு செய்யுங் காலையில் அது குற்றமாகிறது. அதற்கு மாறுபட்டதைக் கூட சீவகாருண்ய வொழுக்க முடையவர்கள் குற்றமெனக் கருதுகின்றனர். ஓர் உதாரணம். ஒரு பக்தன் கோவிலுக்குள்ளிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். மற்றொரு பக்தன் கோவிலினுள் சென்று கொண்டிருந்தான். உள் சென்று கொண்டிருக்கும் பக்தன் வெளியே வரும் பக்தன் காலை அறியாமல் மிதித்து விட்டான், "இப்படி முரட்டுத்தனமான காரியம் நீர் செய்யலாமா?" என்று கடுமையாகக் கேட்டார். அதற்குப் பதில் ஒன்று மில்லை. இருவரும் பிரிந்தனர். அன்று இரவு முழுவதும் காலை மிதித்தவர் கண் மூடவில்லை. தான் செய்த குற்றத்திற்கு எவ்விதத்தில் பரிகாரம் தேடுவதென்னும் கவலை. மற்ற பக்தனும் தூங்கினரில்லை. "ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு" என்ற முதுமொழி அவரை வாட்டி வதைத்தது. முன்பின் யோசியாமல் அவசரப்பட்டுத்தான் கடிந்து பேசியதை எண்ணி எண்ணி உருகினர். படுக்கையிலிருந்து எழுந்தார். நேராக அப்பெரியாரிடம் போய் மன்னிப்புக் கேட்பதெனத் தீர்மானித்தார். வாசற்படியைத் தாண்டினர். நேரம் அதிகாலை. இருட்டு, யாரோ ஒருவர் திடீரென அவர் பாதங்களில் வணங்கி "மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும்" என்று கதறினர். "யாரையா நீர்! எழுந்திரும்! வந்த காரியத்தைச் சொல்லும் என்றார்.

"பெரியாரே! நான் தங்கள் மனம் புண்படும்படியாக நடந்து கொண்டு விட்டேன். என் மடமை! கொஞ்சம் அறிவுடன் நடந்திருப்பின் தங்கள் பாத கமலங்களை நேற்றுக் கோவிலில் மிதித்திருக்க வேண்டியதிருந்திருக்காது" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மிதிபட்ட பெரியார், திடீரெனக் கீழே சாஷ்டாங்கமாய் விழுந்து மிதித்த பக்தனின் பாதங்களை இறுகப் பிடித்துக் கொண்டார்,

"அறிவு விளக்கங் கொண்ட பெரியாரே! தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே! எனக்கு ஒரு அபசாரமும் நீர் செய்திரில்லை. அப்படியிருக்க நான் தங்களுக்குச் செய்த அபசாரத்திற்கு என் நாவை வெட்டி விடுவது தான் குறைந்த தண்டனை" யென்று கூக்குரலிட்டார் அப்பெரியார்.

பார்த்தீர்களா! பக்தர்களின் ஒழுக்கம்! இந்த ஒழுக்கம் ஒரு சான்று சீவ காருண்யத்திற்கு! பகலெல்லாம் வழிப்பறி அடிப்பவனைப் போல் கொள்ளை லாபம் அடித்துவிட்டுப் பட்டு வஸ்திரம் பஞ்ச கச்சம், வெள்ளித்தட்டு, அதில் தேங்காய், பழம், பூ, ஏந்தி பிள்ளையார் முன் நின்று தலையில் குட்டுப் போட்டுக் கொள்வது புண்ணியமா? புருஷார்த்தமா? பிள்ளை யாருக்கு அறிவில்லையென்றல்லவா பொருள்படும். பிள்ளையார் என்ன சொல்கிறார். "ஏ பயித்தியக்காரனே! நீ செய்த குற்றங்களை மன்னிக்க எனக்கு அதிகாரம் கிடையாது. யாருக்கெல்லாம் நீர் தீங்கு செய்திரோ, அவர்களிடத்தில் போய் இந்தத் தேங்காய் பழங்களை

வைத்து மன்னிப்புப் பெற்றுக்கொள். அவர்களுக்குத் தான் மன்னிக்கும் அதிகாரம் உண்டு'' என்று சொல்லுகிறார். ஆனால் அதை அறிந்து கொள்ள மனிதனால் முடியவில்லை. மக்களை ஏமாற்றியதைப் போல் பிள்ளையாரையும் ஏமாற்றப் பார்க்கிறான். கொண்டுபோன தேங்காயை உண்மையிலேயே பிள்ளையார் தின்ன ஆரம்பித்து விட்டால், மறு நாளிலிருந்து வெள்ளித் தட்டில் தேங்காய் இருக்காது.

இப்படிப்பட்ட மனிதர்களும் முக்தி வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுவும் செலவில்லாமல் வரவேண்டும். அவனுடைய செல்வத்தையும், வாகனங்களையும், பார்த்து அவனுடைய இல்லத்திற்கு ஆசாரியன் சென்று உள்ளங்கையில் நெல்லிக்கனி போல் கடவுளைக் காட்ட வேண்டும். "உள்ளவன் இல்லாதவனுக்குச் சோறு போட வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவன் புலப்படுவான்'' என்றாலோ, அதற்கு நம் செல்வச் சீமான் தகுந்த பதில் சொல்வார். "என்னய்யா! விவரம் தெரியாதவராயிருக்கிறீரே! நான் கஷ்டப்படும் போதெல்லாம் எனக்கு யாரைய்யா உபகாரம் செய்தார்கள், இரவும் பகலும் உழைத்துச் சம்பாதித்த கஷ்டம் எனக்குத் தெரியும். நீங்கள் இலவசமாய்ச் சொல்வதெற்கென்ன?'' என்பார். அவரவர்கள் செய்த புண்ணிய பாபமே அவர்களுடன் வரும்.

சித்தர்கள் இந்தப் புண்ணியபாபமென்ற பூத நிழலை எப்படி ஒழித்தனர்? எந்த மருந்தைச் சாப்பிட்டனர்? காயகல்ப மருந்துகள் சாப்பிட்டனரா?

மனிதன் அறிவு என்னும் பராபரத்தை அறிவதற்குள் மூப்பு, மரணம் வந்தடைந்து விடுகின்றன. இவைகளைத் தடுக்கச் சிறிய அளவுக்கே மருந்துகள் பயன் படுகின்றன. மரணத்தைத் தவிர்க்க மருந்து வெளியிலில்லை அது ஒவ்வொரு மனிதனுள்ளும் உள்ளது. இந்த மருந்தையே வள்ளலார் "எல்லாம் செய்யவல்ல மருந்து என்னுள் என்றும் விடாமல் இனிக்கும் மருந்து என்றும், "என்னைச் சித்தெல்லாம் செய்யச் செய்வித்த மருந்து'' என்றும் சொல்கிறார்.

இந்த மருந்தைத் திருமூலர் "நுரை திரை நீக்கி நுகர வல்லார்க்கு, நரை திரை மாறும் நமனும் அங்கில்லையே'' என்கிறார்.

இந்த மருந்து இருக்குமிடமெங்கே? அதை எப்படி நுகருவது? இவைகளை யாரிடம் கற்றுக் கொள்வதென்பது பின் கேள்விகள். இருக்குமிடம் தெரியாமல் நாம் அலைகிறோம். சட்டைப்பையில் பேனாவை வைத்துக்கொண்டு ஊரெல்லாம் தேடுபவனைப்போல் நாமுள்ளோம். உள்ள இடத்தைப் புத்தகக் கல்வியினாலோ, கேள்வியினாலோ, மேடைப் பிரசங்கங்கள் மூலமாகவோ, அறிய முடியாது. "கல்வியல்ல; கேள்வியல்ல கை காட்டும் காரணந்தான்'' என்றபடி அந்த இடத்தைக் காட்டும் சித்தன் நமக்குக் கிடைத்தாலன்றி நம் காலம் வீண் காலமாகிவிடு மென்பது திண்ணம். அந்த சித்தர்கள் காட்டும் வழியே பிரம்ம வித்தை யென்பர். அதையே தட்சிணா மூர்த்தி பெருவிரலையும், ஆள் காட்டி விரலையும் சேர்த்து ஒரு நொடியில் எல்லாம் உள்ளதெனக் காட்டுகின்றனர். அந்த பிரம்மவித்தையைக் கற்றுக் கொள்ளும் வரையில் அது பெரும் வித்தை தான். தெரிந்தபின் சிறுகாவித்தை. இந்த வித்தை உபதேசம் பெறக் கல்வி ஞானம் வேண்டியதில்லை. சொல்லப் போனால் வித்யா கர்வமுள்ளவனுக்கு அந்த வித்தை முயன்றும் கிடைக்காத வஸ்து. கல்வி யறிவில்லாதவனுக்கும் இந்த வித்தை உபதேசமான மறுநிமிடம் உண்மை யெதுவென்பது புலப்படும். உபநிஷத்துக்கள், வேதங்கள், கைவல்யம் முதலிய சாத்திரங்களிலுள்ள தத்துவங்கள் தானாகவே புலப்படும். வெறும் குப்பைகளைப் புரட்டிக் கொண்டும் அந்தக் குப்பைகளை மேடைப் பிரசங்கங்களில் ஒலித்துக் கொண்டும், அதைக் கேட்பவர்கள் அந்தக் குப்பையில் கொஞ்சம் மடியில் கட்டிக் கொண்டும் போவ

தைச் சித்தர்கள் வெகுவாகக் கண்டித்துள்ளனர்.

ஆயினும் பலர் இந்த சித்தர்கள் தத்துவம் மாயா ஜாலதத்துவமென்றும், ஏதோ அவர்கள் எழுதிப் போட்ட புத்தகங்கள் பயனற்றதென்றும், சமய சாத்திரங்களுக்கு மாறுபாடுடைய அர்த்தமற்ற வார்த்தைகளென்றும், சித்தர்களின் அரிய மொழிகளைப் புறக்கணித்துத் தாம் கண்ட காட்சியே தெய்வமென்றும் நடமாடுகிறார்கள். உண்மையை அறிய ஆண்டவன் அருள் பெறும் நோக்கத்தில் அவர்களுக்கு ஈடுபாடு இல்லாமையே இதற்குக் காரணம். ஆயினும் உண்மை அறிந்தவர்கள் போல் அங்குமிங்கும் சில செய்யுட்களை மனப்பாடம் செய்து கொண்டு மேடைகளிலேறி, இருளை இருளால் போக்க எத்தனித்த கதை போல் தம் காலத்தை வீண் காலமாக்குவதல்லாமல், கல்வியற்ற மக்களையும் தவறான வழிகளில் இழுத்துச் செல்கின்றனர். இவ்விதம் செய்வது குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போலாகும்.

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழி விழுமாறே"

என்னும் திருமந்திரச் செய்யுள் இங்குக் குறிப்பிடத் தக்கது.

"எவ்வகை சார் மதங்களிலே
பொய்வகை சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமது தெய்வம்
எமது தெய்வமென்று கைவகையே
கதறுகின்றீர்
தெய்வ மொன்றென்றறியீர்'

என்றும்;

"பொறித்த மதஞ்சமய மெலாம்
பொய்யேபொய்யே
அவற்றில் புகுதாதீர் சிவமொன்றே
பொருளெனக்
கண்டறிமின்"

என்றும் வள்ளலார் அறை கூவுகின்றார்.

இந்த இடத்தில் சிவம் என்பதற்குக் கல் உருவமாகிய லிங்கமென்று பொருளல்ல. சிவமென்பது சிதாகாசம் அதைக் கண்டு அறிய வேண்டும்.

இந்த சிதாகாசத்திற்கு ஒரு வாயிற் கதவு உண்டு. இதைத் திறந்த நிமிடமே சுத்தகங்கை என்னும் அமுது சொட்ட ஆரம்பிக்கிறது. இதை உண்ண ஆரம்பித்ததும் நாளடைவில் உடலெல்லாம் தேஜோமயமாகி நரைதிரைமாறி, இவ்வுலகப் பற்றுகளெல்லாம் உதிர்ந்து மெய் வழியில் மனம், காயம், ஈடுபாடடைந்து இந்த பூத உலகத் தோற்றங்களெல்லாக் மறைந்து சோதியில் லயித்து ஆனந்தமடைகிறான். நாளடைவில் இந்தப் பூத உடலுக்கும் அஷ்டமா சித்திகள் ஓங்குகின்றன.

கதவைத் திறப்பின் அமுதம் சொட்டுகிறதென்றோம். அந்தக் கதவை எப்படித் திறப்பதென்று சொல்ல வேண்டாமா! அந்தக் கதவைத் திறப்பதற்குச் சாவி வேண்டும் அந்தச் சாவி சித்தர்களிடத்தில் தானுள்ளது. அதை நேரில் தான் பெற வேண்டுமென்று மேலே சொன்னோம். இருப்பினும் சித்தர்கள் நூல்களில் அவைபற்றிக் காணப்படுவதை நாம் இங்குச் சொல்லுவோம்.

உஷ்ணத்தினால் காற்று சூடாகி ஆகாய மார்க்கத்தில் சென்று அங்குள்ள குளிர்ச்சியினால் வெப்ப ஆவி குளிர்ந்து மழையாய்ப் பரிணமிப்பது போல, நம் உள்ளிருக்கும் இரண்டு தாரைகளை (இடகலை பிங்கலை) பயன் படுத்தி, முதலில் அனலைச் சூரிய கலையால் சிதாகாசத்திற்கு அனுப்பி, பிறகு சந்திர கலையால் குளிர்வித்தால் அமுத தாரை சொட்ட ஆரம்பிக்கிறதென்று சொல்கிறார்கள். இதையே திருப்பாற் கடலைக் கடைந்து அமுதம் எடுத்ததாகக் கதைகளில் படித்திருக்கிறோம்.

(தொடரும்)

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சோழன் அவைக்குச் சென்ற கூரத்தாழ்வான் பெரியநம்பி முதலியோர்க்கு என்ன நேர்ந்தது என்று அறிந்துவரும்படி மாறொன்றில்லாச் சிறியாண்டானையும் அம்மங்கியம்மாளையும் உடையவர் அனுப்பியிருந்தார் என்று முன்னமே பார்த்தோமன்றோ? அவர்கள் விரைவாகவே சென்று ஆழ்வான் திருவடிகளை சேவித்து நடந்த வரலாறுகளையெல்லாம் முழு விவரங்களோடு அறிந்தனர். ஆழ்வானையும் நம்பிகளையும் கண் வாங்கிய கொடியனை சோழன், அவர்களை அவதூறு செய்த கண்டம் புழுத்து மாண்டான் என்ற செய்தியையும் தெரிந்து கொண்டார்கள். உடனே ஆழ்வானிடம் விடைபெற்று மீண்டும் விரைவாகத் திருநாராயணபுரம் சேர்ந்து உடையவர் திருவடிகளிலே கண்ணும் கண்ணீருமாய் எல்லாவற்றையும் கூறிச் சோழன் மாண்ட தன்மையையும் உரைத்தனர். ஆழ்வானுக்கு நேர்ந்த கதியையும் தம்மாசார்யரான பெரியநம்பிகள் திருநாடலங்கரித்தமையையும் கேட்ட உடையவர் மிகவும் சோகித்தார். அவர்களை அவமதித்த சோழன் எம்பெருமானால் தண்டிக்கப்பெற்றமையில் உடையவருக்கு ஒரு பெருமிதம். (அச்சோழனைப் புழுத்த கழுத்தன் (கிருமி கண்டன்) என்றே கூறுவர்) தம்தர்சனத்துக்குப் பெருந்தடையாய் நின்ற அக்கிருமிகண்டன் ஒழிந்தான் என்ற நற்செய்தி கொணர்ந்த சிறியாண்டானுக்கும் அம்மங்கியம்மாளுக்கும் என்ன கைம்மாறு கொடுப்பது என்று சிந்தித்தார் உடையவர். த்வயத்தின் பொருளைக் காட்டிலும் ஒருவன் பெறக்கூடிய மேலான பொருளில்லை என்று தெளிந்து அவ்விருவருக்கும் த்வயத்தை மீளவும் அருளிச் செய்தார்.

பின்னர் உடையவர், திருநாடலங்கரித்த தம்மாசார்யரான பெரிய நம்பிகளின் சரமச்லோகம் (இறந்த நாள் முதலிய கூறும் செய்யுள்) தம்முன் ஸமர்ப்பிக்கப்பெற்றதைக் கடாட்சித்தார். தம்மாசார்யருக்கு ஸ்ரீசூர்ணபரிபாலனம் பண்ணி ஸ்ரீ வைஷ்ணவர்களைத் திரளாகக் கூட்டி திருவத்யயனமும் (பிரபந்தங்களை ஓதல்) நடப்பித்து அப்பாகவதர்களின் ஸ்ரீபாத தீர்த்தமும் ஸ்வீகரித்துக் கொண்டார். அப்பாகவதர்கள் அனைவரையும் அமுது செய்வித்து அவர்கள் உண்டொழிமிச்சிலைப் 'போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே' எனக் கொண்டு மகிழ்ந்தார். பின்னர்பெரியநம்பி விஷயமாக

''கமலாபதி கல்யாண குணாம்ருத நிஷேவயா
பூர்ண காமாய ஸததம் பூர்ணாய மஹாத்மனே நம:''

என்ற சுலோகத்தையும் அருளிச்செய்தார்.

அக்கல்யாண தீர்த்தத்தின் கீழ்க்கரையிலிருந்த அழகிய சிங்கமூர்த்தியை உடையவர் மங்களாசாஸனம் செய்து அன்று 'எங்குமுளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்த' இரணியனை அங்கப்பொழுதே அவன் வீயத்தோன்றிய சிங்கப்பிரானல்லவா தேவரீர். அதேபோல் இன்றும் உம்முடைய பரத்வம் பேசியவரை அவமதித்த கிருமிகண்டனை நிரஸித்தீரே என்று தம் நன்றி தோன்றத் துதித்து மகிழ்ந்தார்.

விஷ்ணுவர்த்தனனைக் கொண்டு ஒரே முகூர்த்தத்தில் தழைக்காட்டில் கீர்த்தி நாராயணன் என்ற வாழ் புகழ் நாரணன், தொண்டனூரிலே லக்ஷ்மீகாந்தன் என்ற ஸ்ரீமந் நாராயணன், கதூகலத்தில் வீரநாராயணன், விஜயாபுரத்தில் விஜய நாராயணன், வேலூரிலே கேசவநாராயணன் என்ற பஞ்ச நாராயணப் பிரதிஷ்டை செய்வித்தார் என ராமாநுஜார்ய திவ்யசரிதை கூறும்.

சில காலம் சென்றவாறே 'அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள்' என்றபடி அரங்கனை மீண்டும் கண்ணாரக் கண்டுசேவிக்க வேண்டும் என்ற ஆர்வம், உடையவரை ஆட்கொண்டது. திருவரங்கத் திருப்பதி செல்லவேண்டும் என்று திருவுள்ளமானார் உடையவர். உடனே

திருவனந்தபுரதாஸரையும், ஸ்ரீமாலாகாரதாஸரையும் திருக்குறுங்குடிதாஸரையும், யதிராஜதாஸரையும் அழைத்தார். "செல்வப்பிள்ளை கிணற்றங்கரைப் பிள்ளையாயிருக்கும். அவரை மங்களாசாஸனத்துடனே எப்போதும் உங்கள் கண் வட்டத்தே வைத்து வணங்கி வாருங்கள்'' என்றருளிச் செய்தார். அவர்கள் உடையவர் தங்களை அங்கேவிட்டுப் பிரிய எண்ணுகிறார் என்பதைக் குறிப்பினில் உணர்ந்தவராய் அவர் திருவடிகளிலே விழுந்து தேவரீர் திருவடிகளைப் பிரிந்திருக்கத் தரியோம் என்று விண்ணப்பித்தனர். உடையவரும் அவர்கள் ஆர்வத்தை உகந்து 'மாறனடி பணிந்துய்ந்தவன்' என்றது தோற்றத் திருத்தோளில் மகிழம்பூ மாலையும், திருவாராதனத்துக்காகத் திருக்கைகளிலே சாத்திய உபயபவித்திரமும், கூப்பிய கரங்களோடு உலகுயிர்க்கெல்லாமாக நாராயணன் கழல் போற்றும் கோலத்தோடு பத்மாஸனத்தில் தாம் எழுந்தருளி யிருக்கும் நிலையில் தம்மைப் போல் அர்ச்சா விக்கிரகம் ஒன்று செய்வித்து அதிலே தம் திவ்ய சக்தியை ஏறியருளப்பண்ணி உங்கள் ஆசை நிறைவேற நாம் இங்கே எழுந்தருளியிருக்கிறோம் காணும் என்று அவர்களுக்கு அவ்விக்கிரகத்தை அளிக்க அவர்களும் மிகமகிழ்ச்சியுற்றவர்களாய் அதனை உடையவரைப் பெற்றது போன்றே மனமகிழ்ந்து ஏற்று வணங்கினர். உடையவர் அவர்களைக் கடாக்ஷித்து 'நல்வகையால் நமோ நாராயணா வென்று நாமம் பல பரவிப் பல்வகையாலும் பவித்திரனே உன்னைப் பல்லாண்டு கூறுதுமே'' என்றபடி செல்வப்பிள்ளையையும் திருநாராயணனையும் மங்களாசாஸனம் செய்து கொண்டு வாழுங்கள் என்று ஆசிர்வதித்தருளினார்,

பின்னர் எம்பெருமானார் திருநாராயணப் பெருமாள் ஸன்னிதியில் எழுந்தருளித் தெண்டனிட்டு நின்று 'ஸ்வாமீ! தேவரீர் நலந்திகழ் நாரணனாய்க் கோயிலிலே திருக்கண் வளர்ந்தருளுகிற நிலையிலே திருவடி தொழும் ஆர்வத்தனா யிருக்கிறேன். விடை தந்தருளவேண்டும் என்று வேண்டி நின்றார். திருநாராயணரும் 'சேலுகளும் திருவரங்கம் நம்மூர். உமதிஷ்டப்படியே அவ்விருப்பில் நம்மைத் திருவடி தொழ விடை தந்தோம்'' என்று விடை கொடுத்தருளினார். உடையவரும் கோயில் செல்லும் ஆர்வத்தராய்ப் புறப்பட்டார்.

அங்ஙனம் புறப்பட்டவர் அரங்கனைக் காண வேண்டும் என்னும் ஆர்வத்தாலே அதிவிரைவிலே சென்று காவேரி தீரத்தில் திருமுடித்துறைசேர்ந்து சற்றே இளைப்பாறத் தங்கினார். அப்பால் காவிரியில் நீராடித் திருமண் காப்பணிந்து முதலிகள் போற்ற எழுந்தருளியிருந்தார் உடையவர். எம்பெருமானார் மீண்டும் எழிலரங்கம் எழுந்தருளுகிறார் என்பதையறிந்த எழுமதில்வளாகத்தார் அனைவரும் எல்லையில்லா மகிழ்ச்சியுற்றவராய் எழுகடல் திரண்டது போன்று எம்பெருமானார் புகழ் பாடியவராய் அவரை எதிர்கொள்ள வந்து அவர் இணையடிகளிலே தெண்டனிட்டு இறும்பூதெய்தினர். உடையவர் அரங்க நகர் அடியார்களின் அன்பு மேலீட்டிலே பரவசராய் அவர்களையெல்லாம் ஆதரத்தோடு நோக்கி ஒவ்வொருவரையும் நலம் வினவினார். பின்னர் அனைவரும் புடைசூழ உடையவர் திருவரங்கம் பெரு நகரை நோக்கி எழுந்தருளிக் கோபுரதர்சனம் செய்து உள்ளே முதற்கண் எம்பெருமானது அபிமானம் அனைத்துக்கும் உரியளான ஸ்ரீரங்க நாச்சியாரைத் திருவடி தொழுதார். முந்தா உலகங்கள் எல்லாம் முறை முறையே தந்த உலக மாதாவை முறைப்படி எல்லாவகையிலும் உபசரித்து வணங்கி அங்கக் கைங்கர்ய ஸ்ரீயோடு அவர் புருஷகாரமாக அப்பங்கயத்தாள் திருவருளும் கொண்டு விடைபெற்று ஸ்ரீ பலிபீடத்தருகே ஸேவித்து ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளோடு பெரிய பெருமாள் ஸன்னிதி நோக்கி எழுந்தருளினர். மீண்டும் உடையவர் எழுந்தருளி விட்டார். இனி மாறன் தமிழும், மறை நூல் உண்மையும் பிரகாசிக்கும் என்று குதூகலித்த பெரியோர்கள்,

வையம் குருடன்றே மாமறை நூல்
பொய்யன்றே
ஐயன் உரைத்ததமிழ் ஆறிவார் —வையத்துக்கு
ஊன்று கோல் எந்தை எதிராசன் உத்தரித்த
மூன்று கோல் காண்பதற்கு முன்

என்று போற்றிப் பூரித்தனர்.

பிராட்டியின் திருவருளோடு எழுந்தருளிய உடையவர் திருமதிலை வணங்கி உள்புக்கு வளமாக வந்து விமானத்தைத் தெண்டனிட்டுப் பெரிய திருவடி திருவாசல் முதலிகள் அனுமதிபெற்று உள்

புக்குப் பெரிய பெருமாள் திருவடிவாரத்திலே தெண்டனிட்டு அரவணைக் கிடந்த அவ்வழகனது திருமேனியை அடிமுதல் முடியளவும் கண்ணாரச் சேவித்துத் திருப்பல்லாண்டு பாடி அப்பெருமானை மங்களாசாஸனம் செய்து ஆனந்தமேலீட்டால் தமமை மறந்து நின்றார்.

பெருமாளும் அவரை நோக்கி மிகவும் இடர்ப் பட்டீர் போலும் உடையவரே என்று வினவியருள, உடையவரும் "தேவரீர் திருவருளுக்கு இடர்ப்பாடு ஒன்றுண்டா. சயனித்திருந்த தேவரீர் நின்றெழுந்தருளித் திருநாராயணனகை அருளிய ஸேவை ஸேவித்து மகிழ்ந்தேன். தேவரீர் திருவடிகளின் திருக்காப்புக்கு இங்கே எவ்விதக்குறைபாடுமின்றியிருக்கவேண்டுமே என்ற ஒரு இடர்ப்பாடுதான் அடியோங்களுக்கு. அதுவும் எங்கள் உள்ளப்பிரிவின் முதிர்விலே எழுந்ததன்றியொன்றில்லை. தேவரீர் திருவடிக்காப்புக்குத் தீங்குநினைவார் "என்று மென்பிள்ளைக்குத் திமைகள் செய்வார் அங்ஙனமாவர்களே" என்று விஷ்ணுசித்தர் அருளியபடியே பட்டொழிந்தமை கண்டோம். "இனியென்ன குறைவினம" என்று மீண்டும் திருப்பல்லாண்டை அநுஸந்தித்துக் காப்பிட்டருளினார்.

அவரது பரிவுக்கு மகிழ்ந்த பரமன் உடையவருக்குத் தீர்த்தம் மாலை பரியட்டம் முதலியஅருளி அவரை நோக்கி 'உம்முடைய முக்கோலே நம் தனிக்கோலாகக் கொண்டு நம்முடைய ஸ்ரீகாரியங்களனைத்தையும் குறைவற நடத்தி வாரும்" என்று விடைகொடுத்தருள உடையவரும் பெரும் பேறு பெற்றேன் என உவந்து தம் திருமடம் நோக்கி எழுந்தருளினர்.

வழியிலே தம்மாசார்யன் பெரியநம்பிகள் திருமாளிகை வரலும், உடையவர் உள்ளே எழுந்தருளித் தம்மாசார்யன் வழக்கமாக எழுந்தருளும் இடத்தே தொண்டனிட்டு உள்ளம் கலங்கி நின்றார். ஸ்ரீபுண்டரீகரும் அத்துழாயம்மாளும் 'ஓ' வென்று கதறியவர்களாய் வந்து உடையவர் திருவடிகளிலே விழுந்து கிடந்தனர். உடையவர் அவர்களை எடுத்துத்தேற்றியருளிப்பின்னர்த்தம் மடத்துக்கு எழுந்தருளினர். உடையவர் மீண்டும் கோயிலுக்கெழுந்தருளினர் என்ற செய்தி கேட்டு நாற்றிசையிலுமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரு மகிழ்ச்சியோடு திரள் திரளாக வந்து உடையவர் திருவடிகளிலே தெண்டனிட்டு "உலகனைத்துக்கும் ஒருயிர் போன்ற தேவரீரை ஸேவிக்கப்பெற்றோமே" என்று ஆதரமிகுதியைத் தெரிவித்துக் கொண்டனர். உடையவரும் அவர்களைக் குளிரக் கடாட்சித்து ஒவ்வொருவரையும் தனித் தனி நலம்வினவியருளினர்.

(தொடரும்)

---

## செய்திச் சுருக்கங்கள் :

திண்டுக்கல் ஸ்ரீ காளத்தி ஈசுவரர் கோயிலில் ஸ்ரீ அருணகிரிநாதர் மூல நட்சத்திர விழா அபிஷேக அலங்கார சோடசோபசார தீபாராதனைகளுடன் சிறப்புற நடைபெற்றது. (2-7-66).

### கல்வெட்டுத் திறப்பு விழா

திருவாலங்கர்டு பழையனூர் ஸ்ரீ சாட்சிநாதேசுவரர் கோயில் மகா கும்பாபிஷேகம் 2-5-66 அன்று சிறப்புற நடந்தேறியது. சத்தியம் காப்பதற்காக உயிர்நீத்த சான்றோர்களாகிய பழையனூர் வேளாளர்களை வியந்து மூவேந்தர்களும் பாடிய பாடல்களையும், சென்னை உயர்நீதி மன்றத்தலைமை நீதிபதி உயர்திரு மா. அனந்தநாராயணன், ஐ.ஸி.எஸ். அவர்களின் பாடலையும் கொண்ட கல்வெட்டுத் திறப்பு விழா 25-7-66 அன்று சிறப்புற நிகழ்ந்தது.

---

# உள்ளுறை பொருள் ஆராய்ச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## 6. பொன்னப்பன் விசேஷார்த்தம்

ஆழ்வார்கள் எம்பெருமானைப் பொன்னாகவும் பேசி யநுபவிக்கின்றார்கள். "பொன்னப்பன் மணியன்" என்றார் நம்மாழ்வார். 'பொன்னை மாமணியை' 'பொன்னானாய்' என்றார் கலியன். 'பொருதுவருகின்ற பொன்னே!' என்றார் பெரியாழ்வார்.

1. இங்ஙனம் எம்பெருமானைப் பொன்னாகக் கூறுவதற்கு ஒரு பொருத்தஞ் சொல்லலாம்; அதாவது – "ஹேம்ந: கேதோ ந தாஹேநச் சேதேந கஷணேந வா – ஏததேவ மகத்து:க்கம் யத் குஞ்ஜா ஸமதோலநம்." என்றார் ஒரு மஹாகவி; பொன்னைத் தீயிலிட்டுச் சுடுகிறோம்; உரைகல்லிலேயிட்டுக் கனக்கவுரைக்கிறோம்: இன்னமெத்தனை ஹிம்ஸைகள் செய்யினும் அவற்றால் பொன் சிறிதும் வருந்தமாட்டாது; வருத்தமில்லையென்பது மாத்திரமேயன்று; அந்த ஹிம்ஸைகளெல்லாம் தனக்குப் பரமபோக்கியமே யென்பது தோன்ற ஒளியை மிகுத்தும் காட்டும்; பொன்னைத் தீயிலிட்டுச் சுடும்போதும் உளியிட்டு வெட்டும்போதும் உரைகல்லிலுரைக்கும்போதும் அதற்கு ஒளிமிகுதலைக் காண்கிறோமன்றோ. ஆனால் அந்தப் பொன்னுக்கு ஒரு வருத்தம் மாத்திரம் சாலவுண்டாம்;

அஃது என்னென்னில்; 'மிக அற்பமானதொரு குன்றுமணியோடொக்க நம்மை நிறுப்பதே!' என்பதே அதற்கு மிக்க வருத்தமாம். ஒரு திராசில் குன்றுமணியையும் மற்றொரு திராசில் பொன்னையுமிட்டு நிறுக்கக்காண்கிறோமன்றோ. 'பொன் என்று போற்றப்படுகின்ற நமக்குக் கடைகெட்ட குன்றுமணிதானோ ஈடாகவேணும்' என்று வருந்தி மிகவும் குன்றிப்போகாநின்றதாம். அதுபோல எம்பெருமானும், தூதனுப்பப்பெறுகை, தாம்பால் கட்டுண்கை முதலானவற்றால் சிறிதும் வருந்தான்; வருந்தாமை மாத்திரமேயன்று, அவற்றால் மிக்க முகமலர்ச்சியும் பெற்றிடுவான்; அப்படி யுண்டோவென்னில; 'இன்னார் தூதனென நின்றான்' என்றது கண்டீரே; 'இன்னார் தூதனெனப்பட்டான்' என்னாமல் 'இன்னார் தூதனென நின்றான்' என்கையாலே பாண்டவர்க்குத் தூது செல்லுகையாகிற இழிதொழில் செய்து பாண்டவ தூதனென்று பேர் பெற்ற பின்புதான் எம்பெருமானுக்குத் தரிப்பு உண்டாயிற்றென்பது விளங்கவில்லையா?

இனி, தாம்பால் கட்டுண்கையினால் முகமலர்ச்சி யுண்டானமை அறிந்தபடி யெங்ஙனே யென்னில்; பட்டர் திருக்கோட்டியூரிலெழுந்தருளி யிருக்கும்போது ஒரு ஸ்வாமி வந்து அடியேனுக்கு ஒருகால் திருவிருத்தம் பொருளளிச் செய்யவேணும்' என்று பிரார்த்திக்க, 'நம் பெருமாளைப் பிரிந்த துயரத்தினால் எனக்கொன்றும் சொல்லப்போகிறதில்லை, நஞ்சீயர் பக்கலிலே கேட்டுக்கொள்ளும், என்று சொல்லி நஞ்சீயருக்கு நியமிக்க, சீயரும் பொருளருளிச் செய்து வருகையில் "அடைக்கலத்தோங்கு கமலத்து" (86) என்ற பாசுரத்தில் "வெண்ணெய்க்கன்று ஆய்ச்சி வன்தாம்புகளால் புடைக்கலந்தானை" என்ற விடத்திலே 'புடைக்கு அலந்தானை' என்கிற பாடப்படியே "தாம்புகளால் கட்டியடிக்க வருத்தப் பட்டவனை" என்று நஞ்சீயர் பொருளுரைக்க, பட்டர் அது கேட்டு 'ஜீயா! 'அலந்தானை' என்ற பாடத்திற்காட்டிலும் அலர்ந்தானை' என்ற பாடம் ஆழ்வார் திருவுள்ளத்திற்கு மிகப் பொருந்தும் போலே தோன்றுகின்றது' என்றருளிச் செய்தாராம். அலந்தான் - வருந்தினவன். அலர்ந்தான் – முகவிகாஸமடைந்தவன் என்ற பொருள் வாசி காண்க. முகவிகாஸம் எங்ஙனே யென்னில்? கண்ணபிரான் வெண்ணெய் களவு செய்கிற தன்னை யசோதைப் பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகின்றாளென்று வீட்டிலுள்ள கயிறுகளைத் துண்டு துண்டாக அறுத்து வைத்துப் பின்பே களவு செய்யப் புகுவான். அவள் இவனை ஒரு கையிலே பிடித்துக் கொண்டு கயிறு தேட, அவை துண்டு துண்டாக இருப்பது கண்டு அவற்றை ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறு வடிவமாக்கிஅது கொண்டு கண்ணபிரானைக்

கட்டும் போது, இவன் தன் உடம்புக்கு எட்டம் போராதபடியான அக்கண்ணிநுண் சிறுந்தாம்பினுல் கட்ட முடியாதபடி எளிதில் தன்னைத் தப்புவித்துக் கொள்ள வல்லவனுயினும், தனது ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஆச்ரிதபாரதந்திரியம் முதலிய சிலங்களை வெளியிடுவதற்கென்றே பரத்வ நிலையைத் தவிர்ந்து மநுஷ்ய ஸஜாதீயனுக அவதரித்திருக்கிற தான் உரலோடு கட்டுண்டு அடியுண்டிருக்கை முதலான இவ்வகைகளாலேயே அக்குணங்களை விளங்கச் செய்து கொள்ள வேணுமென்று கொண்டு, ஒரு சுற்றுக்குப் போராத தாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும்படி உடம்பைச் சுருக்கி அமைத்துக் கொண்டு கண்ணிநுண் சிறுந்தாம்பினுல் 'கட்டுண்ணைப் பண்ணிய பெருமாயன்' என்னும்படி ஆவன். 'இங்ஙனே நம்முடைய ஸௌசீல்ய ஸௌலப்ய குணங்கள் விளங்கப் பெற்றேமே, அவதார ப்ரயோஜநம் நன்கு நிறை வேறப் பெற்றதன்றே' என்று முகமலர்ச்சியடைந்திடுவன் என்க. ஆகவே தூது அனுப்பப்படுதல் தாம்பாலாப்புண்டிருத்தல் முதலிய இழிவான காரியங்களினுல் எம்பெருமானுக்குச் சிறிதும் வருந்தமில்லாதிருத்தலோடு மிக்க மகிழ்ச்சியுமுண்டென்பது விளங்கிற்று.

பின்னை எதனுல் வருத்தமுண்டாமென்னில், பொன்னுக்குத் தன்னைக் குன்றுமணியோ டொக்க நிறுத்தல் எப்படி துःக்கஹேதுவோ, அப்படியே "ஒத்தார் மிக்காரையிலனுய மாமாயனுகிய எம்பெருமானுக்கும் அதிக்ஷுத்ரவஸ்துக்களான சில வற்றேடே தன்னை ஒப்பிடப் பெறுதலே துःக்க ஹேதுவாமென்பது "ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் புகழ் வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ" இத்யாதிகளாலுணரத்தக்கது. இவ்வகையாலே பொன்னேடொக்கச் சொல்லலாம் எம்பெருமானை.

2. பொன்னானது மண்ணில் கலந்திருந்தாலும் சேற்றில் அழுந்திக்கிடந்தாலும் உள்ளே மாசு ஏறப் பெறுது. எம்பெருமானும் ஹேயவஸ்துக்களோடே கூடியிருந்தாலும் மாசறு சோதியனேயாவன்.

3. பொன்னின் மதிப்புக்கு ஒருநாளும் குறைவில்லை. பொன்னகைகளுக்கு எக்காலத்திலும் ஏற்றமுண்டன்றே. எம்பெருமானுடைய மதிப்புக்கும் ஒருநாளும் கொத்தையில்லை. இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் கண்டு கொள்க.

## 7. வ்ருஷப விசேஷார்த்தம்

எம்பெருமானை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் 'ஆயரேறு' என்றும் 'ஆயர்கள் போரேறு' என்றும் வ்ருஷபமாகப் பேசுகிருர்கள். வ்ருஷபத்திற்கும் எம்பெருமானுக்குமுள்ள சில பொருத்தங்களை யீண்டுக் காட்டுகின்றேன்.

1. வ்ருஷபத்திற்கும் சரணங்கள் நான்கு; எம்பெருமானுக்கும் சரணங்கள் நான்கு. சரணம் என்பதற்கு, கால் என்றும் பொருள், செய்கை என்றும் பொருள். வ்ருஷபத்திற்குக் கால்கள் நான்கு என்பது உலகப்பிரசித்தம். எம்பெருமானுக்குச் செய்கைகள் நான்கு என்பது வேதாந்த ப்ரஸித்தம். நான்கு செய்கைகளாவன—ஸ்ருஷ்டி, ஸம்ரக்ஷணம், ஸம்ஹாரம், மோக்ஷப்ரதாநம் என்பனவாம். மோக்ஷப்ரதாநமென்பதைத் தனிப்பட்ட செயலாகவே கூறவேணுமென்பது நம் ஆழ்வாராசாரியர்களின் திருவுள்ளம். 'வீடாந்தெளிதருநிலைமைபதொழிவிலன்' என்ருர் நம்மாழ்வார். 'ஜகதுத்பவஸ்திதி ப்ரணாச ஸம்ஸாரவிமோசந' என்ருர் ஆளவந்தார்.

2. ஸவ்ருஷ ஸப்தவாச்யத்வம் வ்ருஷபத்திற்குமுண்டு; எம்பெருமானுக்குமுண்டு. "வ்ருஷோ வ்ருஷப தர்மயோः" என்பது நிகண்டு. வ்ருஷம் என்றுல் வ்ருஷபத்திற்கும் பெயர், தருமத்திற்கும் பெயர். ... "யே ச வேதவிதோ விப்ராः யே சாத்யாத்மவிதோ ஜநாः, தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்." என்றும், 'ராமோ விக்ரஹவாந் தர்மः' என்றும் எம்பெருமான் தருமமாகச் சொல்லப்பட்டனன். "தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப்பிறந்தவன் தானே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னைப்பற்று என்கையாலே ஸாக்ஷாத் தர்மம் தானே யென்கிறது" என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசாரியருடைய திவ்யஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம். ஆக, வ்ருஷ சப்த வாச்யத்வம் வ்ருஷபத்திற்கும் எம்பெருமானுக்கும் இணங்கியதாயிற்று.

—(தொடரும்)